


Scanned by CamScanner

விலை ரூபாய் ஏழு மட்டும்


☐ குகை மனிதன்

☐ ஆசிரியர் : சத்யா

☐ முதல் பதிப்பு : ஜூன் 6, 1993.

☐ ~~உரிமை : சரண்யா பப்ளிகேஷன்ஸுக்கு~~

☐ விலை ரூ. 7/–

☐ சரண்யா பப்ளிகேஷன்ஸ்,
1, குப்புசாமி தெரு,
தி. நகர், சென்னை – 17.

☐ அச்சிட்டோர் : M.L.M. பிரிண்டர்ஸ்,
36, ஆற்காடு ரோடு,
சென்னை – 24.



CS Scanned with CamScanner

Scanned by CamScanner

# குகை மனிதன்

சத்யா

குணா கரூர்

பாக்யா வெளியீடு

Scanned with CamScanner
Scanned with CamScanner
Scanned by CamScanner
Scanned by CamScanner



# 1

கலாச்சார பெருமை மிகுந்த ரோம் நகரத்தின் மையப் பகுதியில் 'தி கிரான்ட் பெஸாரியோ மருத்துவமனை'யின் தலைமை டாக்டரின் அறையில், அவருக்கு என்று உள்ள பிரத்தியோகமான ஃபோனில், லைட்னிங் காலில் வந்த ஒரு அவசரச் செய்தி, தலைமை டாக்டரை பரபரப்புக் குள்ளாக்கியது. டாக்டர் பதற்றத்தோடு கேட்டார்.

''மேடம் சோபியாவின் திராட்சைப் பண்ணையிலா? அந்த குகை மனிதனை யாராவது நேரில் பார்த்தார்களா? கற்பழிக்கப்பட்ட பெண்ணின் உடல் நிலை இப்பொழுது எப்படி இருக்கிறது? பயப்பட வேண்டாம். பத்து நிமிடத்தில் எங்கள் ஆம்புலன்ஸ்,

Scanned by CamScanner

மேடம் சோபியாவின் திராட்சைப் பண்ணைக்கு வந்து விடும்...''

அடுத்த இரண்டாவது நிமிடம், தி கிராண்ட் – பெஸாரியோ மருத்துவமனையின் பிரம்மாண்டமான வாசல் கதவு அவசரமாக திறக்க, ஒரு ஆம்புலன்ஸ், தன் தலையின் சிவப்பு வெளிச்சத்தை விசிறியடிக்க, சைரன் ஒலியுடன் சீறிக் கொண்டு புறப்பட்டது.

அப்போது –

மாலை நாலரை மணி சுமார் இருக்கும். இத்தாலியின் தலைநகரான ரோம் நகரம், ட்ராஃபிக் நெரிசலில் ததும்பி வழிந்து கொண்டிருந்தது.

ஆம்புலன்ஸ் வேகம் பிடித்து, கார் வரிசைகளை, போக்குவரத்து விதிகளை மீறி, இடது, வலது என்று பார்க்காமல் வளைந்து, நெளிந்து சென்றது. இருந்தாலும், **'கஸிலினா'** என்ற அந்த நெருக்கடியான பிரதான சாலையில் டிராஃபிக் ஒரேடியாக ஜாமாகி இருந்தது. ஆம்புலன்ஸ் எவ்வளவு நேரம் சைரன் அடித்தும், வழி கிடைக்கவில்லை. இரண்டு மூன்று போலீஸ் அதிகாரிகள், டிராஃபிக்கை ஒழுங்கு படுத்த குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்தனர்.

ஆம்புலன்ஸ் டிரைவர் அவசரமாக இறங்கி, அந்த போலீஸ் அதிகாரியை அணுகி, 'எப்படியாவது வழி ஒதுக்கித் தாருங்கள். விரைவாகப் போக வேண்டும்.'' என்று பணிவாகக் கேட்டார்.

எரிச்சலடைந்த அந்த போலீஸ் அதிகாரி,

''இதோ.. என் தலை மேல் ஏறிப் பறந்து போ.. அரை மணி நேரமாக நாங்கள் தலை முடியை பிய்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.. தி கிராண்ட் பெஸாரியோ மருத்துவமனை ஆம்புலன்ஸ் என்பதற்காக நான் தூக்கி வைத்துக் கொண்டா ஓட முடியும்?'' என்று கத்தினார்.

டிரைவர் விடுவதாக இல்லை.

''ஸார்.. **சோபியா மேடம்** அவசரமாக வரச் சொல்லி இருக்காங்க.. ப்ளீஸ்.. ஏதாவது பண்ணுங்க.. ''

டிரைவரிடம் கோபமாக பேசி விட்டு விரைவாக ஓடிக் கொண்டிருந்த அந்த டிராஃபிக் அதிகாரி, சட்டென்று நின்றார். திரும்பினார்.

''உண்மையாகவா? **சோபியா மேடம்** திராட்சைப் பண்ணைக்கா போய்க் கொண்டிருக்கிறீர்கள்..?''

''ஆமாம் ஸார்..''

அடுத்த விநாடி டிராஃபிக் அதிகாரி சுற்றும் முற்றும்



Scanned by CamScanner

பார்த்தார். வீதியின் முனையில் ஒரு புதிய கட்டிடம் பாதி வரை வளர்ந்து நின்றது. அதன் கட்டுமானப் பணிகளுக்காக தரையில் நீளமான தேக்குப் பலகைகள் நான்கைந்து கிடந்தன. டிராஃபிக் அதிகாரி சற்று தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தன் மோட்டார் பைக்கின் அருகில் சென்று, வயர்லெஸ் மூலம் தனது உதவியாளரிடம் ஏதோ அவசர அவசரமாக கூறினார்.

சில நிமிடங்களில் அந்த உதவியாளர்கள், அந்த தேக்குப் பலகைகளை சிரமப்பட்டு எடுத்துக் கொண்டு ஆம்புலன்ஸ் அருகில் வந்தனர். போலீஸ் அதிகாரி, அந்த அகலமான பலகைகளை ஆம்புலன்ஸ் நிற்கும் ரோட்டிற்கும், பிளாட்பாரத்திற்கும் பாலமாக வைத்தார். புத்திசாலியான டிரைவர் உடனே புரிந்து கொண்டார்.

ஸ்டியரிங்கை முழுவதுமாக அப்படியும், இப்படியும் திருப்பி, பின்னாலிருந்த இரண்டு கார்களின் முகப்பு லைட்டுகளை உடைத்து, 'ஸாரி' சொல்லிவிட்டு, மிகச் சாதுர்யமாக ஆம்புலன்ஸை அந்தப் பலகைகளின் மேல் ஏற்றி, அகலமான அந்த ப்ளாட்பாரத்தின் வழியாக கூடுமான வரை வேகமாக ஆம்புலன்ஸை ஓட்ட ஆரம்பித்தார்.

போலீஸ் அதிகாரி, அதே பலகையின் வழியாக தன் மோட்டார் பைக்கை ஏற்றிக் கொண்டு, ஆம்புலன்ஸுக்கு முன்னால் பைலட்டாக விரைவாகச் சென்றார். ஏறத்தாழ இரண்டு மைல்கள் டிராஃபிக் ஜாம் தாண்டியவுடன், ஆம்புலன்ஸை பிரதான சாலையில் இறக்கி விட்டு, டிரைவரின் காதருகில் வந்து,

**“என்னைப் பற்றி ஒரு வார்த்தை மேடம் சோபியாவிடம் சொல்லுங்கள்..”**

என்று மரியாதையோடு கூறினார்.

ஆம்புலன்ஸ் ரோம் நகரத்தின் பிரதான சாலையின் தென் கிழக்கு திசையில், மேடம் சோபியாவின் திராட்சை பண்ணையை நோக்கி பறந்தது.

ஒரு பசுமையான பள்ளத்தாக்கில் ஆம்புலன்ஸ் வழுக்கிக் கொண்டு சென்றது. சற்று உயரமான இடத்தில் ஒரு பிரம்மாண்டமான மாளிகை தெரிந்தது. அதன் சுற்றுப் புறங்களில் கட்டிடங்களே இல்லாத நிலையில், அது கண்ணைக் கவரும் வகையில் ஒரு பிரமிப்பை ஏற்படுத்தியது.

அதோடு, **'சாக்கோ'** என்ற நதியின் ஒரு கிளை நதி, அந்த அரண்மனை போன்ற கட்டிடத்திற்கு உள்ளே சென்று, மறு பக்கமாக வெளியே வந்து கொண்டிருந்தது.
ஆம்புலன்ஸுக்குள் புதிதாக வேலைக்கு சேர்ந்திருந்த ஒரு இளம் டாக்டர் அந்த அரண்மனையைப் பார்த்து

Scanned by CamScanner

அதிசயப்பட்டு, "இந்த அரண்மனை, அமெரிக்க நாட்டு கோடீஸ்வரர் யாராவது தங்கள் ஆடம்பரத்திற்காக கட்டியதா?" என்று கேட்டார்.

"இல்லை... அது, மேடம் சோபியாவின் பண்ணை வீடு.." என்று பெருமிதத்தோடு டிரைவர் பதில் சொன்னான்.

டிரைவர் பேசிக் கொண்டிருந்த பொழுதே திராட்சைத் தோட்டத்தின் ஒரு பகுதியில் ஆம்புலன்ஸ் நின்றது.

திராட்சை தோட்டத்தின் முகப்பில் இருபது முப்பது தோட்டத் தொழிலாளர்கள் கும்பல் கும்பலாக சூழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆம்புலன்ஸை பார்த்ததும் அவர்கள் வழி விட்டு ஒதுங்கினார்கள்..

டாக்டர் விரைவாக இறங்கி, கூட்டத்தின் மத்தியில் தரையில் அலங்கோலமாக படுத்திருந்த ஒரு பெண்ணைப் பார்த்தார்.

அந்தப் பெண்ணின் முகத்திலும் மார்பிலும் ரத்தக் கீறல்கள். அவளது கெட்டியான உடை தாறு மாறாக கிழிக்கப் பட்டிருந்தது. மூச்சு பேச்சில்லாமல் கிடந்தாள்..

டாக்டர் அவசர அவசரமாக பரிசோதனை செய்து பார்த்தார். அந்தப் பெண் இன்னும் சாகவில்லை என்று உறுதி செய்து கொண்டு ஒரு இன்ஜெக்ஷனை செலுத்தினார்..

பிறகு அமைதியாக சற்று தள்ளி வந்து நின்று, "இந்தப் பெண்ணை ஏதேனும் மிருகம் தாக்கியதா?" என்று தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து கேட்டார்.

அந்தத் தொழிலாளர்களில் வயதும், அனுபவமும் மிக்க மென்டோஸோ எனும் கிழவன், நிதானமாக டாக்டருக்கு அருகில் வந்தான்.

"இல்லை டாக்டர். இந்தப் பெண்ணை குகை மனிதன் தான் தூக்கிக் கொண்டு சென்றான்.. எவ்வளவோ சிரமப்பட்டு இரண்டு மணி நேரம் கழித்து பாஸ்டினோ குகைக்கு அருகில் இவளைப் பார்த்து காப்பாற்றி எடுத்து வந்தோம்."

"வாட் நான்சென்ஸ்! குகை மனிதனா? வீணான புரளிகளைக் கிளப்ப வேண்டாம். கரடி போன்ற ஏதாவது ஒரு மிருகமாக இருக்கலாம்."

"இல்லை டாக்டர். அவன் கரடியல்ல.. ஏனென்றால், ரொட்டித் துண்டுகளையும், பாலையும் கூட அவன் பண்ணை வீடுகளில் திருடிக் கொண்டு போயிருக்கிறான்.. அவனுக்கு வயது நூறு, நூற்றைம்பதுக்கு மேல் இருக்கும்..", மென்டோஸோ இப்படி கூறியதும் டாக்டர் கோபத்தோடு, "இதையெல்லாம்

Scanned by CamScanner



போலீஸில் ரிப்போர்ட் செய்தீர்களா?'' என்றார்.

"செய்தோம். போலீஸும் வந்தது. ஒரு முறை அந்த குகை மனிதனை துப்பாக்கியால் சுட்டார்கள். இருந்தாலும் அவன் தப்பித்து, பாஸ்டினோ குகைக்குள் ஓடி விட்டான். பாஸ்டினோ குகைக்குள் சிறிது தூரம்தான் போக முடியும். அதற்குப் பிறகு தண்ணீர் அங்கே பொங்கிப் பெருகுகிறது. அந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது. அந்த தண்ணீர் எங்கே போகிறது என்பதும் தெரியவில்லை. இந்த குகை மனிதன் அந்த தண்ணீருக்குள் பாய்ந்து, மறைந்து விடுகிறான். அதற்கு மேல் தைரியமாக அவனை பின் தொடர யாருக்கும் துணிச்சல் இல்லை. அந்த பாஸ்டினோ குகை கடல் வரை துளைத்துக் கொண்டு போகிறது என்கிறார்கள்'' மென்டோஸா கிழவனின்பேச்சை இடைமறித்த

Scanned by CamScanner

டாக்டர்,

"பாஸ்டினோ குகை மர்மமானது என்பது எனக்கும் தெரியும். ஆனால் அதை பயன்படுத்திக் கொண்டு யாரோ ஒரு கிரிமினல் இப்படி பெண்களின் கற்பை சூறையாடிக் கொண்டு, திருட்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். அவனைப் போய் குகை மனிதன், கூன் விழுந்தவன், நூறு வயதை தாண்டியவன் என்றெல்லாம் கதை விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்."

என்று கேலியாக கூறினார். மென்டோஸா தன் நீளமான மீசையை மெதுவாக தடவி விட்டுக் கொண்டே, "நீங்கள் எல்லாம் பெரிய டாக்டர்.. நெறைய படிச்சவங்க.. உங்ககிட்டே நான் வாதம் பன்றதா நெனைக்க வேண்டாம்.

நம்ம ரோம் நகரத்தை உண்டாக்கின ரோமுலஸ், ரீமஸ் பத்தி உங்களுக்கு நான் சொல்லணும்னு இல்லே.. அந்த ரெண்டு பேரும் காட்டுல ஓநாய்கிட்ட பால் குடிச்சு



கலாச்சார பெருமை மிக்க ரோம் நகரத்தை ரீமஸ், ரோமுலஸ் என்ற இருவர் தான் உருவாக்கினார்கள். அந்த இருவரும் அரச குடும்பத்திற்கு ஆகாதவர்கள் என்று காட்டில் வீசி எறியப்பட்டவர்கள். அந்த இரு பச்சிளங் குழந்தைகளின் மேல் இரக்கப்பட்ட ஒரு ஓநாய், அந்தக் குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்த்ததாக சரித்திரம் கூறுகிறது. அதன் நினைவுச் சின்னமாக இன்றும் ரோம் நகரத்தில் ஓநாய் மடியில் குழந்தைகள் பால் குடிப்பதைப் போன்ற அற்புத சிலையை வைத்திருக்கிறார்கள்.

Scanned by CamScanner

வளர்ந்தவங்கங்கற சேதியை நாம் மறுக்க முடியுதா? இன்னைக்கும் ரோம்ல அந்த சிலையை வெச்சிருக்கோமே.. அதெல்லாம் வீண் புரளி, கதைன்னு ஒதுக்க முடியுமா? அது மாதிரிதான் குகை மனிதன் சமாச்சாரமும்"

என்று நிதானமாக, அழுத்தமாக கூறிய வார்த்தைகள் டாக்டரையே கொஞ்சம் சிந்திக்க வைத்தது.

இவ்வளவு பரபரப்பான சூழ்நிலையில் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல், அந்தத் தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் ஒரு இளைஞன் மட்டும் திராட்சைக் கொத்துக்களை கூடையில் சேகரித்து வைத்தப்படி, தன் வேலையிலேயே கவனமாக இருந்தான்.

அவன் பெயர் ஆண்டனி. ரோம் நாட்டு சிற்பங்களை நினைவூட்டும் உடற்கட்டு! நல்ல உயரம். பார்வையில் ஏதோ ஒரு சிந்தனையின் ஏக்கம். மற்றவர்களுடன் ஒட்டாத சுபாவத்தை கண்காணித்த ஒரு தொழிலாளி, மொன்டோஸா தாத்தாவின் அருகில் வந்து,

"தாத்தா அந்த ஆண்டனியை கவனிச்சீங்களா? இவ்வளவு பரபரப்பு இங்கே நடந்துட்டிருக்கு.. அவன் எதுலேயும் அக்கறை இல்லாம ஒதுங்கி இருக்கானே! அவனைப் பார்த்தா எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு" என்றான்.

மென்டோஸா அந்த தொழிலாளியை மெதுவாக அருகில் அழைத்து அவன் காதில்,

"நீ நெனைக்கறது சரிதான். அந்த ஆண்டனி இங்க வந்து சேர்ந்து ரெண்டு மூணு மாசம்தான் ஆகுது.. அவனது பூர்வீகம், பொறப்பு, வளர்ப்பு எதையுமே அவன் யார்கிட்டேயுமே சொன்னதில்லை. இன்னொன்னு தெரியுமா? அவன் இடது காலை உத்துப் பார்த்தா தெரியும். துப்பாக்கி குண்டு பட்ட ஒரு துவாரம் இருக்கும். "

மென்டோஸா கிழவன் இப்படி கூறி முடித்த பொழுது அந்த திராட்சைத் தோட்டத்தின் பசுமையான பள்ளத் தாக்கின் வளைவில், குதிரைகளின் குளம்பொலி சத்தம் கேட்டது.

ஒரு வளைவிலிருந்து ஆறு அராபியக் குதிரைகள் பூட்டிய அந்த சாரட், கோலாகலமாக வந்து கொண்டிருந்தது. மதர்ப்பான அந்த குதிரைகளின் வாயில் நுரைத் தள்ளிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், வெகு வேகமாக அந்த சாரட் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அந்த சாரட்டின் வேலைபாடுகள், ஒரு கோயிலின் சிற்பத்தைப் போல் வெகு நேர்த்தியாக, நுணுக்கமாக இருந்தது. தந்தத்தாலும், தேக்காலும், சில இடங்களில்

Scanned by CamScanner

பளபளப்பான விலையுயர்ந்த கற்களாலும் அமைக்கப்பட்ட அந்த சாரட், மாலை நேரத்து சூரிய ஒளியில் திடீர் திடீரென்று அங்கங்கே பிரகாசித்து, ஒரு நட்சத்திர ஜொலிப்பை ஏற்படுத்தியது.

அந்த சாரட்டைப் பார்த்ததும்,

"மேடம் சோபியா வர்றாங்க. ஒதுங்கி நில்லுங்க. அந்த ஆம்புலன்ஸை கொஞ்சம் அந்தப் பக்கமா எடுக்கச் சொல்லுங்க. அம்மையார் ஏதாச்சும் கேட்டா ஆளாளுக்கு தப்பும் தவறுமா பதில் சொல்லாதீங்க.. மென்டோஸா தாத்தா மட்டும் பொறுப்பா பதில் சொல்லட்டும்"

என்று தோட்டத் தொழிலாளர்கள் பரபரப்புடன் பேசிக் கொண்டனர்.

சோபியா மேடம் வரும் இந்த நிலையில் கூட அந்த ஆண்டனி அலட்டிக் கொள்ளாமல் தன் வேலைகளை ஏதோ ஒரு யோசனையுடன் செய்து கொண்டிருந்தான்.

சாரட் திராட்சைத் தோட்டத்தின் முகப்பில் வந்து நின்றது.

மென்டோஸா தாத்தா பணிவோடு ஓடிச் சென்று, அந்த சாரட்டின் கதவை மரியாதையோடு திறந்து விட்டார்.

சாரட்டிலிருந்து ஒரு ரோஜாப்பூ 'வெண் முகிலை ஆடையாக உடுத்திக் கொண்டதைப் போல, அழகு மிகுந்த ஒரு சின்னப் பெண் இறங்கினாள்! ஆம்புலன்ஸுக்கு அருகில் இருந்த புதிய டாக்டர், தன் பக்கத்திலிருந்த ஒருவரிடம் மெதுவாக கேட்டார்.

"யார் இவங்க? சோபியா மேடத்தோட பேத்தியா?"

"இல்லே. இவங்க தான் சோபியா மேடம்!"

டாக்டர் வியப்போடு அந்த சோபியாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். நம்ப முடியாமல்,

"சோபியா மேடம் என்று சொல்கிறீர்களே.. இந்த பெண்ணிற்கு கல்யாணம் ஆகி விட்டதா?"
என்றார்.

"அது ஒரு சோகமான கதை! ரெண்டு வயசுல இவங்களுக்கு ஒரு பெண் குழந்தை கூட இருக்கு.. சோபியா மேடம் இப்ப விதவைதான்!"

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஆண்டனி சட்டென்று திரும்பி, சோபியாவை தீர்க்கமாக பார்த்தான். அவன் பார்வையில் பல அர்த்தங்கள் இருந்தன.

சோபியா சாரட்டிலிருந்து இறங்கி, அவசரமாக

Scanned by CamScanner

பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு அருகில் வந்தாள்.

"ஏன் டிலே பண்றீங்க? எவ்வளவு செலவானாலும், இந்தப் பெண்ணை எப்படியாவது காப்பாத்துங்க.. என் தோட்டத்துல வேலை செய்யற ஒரு பொண்ணுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா அதை என்னால தாங்க முடியாது.

ஏதாவது கிடைக்காத மருந்துன்னா உடனே என் கிட்ட சொல்லுங்க.. அது எந்த நாட்டுல இருந்தாலும், ஃப்ளைட்ல வரவழைச்சுக் கொண்டு வரச் சொல்றேன்.."

டாக்டர், சோபியாவுக்கு பணிவாக வணக்கம் செலுத்தி விட்டு அருகில் வந்து,

"இந்தப் பெண்ணோட நிலைமை மோசமாத்தான் இருக்கு மேடம். நான் இன்ஜெக்ஷன் போட்டிருக்கேன். எங்களால முடிஞ்ச அளவுக்கு முயற்சிக்கிறோம்.

இருந்தாலும், அபாய கட்டத்தை தாண்டறதுக்கு இன்னும் பன்னிரெண்டு மணி நேரம் ஆகும்."

என்று கூறிக் கொண்டே அப்பெண்ணை ஸ்ட்ரெச்சரில் வைத்து ஆம்புலன்சில் ஏற்றி, சோபியாவிடம் பணிவாக வணக்கம் செலுத்திவிட்டு புறப்பட்டார்.

சோபியா வந்த போது அத்தனைத் தோட்டத் தொழிலாளர்களும் ஓடி வந்து பணிவாக வணக்கம் செலுத்திய போது கூட அந்த ஆண்டனி, சோபியாவை மதித்ததாகவே தெரியவில்லை!

ஆனால் சோபியா சாரட் வண்டியில் ஏறப் போகும் போது சட்டென்று ஏதோ யோசனை வந்தவளாக திரும்பி,

"ஆண்டனி.. நீ மட்டும் இங்கே வா! உன்னிடம் கொஞ்சம் தனியாக பேச வேண்டும்" என்றாள்.

ஆண்டனி நிதானமாக திராட்சை கூடையை கீழே இறக்கி வைத்துவிட்டு, சோபியாவை நோக்கி கம்பீரமாக நடந்து போனான்.

மென்டோஸா தாத்தா தன்னருகில் இருந்த ஆளிடம், "என்ன திமிர் பார்த்தியா அவனுக்கு! மேடம் சோபியா சுண்டு விரல் அசைச்சா பெரிய பெரிய ஆபீஸ் அதிகாரிங்கள்லாம் கையை கட்டிட்டு ஓடிவருவாங்க..

இதை விட பயம் எனக்கு என்னன்னா, இவனால நம்ம மேடம் சோபியாவுக்கு ஏதாவது ஆபத்து வந்துடுமோன்னுதான் அச்சப்படறேன்.." என்றான்.

தன் அருகில் வந்த ஆண்டனியை மேலிருந்து கீழாக சோபியா சந்தேகத்தோடு ஒரு பார்வை பார்த்தாள். பிறகு தாழ்ந்த குரலில்,

Scanned by CamScanner

"என் குழந்தை லீனா மேலே நான் உயிரையே வச்சிருக்கேன்.. நான் உயிர் வாழ்றதே அவளுக்காகத்தான்.

அவளுக்கு வேடிக்கைக் காட்டறதுக்காக இந்தியாவிலிருந்து யானைக் குட்டி வாங்கி வந்திருக்கேன் தெரியுமா? ஆஸ்திரரேலியாவிலிருந்து கங்காரு கூட கொண்டு வந்திருக்கேன்...

லீனா அதையெல்லாம் விட்டுட்டு நீ வந்தாத்தான் சாப்பிடறேங்கறா. நீ ரொம்ப அதிகமா அவளுக்கு செல்லம் குடுக்கறே. இன்னும் சொல்லப் போனா,

என் குழந்தை என்னைவிட உன் மேல அதிக பாசம் வெச்சுடுமோன்னு பயப்பட்றேன். என்னால அதை தாங்க முடியாது." என்று கூறிவிட்டு,

சோபியா சாரட்டில் ஏறும் போது திராட்சைத் தோட்டத்தின் மேனேஜர் அவசர அவசரமாக இரண்டு லெட்ஜர்களை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்.

"அவசரமாக இரண்டு கையெழுத்து வேண்டும்" என்று கேட்க, சோபியா கையெழுத்து போட்டாள்.

திராட்சைத் தோட்டம் சம்மந்தப்பட்ட சில விபரங்களை மேனேஜர் மளமளவென்று கூறினார். எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டிருந்த சோபியா,

"இதெல்லாம் அவ்வளவு முக்கியமில்லை.. ஆஸ்பத்திரிக்கு போன அந்தப் பெண்ணுக்குத் தேவையானதை உடனே கவனிச்சு செய். மத்த விபரம் எதுவும் சொல்லாதே.. என் மனசுல இப்போ நிக்காது"

என்று கூறி விட்டு சாரட்டில் ஏறினாள். ஏறத்தாழ சூரியன் மறையும் நேரம்!

பனி மூட்டம் மிகுந்திருந்தது. சாரட் வண்டி வேகம் பிடித்து அந்தப் பள்ளத்தாக்கின் ஒரு வளைவில் திரும்பியது.

தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் சாரட்டை நோக்கியபடி திராட்சைத் தோட்ட முகப்பில் இருந்தார்கள்.. அப்போது 'வீல்' என்று சோபியா அலறும் சத்தம் கேட்டது!

"குகை மனிதன்.. குகை மனிதன்.. காப்பாற்றுங்கள்.."

என்று சோபியாவின் தீனமான அலறும் குரல் கேட்டது.

அதிர்ச்சியடைந்த அத்தனைத் தொழிலாளர்களும் அவள் குரல் கேட்ட திசை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்..

ஒரே தாவலில் கூட்டத்தை முந்திக் கொண்டு ஓட ஆரம்பித்தான் ஆண்டனி!

Scanned by CamScanner

**2**

# சோ

பியா மேடம் அபயக் குரல் கொடுத்த இடத்தை நோக்கி அத்தனை தோட்டத் தொழிலாளர்களும் ஓடிப் போய் பார்த்த போது, சாரட் வண்டி தலைகுப்புற விழுந்து கிடந்தது. சாரட் வண்டியை ஓட்டிய வண்டிக்காரன் 'குய்யோ முறையோ' என்று கத்திக் கொண்டிருந்தான்.



வண்டிக்காரன் பயத்தோடு திக்கித் திணறியபடி கண்களில் மிரட்சி பொங்க,

"பாதையின் குறுக்கில் திடீர்னு கரடி மாதிரி ஏதோ ஒண்ணு வந்தது. வேகமா போய்ட்டிருந்த குதிரைங்க அதைப் பார்த்து மிரண்டு துள்ள ஆரம்பிச்சது. அந்த சமயத்துல இருட்டுல கரடி மாதிரி இருந்த அந்த உருவம் திடீர்னு சாரட் மேலே தாவி ஏறிச்சு" என்று நிறுத்தி நிறுத்தி தடுமாறி விஷயத்தை சொன்னான்.

ஆண்டனி, ஒரே தாவலில் குடை சாய்ந்திருக்கும் சாரட் வண்டியின் கதவுகளைத் திறக்க ஆரம்பித்தான். உள்ளே உடல் நடுங்க, ஏறத்தாழ பாதி நினைவிழந்த நிலையில் சோபியா உருண்டு கிடந்தாள்! அவள் தலையில் அடிப்பட்டு ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பதறிப் போன ஆண்டனி, ஓடிச் சென்று அவளைத் தூக்க முயன்றான்.

பயத்தின் எல்லையிலிருந்த சோபியா, ஒரு மனிதன் தனக்கு ஆதரவாக வந்ததைப் பார்த்து நடுநடுங்கியபடியே ஒரு குழந்தை போல் ஆண்டனியை கட்டிப் பிடித்துக் கொண்டாள். அந்தச் சின்னப் பெண்ணின் ஒட்டுமொத்த உடலும் அடிபட்ட ஒரு பறவையைப் போல குலுங்கிக் கொண்டிருந்தது. ஆண்டனி ஒரு தோட்டத் தொழிலாளி என்பதை மறந்தான்!

**அவனது ஆண்மை, அவளுக்கு ஆறுதல் கொடுக்கும் வகையில் அவள் முதுகை ஆதரவாக தட்டிக் கொடுக்கவே செய்தது!**

Scanned by CamScanner



இந்த நிலையில் மென்டோஸா தாத்தாவின் குரல் உரக்க கேட்டது.

"அதோ.. அதோ. அந்த கல் குடிசை மறைவில் குகை மனிதன் போய்க் கொண்டிருக்கிறான். எல்லோரும் ஓடி வாருங்கள். அவனை பிடித்து விடலாம்.."

என்று குரல் கொடுத்தார்.

மென்டோஸா தாத்தா குரல் கொடுத்த திசையை தோட்டத் தொழிலாளர்கள் உற்றுப் பார்த்தனர். அந்த பசுமையான பள்ளத்தாக்கின் மரங்களடர்ந்த பகுதியில் கற்களால் ஆன ஒரு குடிசை போன்ற அமைப்பு தென்பட்டது. மிகப் புராதனமான இந்த கற்குடிசைகள் ரோம் நாட்டின் சில பகுதிகளின் பழங்காலச் சிறப்பை விளக்குவதாக இன்றும் அமைந்திருக்கின்றன.

இதைக் கேட்ட அடுத்த வினாடி ஆண்டனியும் அந்த குகை மனிதனைப் பிடிக்க வேகத்தோடு மேலே எழுந்தான். ஆனால் சோபியா இரண்டு முறை உலுக்கி, உலுக்கி பயத்தில் உடல் முழுவதும் குலுங்க, ஆண்டனியை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

மென்டோஸா தாத்தாவும், மற்றவர்களும் கையில் கிடைத்த தடி, கம்புகளுடன் ஓட, சிலர் கற்களையும் எடுத்துக் கொண்டு அந்த குகை மனிதனை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். எல்லோரும் பெருங் குரலெடுத்து ஆர்ப்பாட்டம் செய்தபடி அந்த குகை மனிதனை துரத்த ஆரம்பித்தார்கள்.

இருட்டோடு இருட்டாக அந்த குகை மனிதன் விரைவாக ஓட ஆரம்பித்தான். அவனது முன்னங் கைகளிரண்டும் சில நேரத்தில் நிலத்தில் பட்டும் படாமலும் நாலு கால் பாய்ச்சலில் அவன் ஒவ்வொரு புதராக மறைந்து மறைந்து ஓடுவது தெளிவாக தெரிந்தது.

ஏறத்தாழ ஒரு ஃபர்லாங் தூரம் ஓடிய போது தோட்டத் தொழிலாளர்கள் அந்த குகை மனிதனை நெருங்கி விட்டார்கள். இன்னும் சில கஜ தூரங்களில் எல்லோரும் சேர்ந்து அந்த குகை மனிதனை சூழ்ந்து கொண்டு விடுவார்கள் என்ற நிலமை ஏற்பட்டது. அப்போதுதான் எதிர்பாராத அந்த திருப்பம் ஏற்பட்டது.

Scanned by CamScanner



நாலு கால் பாய்ச்சலில் தாவித் தாவி ஓடிக் கொண்டிருந்த அந்த விசித்திரமான உருவம், திடீரென்று தன் ஓட்டத்தை நிறுத்தித் திரும்பியது.

ஒரு விதமாக ஊளையிட்டபடி தன் உடலை ஒரு முறை சிலிர்த்தது. பிறகு, கூட்டத்தினரை எதிர்த்து ஓடி வர ஆரம்பித்தது!

இதைத் தோட்டத் தொழிலாளர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'உர்... உர்...' என்று உறுமியபடி அந்த அதிதமான மனிதன், தன்னைத் துரத்தி வரும் கூட்டத்தை எதிர்க்கத் திரும்பிய போது, பாதி பேர் பயத்தில் துரத்துவதை நிறுத்தி, ஸ்தம்பித்து நின்றார்கள்.. மீதி பேர் 'அடுத்து என்ன நடக்குமோ?' என்ற அச்சத்தில் சிதறி ஓட

Scanned by CamScanner

ஆரம்பித்தார்கள்.

மற்றவர்கள் இப்படி ஓட ஆரம்பித்ததும், ஸ்தம்பித்து நின்றவர்களின் தைரியமும், நிலைகுலைந்து போனது. அவர்களும் தற்காப்பு உணர்ச்சி மனதில் எழ, குகை மனிதனின் தாக்குதலில் இருந்து தப்பித்தால் போதும் என்று திசைக்கொருவராக 'ஐயோ, அம்மா' என்று கத்திக் கொண்டு தலை தெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

"ஐயோ.. என் பக்கத்துல அந்த குகை மனுஷன் வந்துட்டான்!"

"என்னை கடிச்சுக் குதறுவான் போலிருக்கு. காப்பாத்துங்க.."

"ஐயையோ.. அவன் தாவித் தாவி என்னைப் புடிச்சிருவான் போலிருக்கு.."

என்ற தீனமான குரல்கள் ஆண்டனியின் காதுகளிலும் ஒலிக்க ஆரம்பித்தது.

நிலைமையை ஒருவாறு ஆண்டனியும் புரிந்து கொண்டான். துரத்திச் சென்ற அத்தனை தோட்டத் தொழிலாளர்களையும் எதிர்த்து ஆக்ரோஷமாக அந்த குகை மனிதன் வந்து கொண்டிருக்கிறான்.

சோபியா மேடத்தை சாரட் வண்டியோடு ஏதோ ஒரு குறிக்கோளோடு தாக்கிச் சாய்த்தவன், வெறி கொண்டு மீண்டும் எதிர்த்துத் திரும்பி வந்து கொண்டிருக்கிறான். இந்த நிலையில் குகை மனிதன் மீண்டும் சோபியா மேடத்தை தாக்க வர வாய்ப்புண்டு. அது வரை பொறுத்திருந்து செயல்படுவதை ஆண்டனியின் ஆண்மை அனுமதிக்கவில்லை.

அவனை கட்டித் தழுவிக் கொண்டிருந்த சோபியாவின் கைகளை மெதுவாக விலக்கி விட்டுக் கொண்டான். நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு மேலே எழுந்தான். விழுந்து கிடக்கும் சாரட் வண்டியை, கையை ஊன்றி ஒரே தாவலில் குதித்துத் தாண்டினான்.

அப்போது, தரையில் கிடந்த சாரட் வண்டியோட்டும் குதிரை சவுக்கு அவன் கண்ணில் பட்டது.

அதை, ஓடும் வேகத்திலேயே காலால் எத்தி மேலே தூக்கி, லாவகமாக கையில் பற்றிக் கொண்டான். இப்போது ஆண்டனியின் பார்வையில் தோட்டத் தொழிலாளர்கள் ஆளுக்கொரு திசையாக ஓடுவது தெரிந்தது.

அந்த குகை மனிதன் மட்டும் உறுமியபடி புதர்களுக்கிடையில் வந்து கொண்டிருந்தான். ஒரு அபலைப் பெண்ணுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்ற

Scanned by CamScanner

நம்பிக்கை, ஆண்டனியின் நெஞ்சில் ஒரு அசுரத்தனமான வீரத்தை ஏற்படுத்தியது. தனி ஒருவனாக அந்த குகை மனிதனை எதிர்கொண்டு துணிச்சலாக நடக்க ஆரம்பித்தான், ஆண்டனி !

எல்லோரும் சிதறி ஓடும் நிலையில் ஒரே ஒரு மனிதன் மட்டும் தன்னை நோக்கி துணிச்சலாக நடந்து வருவது, அந்த குகை மனிதனுக்கு ஆரம்பத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கொடுத்தது. பிறகு அது அச்சமாக மாறியிருக்க வேண்டும்.

எதிர்த்து ஓடி வந்து கொண்டிருந்த அந்த குகை மனிதன், சற்று தயக்கத்தோடு நின்றான். ஆண்டனி தன் கால்களை ஸ்திரமாக நிலத்தில் பதித்தப்படி ஆண்மையோடு முன்னேறினான் !

அதைக் கண்காணித்த குகை மனிதன், என்ன நினைத்தானோ தெரியவில்லை... திடீரென்று ஒரு புதர் மறைவில் தன்னை மறைத்துக் கொண்டான்.

ஆண்டனியின் நிதானமான நடை இப்போது ஒரு வேங்கையின் ஆரம்ப ஓட்டமாக மாறியது. இதைத் தெரிந்து கொண்ட அந்த குகை மனிதன், புதருக்குப் புதர் மறைந்து மறைந்து தாவித் தாவி ஓட ஆரம்பித்தான். அடிக்கடி தான் ஓடும் திசையையும் மாற்றி, மாற்றி பாவ்லா காட்ட ஆரம்பித்தான்.

ஏறத்தாழ அரை மைல் தூரத்தில் தண்ணீரும், இருட்டும் பொங்கும் அந்த பாஸ்டினா குகை இருந்தது..

அப்படியும் இப்படியும் திசை மாறி ஓடும் அந்த விசித்திர மனிதன், எப்படியும் இறுதியில் அந்த குகையில்தான் பாதுகாப்பாக ஓடி மறையப் போகிறான். எனவே, இப்போது அந்த குகை மனிதனை துரத்துவதைவிட, குறுக்கு வழியில் பாஸ்டினா குகை வாயிலில் சற்று இருட்டான இடத்தில் மறைந்து இருந்து கொண்டால், பிடித்துவிடலாம் என்று புத்திசாலித்தனமாக ஆண்டனி திட்டமிட்டான்.



அவனது வேகத்தின் விரைவால் அந்த மர்மமான குகையை வெகு சீக்கிரத்திலேயே நெருங்கி விட்டான்.

இருட்டில் அந்த மர்மமான குகையின் நுழைவாயிலைப் பார்த்த போது ரோம் நாட்டின் மிலன் நகருக்குப் பக்கத்தில்

Scanned by CamScanner

பொமார்ஜோவின் 'பூதப் பூங்கா' வில் ஒரு முறை தான் பார்த்த அபூர்வ மிருகத்தின் தலையமைப்பு கொண்ட பழங்கால சிற்ப வடிவம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

15ம் நூற்றாண்டில் 'விஸினோ' என்ற வினோதமான சிற்பி அதை செய்ததாக அந்த பூங்காவின் வழிகாட்டி சொன்னது, ஆண்டனிக்கு இன்னும் நினைவில் இருந்தது.

ஆனால் இந்த பாஸ்டினா குகையின் நுழைவாயில், எந்த சிற்பியும் செதுக்காமலேயே இயற்கையிலேயே ஒரு பூதத்தின் வாய் பிளந்த தோற்றத்தைப் போல அமைந்திருந்தது, ஆண்டனிக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அதே சமயம், நேரான வழியில் வந்து கொண்டிருக்கும் அந்த குகை மனிதன் இந்த பாஸ்டினா குகையின் நுழைவாயிலை இவ்வளவு சீக்கிரம் வந்து அடைந்திருக்க முடியாது என்பதை தீர்மானித்துக் கொண்டான் ஆண்டனி.

அந்த மர்மமான குகையின் நுழைவாயிலில் இருந்த கரடு முரடான பாறையிடுக்கில் ஆண்டனி தன்னை ஒட்டுமொத்தமாக மறைத்துக் கொண்டான்.

குகையின் உட்புறத்தில் வெகு தூரத்தில் ஏதோ ஒரு அருவி சலசலத்துக் கொட்டுவது போன்ற ஓசையும், இரவுப் பறவைகள் தம் நீளமான சிறகுகளை படபடவென்று அடித்துக் கொள்கிற ஓசையும் மிக மெதுவாக ஆண்டனிக்கு கேட்டது.

'இன்னும் சில வினாடிகளில் இந்த மர்மமான குகையை நோக்கி ஓடி வரும் அந்த விசித்திர உருவத்தை தாக்கிப் பிடித்து, கயிறு போன்ற இந்த சவுக்கால் அவனை கட்டி இழுத்துக் கொண்டு போக வேண்டும். அவனை உடனடியாக கொன்று விடக் கூடாது.

மென்டோஸா தாத்தா கூறியதைப் போல அவன் நூற்று ஐம்பது வயதை தாண்டியவனா? அவன் மனித ஜீவன் தானா ? இல்லை.. ஏதோனும் ஒரு வகை அபூர்வ மிருகத்தின் சேர்க்கையா? அவனைப் பற்றிய வர்ணிப்புகளையெல்லாம் ஊரறிய அம்பலப்படுத்தியே ஆக வேண்டும்.

ஆண்டனி காத்திருந்தான்.

சில நிமிடங்கள் ஓடியது.

**சற்றுத் தூரத்தில், புதர் மறைவில் ஒரு சலசலப்பு கேட்டது!**

அந்த பூதாகரமான மிருகத்தின் தலை போன்ற நுழைவாயிலின் இருட்டில் மறைந்து நின்று கொண்டிருந்த ஆண்டனியை சற்று தூரத்தில் புதர்

Scanned by CamScanner

மறைவில் கேட்ட சலசலப்பு உஷார்ப் படுத்தியது.

'எந்த நிமிடத்திலும் அந்த விசித்திர குகை மனிதன் புதர் மறைவிலிருந்து வெளிப்படலாம். அவனை ஒரே மடக்காக மடக்கி தன் கையில் உள்ள சவுக்கால் கட்டி இழுத்துச் செல்ல வேண்டும்' என்று ஆண்டனி பின்னால் கயிறு போல் சுருட்டி வைத்திருந்த சவுக்கை சற்று தளர விட்டான்.

அந்த நேரத்தில், இருட்டான அந்த புதர் மறைவிலிருந்து அந்த உருவம் வெளிவந்தது.

**இருட்டில்அதன் முகம் சரியாகத் தெரியவில்லை. கூன் விழுந்து நாலு காலால் குகையின் நுழைவாயிலை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த குகை மனிதன், இதுவரை விரைவாக ஓடி வந்ததற்கு அறிகுறியாக 'புஸ்.. புஸ்..' ஸென்று சற்று பலமாகவே மூச்சு விட்டுக் கொண்டு, மெதுவாக குகையை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான்.**

அப்போதுதான், எதேச்சையாக குகையின் நுழைவாயிலில் தென்புறம் இருந்த கரடு முரடான பாறை இடுக்கில் அந்த குதிரை சவுக்கின் நுனி காற்றிலே லேசாக ஊஞ்சலாடுவதை அந்த குகை மனிதன் கவனித்துவிட்டான்.

அந்த குதிரை சவுக்கு நுனியின் சின்ன அசைவு, குகை மனிதனுக்கு 'சற்று நேரத்துக்கு முன்பு தன்னை நோக்கி துணிச்சலாக வந்த அந்த மனிதன், தனக்கும் முன்னால் இவ்வளவு விரைவாக குகையின் வாசலுக்கே வந்து மறைந்திருக்கிறான்' என்பதை ஊர்ஜிதப் படுத்தி விட்டது.

தடி, கம்பு, கற்களோடு கூட்டமாக அத்தனை பேர் தன்னைத் தாக்க வந்த போது, எதிர்த்து ஒரு உறுமு உறுமியவுடன் எல்லோரும் பயத்துடன் சிதறுண்டு போய் விட்டார்கள்.

ஆனால் இந்த குதிரைச் சவுக்கை ஏந்திய மனிதன் மட்டும் துணிச்சலாக எதிர்த்து வந்து, இப்பொழுது தன் குகை வாயிலிலேயே தன்னை மடக்கிப் பிடிக்க, மறைந்து காத்திருப்பது குகைமனிதனுக்கு மிகுந்த யோசனையைக் கொடுத்தது.

குகையை நோக்கி நடந்து வந்த அது, ஏதோ ஒன்றை அவசரமாக மனதில் நினைத்துக் கொண்டதைப் போல, ஒரே தாவலில் சரேலென்று மீண்டும் புதரில் மறைந்தது.

விநாடிகள், நிமிடங்கள்.. ஓடிக் கொண்டே இருந்தன. குகை மனிதன், குகையை நோக்கி வரவே இல்லை. அப்பொழுதுதான் அந்த குகைமனிதனின் புத்திசாலித்தனமான திட்டம் என்ன, என்பதை சிறிது நேரத்தில் ஆண்டனியே புரிந்து கொள்ளும் நிலை

Scanned by CamScanner

ஏற்பட்டது.

திடீரென்று... தோட்டத் தொழிலாளர்கள், சோபியாவின் சாரட் கவிழ்ந்து விழுந்து கிடந்த இடத்திலிருந்து பயம் மிகுந்து தாறுமாறாக கத்துவது ஆண்டனியின் காதில் விழுந்தது.

இத்தாலிய மொழியில் "குகை மனிதன்.. . குகை மனிதன்.. குகை மனிதன்.. மீண்டும் குகை மனிதன் வந்துட்டான்.' 'ஆண்டனியை கொன்னு போட்டு அந்த குகை மனுஷன் நம்ம சோபியா மேடத்தை திரும்பி வந்து கொல்ல வந்திருக்கிறான்...."

இப்படிப் பட்ட குரல்கள் அரைகுறையாக ஆண்டனியின் காதில் விழுந்தன.

அப்போதுதான் அந்த குகை மனிதன், தான் இருப்பதைப் பார்த்துப் பயந்துகொண்டு, குகைக்கு வரவில்லை. தான் இல்லாத நேரம் பார்த்து மீண்டும் சோபியாவைத் தாக்கப் போயிருக்கிறான்..' என்பதைப் புரிந்து கொண்டான் ஆண்டனி.

இதைப் புரிந்து கொண்ட அடுத்த வினாடி, ஆண்டனி மின்னல் வேகத்தில் அந்த இடத்தை விட்டு, புயலைப் போல புறப்பட்டு மீண்டும் திராட்சைத் தோட்டத்தின் சுவரை சவுக்கின் உதவியால் தாண்டி குதித்து, கூடுமான வரை வெகு விரைவாகவே சோபியாவின் சாரட் கவிழ்ந்து கிடந்த இடத்துக்கு அருகில் வந்து விட்டான்.

அப்போது ஆண்டனி சற்றும் எதிர்பாராத வகையில் 'டுமீல்... டுமீல்.' என துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது!

தோட்டத் தொழிலாளர்கள் யாரிடத்திலும் துப்பாக்கி இல்லை என்று ஆண்டனிக்கு நன்றாகவே தெரியும். பிறகு துப்பாக்கி வெடிப்பது யார்?

பதட்டத்தோடு ஆண்டனி நெருங்கி வந்த போது சோபியாவின் அண்ணன் 'கிரிகாரியோ, தன் கையில் உள்ள துப்பாக்கி புகை கிளம்ப நின்றிருந்தான்.

குகை மனிதனுக்கு பயந்து சிதறி ஓடிய தோட்டத் தொழிலாளிகளில் சிலர், மேடம் சோபியாவின் பண்ணை வீட்டுக்கு ஓடி, குகை மனிதனைப் பற்றி சொல்லியிருக்கலாம்.. அதைத் தெரிந்து கொண்டுதான் சோபியாவின் அண்ணன் கிரிகாரியோ, துப்பாக்கியும், கையுமாக வந்திருக்கிறான்.' என்பதை ஆண்டனியும் புரிந்து கொண்டான்.

கிரிகாரியோவோடு இன்னும் நிறைய பேர் டிரக்குகளிலும், ஜீப்புகளிலும் வந்திருந்தனர். சில பேர் தலையில் 'ஹெட் லைட்' மாட்டிக் கொண்டிருந்தனர். அதன்

Scanned by CamScanner

வெளிச்சம் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. புதர்களில் எங்காவது சின்ன அசைவு தென்பட்டாலும், அடுத்த நிமிடமே அந்த இடத்தை நோக்கி கிரிகாரியோவின் துப்பாக்கி சரமாரியாக குண்டுகளை வெடித்துக் கொண்டிருந்தது.

ஹைட் லைட் வெளிச்சத்தில் ஆண்டனி திரும்பி வருவது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்து விட்டது.

கிரிகாரியோ தன் துப்பாக்கியைத் தரையை நோக்கி தாழ்த்திப் பிடித்துக் கொண்டு ஆண்டனியை நோக்கி வந்தான்.

"எங்கள் ஒட்டு மொத்த குடும்பத்தின் சார்பாக உனக்கு நன்றி சொல்கிறேன் ஆண்டனி! கையில் துப்பாக்கி கூட இல்லாமல் தனி மனிதனாக, நீ அந்த பயங்கரமான குகை மனிதனை எதிர்த்துத் துரத்திப் போனதை கேள்விப்பட்டேன். **இன்றைக்கு சோபியாவைக் காப்பாற்றியது நானோ, இந்தத் துப்பாக்கியோ அல்ல. நிச்சயமாக நீ தான்!**"

என்று லேசாக வந்து கொண்டிருந்த புகையை ஊதியபடியே கிரிகாரியோ, ஆண்டனியை உற்சாகத்தோடு பாராட்டினான்.

கிரிகாரியோ இப்படி ஆதரவோடு ஆண்டனியின் தோளின் மீது கை போட்டபடி பேசிக் கொண்டிருந்த போது, மற்ற நிகழ்ச்சிகள் மடமடவென்று நடந்தன.

பண்ணை வீட்டிலிருந்து வந்த பல தாதிமார்கள், இதற்குள் சோபியாவை வேறொரு சாரட்டில் பத்திரமாக ஏற்றி விட்டிருந்தார்கள். அவளது வண்டியைச் சுற்றி பாதுகாப்பாக பல பேர் நின்று கொண்டிருந்தனர். வண்டிக்கு முன்னாலும், பின்னாலும் இரண்டு மூன்று பேர் துப்பாக்கி ஏந்திய கையோடு ஹைட் லைட் வெளிச்சம் பிரகாசமாக அடிக்க போய்க் கொண்டிருந்தனர்.

சோபியாவுக்கு பயம் தெளிந்து, நன்றாக நினைவு வந்து விட்டதா இல்லையா என்பதை ஆண்டனியால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சோபியாவின் வண்டியைச் சுற்றி ஏராளமான பேர் நெருங்கி, முண்டியடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தனர்.

**ஒரு முறை சோபியாவின் முகத்தை இப்போது பார்க்க வேண்டும் என்று ஆண்டனி ஆசைப்பட்டான். ஆனால் அது நடக்கவில்லை.**

கிரிகாரியோவும், சோபியாவின் வண்டி புறப்பட்டவுடன் ஒரு குதிரையின் மீது தாவி ஏறி சாரட் வண்டியை ஓட்டி விரைவாகப் புறப்பட ஆரம்பித்தான்.

தோட்டத் தொழிலாளர்களில் சிலர் ஆண்டனியிடம்

Scanned by CamScanner

வந்து, "கிரிகாரியோ சாரே உன்னை பாராட்டி பேசிட்டாரு நிச்சயம் அடுத்த மாசமே உன் சம்பளம் ரெண்டு மடங்கா ஏறிடும்.."

"எங்க கூட்டத்துலேயே நீ தான் பெரிய வீரன்னு நிரூபிச்சுட்டே..! ஆனா சோபியா மேடத்தை எதுக்காகவோ குறி வெச்சு தாக்க வந்த அவன், இனி உன்னை விட மாட்டான். நீ கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு.."

இப்படி பலபேர் பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறியதில் ஆண்டனியின் மனம் லயிக்கவில்லை. சாரட் வண்டிக்குள் சோபியா எப்படி இருக்கிறாள்? அவள் தலையில் அடிபட்டதற்கு சரியாக மருந்து போட்டார்களா? அவள் பயத்தை போக்குமளவு துணிச்சலாக செயலாற்றக் கூடிய யாராவது அவளருகில் இருக்கிறார்களா?

இப்படிப்பட்ட சிந்தனைகளிலேயே அவன் மனம் அல்லாடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில், சோபியாவின் பண்ணை வீடு நெருங்கி விட்டது.



பவியா(மிலன்) நகரத்தில் ஒரு பிரமிப்பூட்டும் அரச மாளிகை இருக்கிறது. அதுதான் இத்தாலிய நாட்டின் கட்டிடக் கலைக்கே முன்னோடியானது என்று பாராட்டு பெற்றது. அதை நிர்மாணித்தது 15 ஆம் நூற்றாண்டின் கலை நுணுக்கம் மிகுந்த ஒரு சிற்பியாகும். அவர் பெயர் **விஸ்கோன்டி**. அவர் நிர்மாணித்த அந்தக் கட்டிடத்தின் சிறப்பம்சங்கள் இத்தாலி முழுவதும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

மேடம் சோபியா அந்தச் சிற்பியை கௌரவிக்கும் வகையில் தன் பண்ணை வீட்டை அந்த பவியா நகரத்து அற்புதமான கட்டிடத்தைப் போலவே வெகு சிரமப்பட்டு கை தேர்ந்த சிற்பிகளை வைத்து நிர்மாணித்தாள். எனவே அந்த பண்ணை வீடு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் ஒரு

Scanned by CamScanner

அதிசயமான மாளிகை போலவே தெரிந்தது.

அந்தப் பகுதியில் ஓடும் சாக்கோ என்ற ஆற்றில் ஒரு கிளையைப் பிரித்து, அது தெளிந்த நீரோடையாக, தன் பண்ணை வீட்டுக்குள் புகுந்து வெளியே செல்லுமாறு செய்திருந்தது மிகுந்த வியப்பை அளித்தது.

பண்ணை வீட்டின் பிரதான வாயிலில், சோபியா இருந்த சாரட் வண்டி நுழைந்ததும், மற்ற அத்தனை கூட்டத்தினரையும் சில முக்கியஸ்தர்கள்,

“தயவு செய்து சோபியா மேடத்தின் தற்போதைய உடல் நலம் கருதி, எல்லாரும் உள்ளே நுழைய வேண்டாம். அதோ வலது கோடியில் இருக்கும் வரவேற்பு மண்டபத்தில் எல்லோரும் சென்று இளைப்பாறுங்கள்.

சிறிது நேரத்தில் சூடாக தேநீரும், தயாரித்துக் கொடுக்கச் சொல்கிறோம். அருந்தி விட்டு எல்லோரும் பாதுகாப்பாக உங்கள் திராட்சைத் தோட்டக் குடியிருப்புகளுக்குச் செல்லுங்கள். பாதுகாப்புக்கு இரண்டு மூன்று துப்பாக்கி ஏந்திய வீரர்களை உங்களுடன் அனுப்பச் சொல்லி, கிரிகாரியோ சார் கட்டளை இட்டிருக்கிறார்.”

எல்லோரும் அந்த வேண்டுகோளுக்கு இணங்க அந்த வரவேற்பு மண்டபத்தில் கூடினார்கள்.

ஆனால், சற்று தூரத்தில் ஆண்டனி பண்ணை வீட்டிலிருந்து வெளி வரும் நீரோடையை ஒரே தாவலாக தாண்டிக் குதித்து தனியாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் மனதில் ஒரு சின்ன சஞ்சலம் அலைமோதிக் கொண்டிருந்தது.

‘பண்ணை வீட்டின் பிரதான வாயிலில் எல்லோரையும், போக விடாமல் தடுத்தது சரிதான். ஆனால் தன்னையும் சேர்த்து அல்லவா வெளியே நிறுத்தி விட்டார்கள்! தன் உயிரையே துச்சமாக மதித்து சோபியா மேடத்தை காப்பாற்ற, அந்த குகை மனிதனை தனியாக சந்திக்கப் போனவனால் அந்த ‘சின்ன’ இடையூறை சந்தித்து சகித்துக் கொள்ள முடியவில்லை.

சிறிது நேரத்தில் ஆண்டனி, திராட்சைத் தோட்டத்தின் பின்புறம் உள்ள தொழிலாளர்களின் குடியிருப்புகளை நெருங்கி விட்டான்.

தூரத்திலிருந்து பார்க்கும் போதே அந்த தொழிலாளர்களின் குடியிருப்பு ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் உள்ள முகப்பு விளக்கு வெளிச்சத்தில் ஒரு குட்டி நகரத்தைப் போல பிரகாசமாக தெரிந்தது.

சற்று ஒதுக்குப் புறமாக இருந்த அவனது குடியிருப்புப்

Scanned by CamScanner

பகுதியை நெருங்கி விட்டான். நடந்து கொண்டிருந்த ஆண்டனி 'டக்'கென்று நின்றான்.

காரணம், அவனது வீட்டின் முகப்பு விளக்கு உடைக்கப்பட்டு கண்ணாடி சில்லுகள் கீழே தெறித்து விழுந்திருந்தன. அவனது வீடு மட்டும், இருளில் மூழ்கியிருந்தது.

சற்று உஷாரான நிலையில் மெதுவாகத் தன் குடியிருப்பின் கதவுக்கருகில் வந்தான். எப்போதுமே பூட்டாமல் திறந்து கிடக்கும் ஆண்டனியின் கதவு இப்போதும் லேசாகத் திறந்தே இருந்தது.

பலமுறை சக தொழிலாளர்கள் ஆண்டனியை,

"உன் வீட்டை மட்டும் ஏன் பூட்டாமல் திறந்து



போட்டுவிட்டுப் போகிறாய்..?"

என்று கடிந்து கொள்வார்கள்.

அதற்கு ஆண்டனி, "என்னிடம் திருட ஏதுமில்லை. ஒரு வேளை நல்ல பூட்டாக, கதவுக்கு போட்டால் அதைத்தான் யாராவது திருடிக் கொண்டு போக வேண்டும்."

என்று காமெடியாகக் கூறுவான்.

பூட்டாத அந்தக் கதவை மெதுவாகத் திறந்தான். சற்று உள்ளே சென்று, சுவற்றைத் தடவியபடி இடது புறம் உள்ள விளக்கு ஸ்விட்சைப் போட்டான். அவனது அறையின் நடுக்கூடத்தில் ஒரு **செத்துப் போன** முயல் கால்களைப் பரப்பிக் கொண்டு கிடந்தது.

ஆண்டனிக்கு விஷயம் புரிந்து விட்டது. '**சிக்னல் வந்திருக்கிறது !**' யோசனையுடன் அந்த செத்துப் போன முயலை காதைப் பிடித்து தூக்கி மேலும், கீழும் ஆராய்ந்தான்.

அந்த முயலின் அடி வயிற்றுப் பகுதி நைலான் நூலால் தைக்கப்பட்டிருந்தது.

"சரி, செய்தி உள்ளே இருக்கிறது." என்று முணுமுணுத்தபடி அந்த நைலான் நூலை கவனமாகப் பிரித்தான். முயலின் வயிற்றுக்குள் சொருகப் பட்டிருந்த பிளாஸ்டிக் சுற்றிய ஒரு பேப்பர் தலை நீட்டியது.

அவசரமாகப் பிரித்தான். அந்த கடிதத்தில் ...

**"வீணாக தாமதம் செய்கிறாய். சோபியாவை உடனே கொன்று விட்டாவது வேலையை முடி! இல்லையென்றால் சட்டம் நம் மூன்று பேர் கழுத்துக்கும் சுருக்குக் கயிறு போடத் தவறினாலும், எங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்த உன்னை விட மாட்டோம். நம் மூவரில் முதல் பலி நீதான்! இதற்குப் பிறகு உன் உயிர், உன் முடிவில்தான் இருக்கிறது!"**

ஆண்டனி அந்த கடிதத்தையே தீர்க்கமாகப் பார்த்தான்.

## 3

முயலின் வயிற்றுக்குள்ளே இருந்து பிளாஸ்டிக் உறையில் சுற்றப்பட்ட கடிதத்தை ஆண்டனி பார்த்ததும், அவனுக்கு சில காட்சிகள் மனத் திரையில் அவசர அவசரமாக நிழற்படம் போல் ஓட

Scanned by CamScanner



ஆரம்பித்தது

ஐந்து ஆண்டுகளுக்கு முன்..

மிலன் நகரத்தில், வறுமையின் காரணமாக, ஒரு வயதான கிழவி கடை வீதியில் ரொட்டியைத் திருடினாள். அந்த வயோதிகக் கிழவியின் முகத்தில் அந்த ரொட்டிக் கடைக்காரன், கொதிக்கும் வெந்நீரை ஊற்றினான். அந்த வயோதிகத் தாயின் அலறலை, கூட்டத்தோடு ஒருவனாக வந்து பார்த்த **ஆண்டனி**, 'இது கொடூரமான செயல்' என்று கடைக்காரனை எச்சரிக்கை செய்தான்.

விளைவு...

ராணுவத்தில் செல்வாக்கு பெற்ற அந்த ரொட்டிக் கடைக்காரன் ஆண்டனியை முதலில் 'நியூசென்ஸ்' கேஸில்தான் போலீஸ் மூலம் அரெஸ்ட் செய்தான்.

"இளமையான ரத்தம்! 'பசிக்கு திருடிய அந்தத் தாயின் முகத்தில் வெந்நீரை ஊற்றி தண்டனை வழங்க அந்த ரொட்டிக் கடைக்காரன் என்ன நீதிபதியா?"

என்று கோர்ட்டில் முழங்கினான்.

அவன் பேசிய பேச்சு நீதிபதிக்கு அதிகப் பிரசங்கித்தனமாகப் பட்டது. நியாயத்தைப் புரிந்து கொள்ளாத நீதிபதி, இவனை எதற்கும் அஞ்சாத ரவுடி என்று நினைத்து, 15 நாள் காவலில் வைத்தார்.

மிகவும் சாதுவான ஆண்டனி, சிறைச்சாலையில் விஷமத்தனமான ரௌடியாக பாவிக்கப்பட்டு வார்டர்களால் துன்புறுத்தப்பட்டான்.

'நியாயத்தைக் கேட்டதற்காக இத்தனை அவமானங்களா?' என ஆண்டனியின் மனம் குமுறத் துவங்கியது.

நீதிபதி தனக்கு 15 நாள் சிறை தண்டனைதான் கொடுத்தார். இந்தச் சித்திரவதைகள் அல்ல என்று கத்த ஆரம்பித்தான். ஜெயிலரின் காதுக்கு விஷயம் எட்டியது. **கைதிகளை துன்புறுத்துவதிலேயே ஆனந்தம் அடைந்த ஜெயிலருக்கு இக்குரல், தனக்கு எதிராகக் கிளப்பும் புரட்சியாக அவர் மனதில் அச்சத்தைக் கிளப்பியது.**

Scanned by CamScanner

ஆண்டனியின் மெல்லிய உறுப்புக்களில் பழுக்கக் காய்ச்சிய இரும்பால் வெகு நிதானமாக சூடு போட்டான் ஜெயிலர்.

இதைப் பார்த்த மற்ற கைதிகளே மனம் பொறுக்காமல் கொதித்தெழுந்து, ஜெயிலரைத் தாக்க ஆரம்பித்தார்கள். அப்படித் தாக்கி ஆண்டனியின் அன்புக்குரியவர்களாக ஆனவர்கள் தான் **லூஜி., டோர்க்கமாடா** என்று இரண்டு கைதிகள்.

தொடர்ந்து ஜெயிலரை அடித்து விட்டு 'இனி அந்த ஜெயிலில் சித்திரவதை அனுபவிக்க முடியாது' என்று அந்த நண்பர்களின் ஆலோசனைப்படி ஆண்டனியும் சேர்ந்து மூவராக ஜெயிலிலிருந்து தப்பி ஓடினார்கள்.

இப்போது மூவர் மீதும், **'ஜெயிலரைத் தாக்கி விட்டு தப்பி ஓடிய பயங்கரக் குற்றவாளிகள்'** என்று முத்திரை குத்தப்பட்டது. ஒயர்–லெஸ்கள், ஹெலிகாப்டர்கள், நியாயம் கேட்ட அந்த சாதாரண பிரஜைகளை விஞ்ஞான நுணுக்கத்தோடு தேடத் துவங்கி, விரைவிலேயே பிடிபட்டுவிட்டனர்.

பிடிபட்ட இவர்களைத் தனது பாதுகாப்பிலேயே தனி வார்டில் வைத்திருந்த அந்த சாடிஸ்ட் ஜெயிலர், மிகக் கவனமாக தனது பாணியில் கவனிக்க ஆரம்பித்தார் !

ரத்தம் உறையும் குளிரில் சொட்டுச் சொட்டாக ஒவ்வொருவர் நெற்றிப் பொட்டிலும் குளிர்ந்த நீர் இடைவிடாது சொட்ட வைத்தார். இது பழுக்கக் காய்ச்சிய இரும்பை விட, பல மடங்கு கொடிய தண்டனை என்பது ஜெயிலர் தன் அனுபவத்தில் கண்ட உண்மை.

தூங்க முடியாது.. இரவு பகலாக தொடர்ந்து சித்திரவதை.. கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலை ! சகிக்க முடியாத அந்த மூன்று பேரும்., சிப்பந்திகளுக்கு சில வாக்குறுதிகளைக் கொடுத்து, தங்கள் கைக் கட்டுக்களை ரகசியமாக அவிழ்த்து கொண்டனர்.

சட்ட விதிகளுக்குப் புறம்பாக, ஆனால் சட்டத்தின் பாதுகாப்போடு கொடூரம் செய்யும் அந்த ஜெயிலர், அருகில் வந்ததும் புயலெனத் தாக்கி, அவனை துவம்சம் செய்தனர்.

குடிவெறியில் இருந்த அந்த ஜெயிலர், இரண்டு மூன்று குத்துக்களிலேயே தள்ளாடி, தலையின் பின்புறம் ஒரு பாறாங்கல்லில் மோத, பொட்டென்று போய் விட்டான் !

இதை இந்த மூவரும் கூட எதிர்பார்க்கவில்லை தான். 'ஒரு வயோதிகத் தாயின் முகத்தில் வெந்நீரால் கொப்புளிக்கச் செய்ததற்கு நியாயம் கேட்டதற்கே இவ்வளவு

Scanned by CamScanner

தண்டனைகள் வழங்கிய சட்டம், ஒரு ஜெயிலரை 'தாங்கள் கொலை செய்யும் நோக்கில் தாக்கவில்லை' என்று சொன்னால் ஒப்புக் கொள்ளவா போகிறது?'

மூவரையும் உடனடியாக, தூக்கில் மாட்டினால் கூட அதற்கு மூவரும் சம்மதிக்கத் தயார் தான். ஆனால் விசாரணை என்ற பெயரில் சித்திரவதைப்பட அவர்களுக்கு இனியும் சம்மதமில்லை.

'உயிர் போனால் பரவாயில்லை. சித்திரவதைப்பட தயாரில்லை'

என்ற மனநிலை வந்ததும், பிடிக்க வந்த அத்தனை சிப்பந்திகளையும் பந்தாடி விட்டனர். கையில் கிடைத்த ஆயுதங்களை வைத்து மிரட்டி, ஜெயில் கதவுகளின் பூட்டுக்களை படபடவென்று திறக்க வைத்தனர்.

மிலன் நகரத்துக் கெடுபிடிகள் நிறைந்த ஜெயிலில் இருந்து மீண்டும் தப்பியோடினார்கள்.

ரோம் நகர எல்லையிலுள்ள, ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி, ஸ்விட்ஜர்லாந்துக்கு எப்படியாவது ஓடி விட்டால் தங்களை இத்தாலி நாட்டு அரசாங்கம் இம்சிக்காது என்று நம்பினார்கள்.. ஆனால் ஆல்ப்ஸ் மலையை போலீஸார் சூழ்ந்து கொண்ட நிலையில், இந்த அப்பாவி இளைஞர்கள் ஸ்விட்ஜர்லாந்துக்கு தப்பி ஓடுவது சுலபமாக இருக்கவில்லை.

ஆல்ப்ஸ் மலையின் பனிக் கரடிகள் வசிக்கும் குகைகளில் மூவரும் ஒளிந்திருந்த போது, ஆண்டனியை போலீஸார் சரமாரியாகச் சுட்டார்கள். அவனது வலது காலில் குண்டடிப் பட்டு, மூவரும் தப்பி விட்டார்கள்.

அப்போதுதான் ரோம் நகரத்தைச் சேர்ந்த டோர்க்கமாடா, புத்திசாலித்தனமாக ஒரு திட்டம் தீட்டினான்.

ஆல்ப்ஸ் மலையை நடந்து கடந்து செல்வது எளிதல்ல. ஏராளமான பணம் செலவழித்தால் போலி பாஸ்போர்ட்டுக்களை தயாரித்து, பாதுகாப்பாக ஸ்விட்ஜர்லாந்து செல்ல, தனக்கு வழி தெரியும் என்று கூறினான்.

பசியாலும், பட்டினியாலும் வாடும் அவர்கள் பணத்துக்கு எங்கே போவார்கள்?

மில்லியன் கணக்கில் ஸ்விஸ் பேங்கில் கணக்கு வைத்திருக்கும் மேடம் சோபியாவைப் பற்றி டோர்க்கமாடா விவரித்தான். அவளது அந்தரங்க தஸ்தாவேஜுகளில் சிலவற்றை திட்டமிட்டு களவாடிவிட்டால், ஏராளமாக பணம்

Scanned by CamScanner



மணம் பெருகுது
மணம் பெருகுது
சமையலில்

மனம் நிறையுது
மனம் நிறையுது
சுவையினில்



# சக்தி

## மசாலா பொடிகள்

## சக்தி டிரேடிங் கம்பெனி

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 042002-460, 461



இருமுறை
தமிழக அரசின்
விருது பெற்ற
நிறுவனம்

எமது சுவைமிகு தயாரிபபுகள்

■ மஞ்சள் தூள் ■ மிளகாய் தூள் ■ மலலித்தூள் ■ சுக்கு மல்லி காப்பி ■ மிளகு தூள் ■ சாம்பார் பொடி ■ ரசப்பொடி ■ கறி மசால்பொடி ■ இட்லிப்பொடி ■ பருப்புப்பொடி ■ பூண்டுப் பொடி ■ புளியோதரை பொடி ■ பிரியாணி மசாலா ■ சிக்கன் மசாலா ■ கரம் மசாலா ■ சில்லி சிக்கன் ■ மீன் மசாலா ■ புளிக்குழம்புப் பொடி ■ வற்றல் ■ வடாகம் மற்றும் அபபள வகைகள

மற்றும் விறபனை நிலையங்கள் :

ஈரோடு : • 16, கொங்காளம்மன் கோயில் தெரு,
ஈரோடு - 638 001. போன் : 71310

கோவை : • 826, ரங்கே கவுடார் வீதி கோயம்புத்தூர - 641 001.

டீலர்களின் விசாரணைகள் வரவேறகப்படுகின்றன.

ADVT.

Scanned by CamScanner

புரட்டலாம். பாஸ்போர்ட் சுலமாகக் கிடைக்கும் என்று நம்பிக்கையூட்டினான். பார்ப்பதற்கு நம்பிக்கைக்குரியவனாகத் தோற்றம் அளிக்கும் **ஆண்டனி,** அங்கு சென்று **சோபியாவின்** தஸ்தாவேஜுகளை அவளைக் கொன்றாவது கைப்பற்றுவதற்கு பொருத்தமானவன் என்று டோர்க்கமாடாவும் லூஜியும் தீர்மானிக்க, ஆண்டனியும் சம்மதிக்க வேண்டிய நெருக்கடி !

ஆல்ப்ஸ் மலையின் பழங்குடியினருடன் நட்பு ஏற்படுத்திக் கொண்ட இந்த மூவரும், ரோம் நகரம் வரை பல மாறு வேடங்களில் போலீஸையும், ராணுவத்தையும் ஏமாற்றி விட்டு, வந்து சேர்ந்துவிட்டார்கள். இறுதியில் சோபியாவின் பண்ணையில் திராட்சைத் தோட்டத்துத்-தொழிலாளியாக ஆண்டனியும் பாதுகாப்பாக போய் சேர்ந்து விட்டான்.

அதற்குப் பிறகுதான் சோபியாவின் நல்ல குணங்கள் ஒவ்வொன்றாக ஆண்டனிக்கு, எதேச்சையாகத் தெரிய வந்தது. சோபியா உயிருக்குயிராக நேசிக்கும் **குழந்தை லீனா,** சம்பந்தமில்லாமல் ஆண்டனியின் மேல் பாசம் வைக்க ஆரம்பித்தது.

இந்தக் காட்சிகளையெல்லாம் ஒரே நொடியில் நினைவு கூர்ந்த ஆண்டனி, இப்போது நண்பர்களின் ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டு சோபியாவை கொலை செய்து விட்டு, தஸ்தாவேஜுகளைத் திருட முடியுமா என்று ஒரு கணம் யோசித்தான்.

கணவனை இழந்து, கைக்குழந்தையுடன் ஊருக்கெல்லாம் ஓடி ஓடி நன்மை செய்து கொண்டிருக்கும் அந்த சோபியாவை கொலை செய்ய, ஆண்டனிக்கு மனம் ஒப்பவில்லை.

கறுப்புத் துணியை கண்ணில் கட்டிக் கொண்டிருக்கும் சட்டம், ஆண்டனியை பயங்கரமான கிரிமினல் குற்றவாளியாக சித்தரித்தாலும், ஆண்டனி அடிப்படையில் ஒரு இரக்கமுள்ள நல்ல இத்தாலியப் பிரஜைதான்!

சோபியாவின் உயிரைக் காப்பாற்ற, குகை மனிதனையே எதிர்க்கும் அளவு, அவனது எதார்த்தமான நல்ல உள்ளம் இப்போது துணிந்து விட்டது. அதற்காக உயிருக்கு ஊசலாடும் நண்பர்களைக் காப்பாற்றும் கடமையிலிருந்து தன்னை விடுவிடுத்துக் கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியாது. இரண்டு பக்க நியாயங்களுக்கு இடையில் ஆண்டனி சிக்கித் தவித்து இருதலைக் கொள்ளி எறும்பானான். கடைசியில் சிந்தித்து ஒரு முடிவெடுத்தான்.

மனதில் நியாயம் என்று படுவதை செய்வது, அதற்காக

Scanned by CamScanner

வரும் விளைவுகளைப் பற்றி இனி கவலைப்படப் போவதில்லை!

இந்த சிந்தனைகளுடன் ஒரு தீர்க்கமான முடிவெடுத்தவனாக, ஆண்டனி கண்ணயர்ந்து தூங்கி விட்டான்.

அடுத்த நாள் மாலையில் திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்பு மிகவும் பரபரப்புக்கு உள்ளானது. குகை மனிதனால் கடத்தப்பட்டு தப்புவிக்கப்பட்ட அந்தப் பெண், ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆகி வந்து விட்டாள்.

நினைவு திரும்பி, ஓரளவு பேசும் தைரியம் வந்துள்ள அவளைத் தோட்டத் தொழிலாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"குகை மனிதன் உன்னை எப்படி தூக்கிக் கொண்டு போனான்?"

"உண்மையைச் சொல்! அவன் உன்னைக் கற்பழித்தானா?"

"அவ்வளவு பலம் பொருந்திய குகை மனிதனிடமிருந்து நீ எப்படித் தப்பினாய்?"

இப்படி தோட்டத் தொழிலாளர்கள் ஆண், பெண் பாகுபாடின்றி அந்த அப்பாவிப் பெண்ணை கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தனர்.

மென்டோஸா தாத்தாவுக்கு அவளை எல்லோரும் இப்படி கேள்விகள் கேட்பது ஒரு எரிச்சலை ஏற்படுத்தியது.

அவர் ஒரு 'மிதப்பான' சூழ்நிலையில் இருந்தார். நேற்றிரவு சோபியா மேடத்தின் வரவேற்பு மண்டபத்தில் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிய ஒயின் – பாட்டில்களில், சேமித்து வைத்ததை இன்று மாலைதான் மீண்டும் குதூகலமாக திறப்பு விழா செய்திருந்தார்.

மென்டோஸா தாத்தா, ஒரு கிண்டலான பேர் வழி. தாடியும், மீசையும் வளர்த்த அவர் அறுபது வயதைத் தாண்டி இருந்தாலும், இருபது வயதின் குறும்பு அவர் நாக்கில் எப்போதும் நர்த்தனமிட்டுக் கொண்டிருக்கும். அவர், கேள்வி கேட்ட அத்தனைப்பேரையும் தன் கரகரப்பான குரலால் ஒரு அதட்டு அதட்டி அடக்கி விட்டு, அந்தப் பெண்ணைப் பார்த்து, காமெடியாக பேச ஆரம்பித்தார்.

"ஏண்டி.... சின்ன இடைக்காரி! உன்னை நான் எத்தனை தடவை கெஞ்சிக் கெஞ்சி திராட்சைத் தோட்டத்துல

Scanned by CamScanner

புதருக்கு கூப்பிட்டிருப்பேன்.. ஒரு தடவையாவது சம்மதிச்சு வந்தியா நீ.. ? சதிகாரி ! இப்பப் பார்த்தியா... என்னை விட வயசானவன் – அந்த படு கிழவன் – குகை மனுஷன் உன்னை அலாக்காத் தூக்கிக்கிட்டு போயி, எல்லாத்தையும் பண்ணிட்டான் !

ஆனா நீ ஒத்துக்க மாட்டேடி.. ! கைகாரி.. ! இப்ப ஒண்ணுமே நடக்கலைன்னு சும்மா புருடா விடுவே! ஆனா நான் நம்ப மாட்டேன். இப்ப ஒண்ணே ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கோ... !

என் தாடியையும் மீசையையும் பார்த்து, 'கெழவனுக்கு ஆசையைப் பாரு'ன்னு கிண்டலடிச்ச நீ.., இப்ப எனக்கு மனசு வச்சு ஒரு சந்தர்ப்பத்த கொடு...! நான், அந்த குகை மனுஷனை விட ரொம்ப வாலிபமானவங்கறதை உனக்கு நிரூபிக்கறேன்.."

என்று கூறிவிட்டு, ஒயின் குடித்த சந்தோஷத்தில் மந்தகாசமாகச் சிரித்தார்.

கூட்டத்திலிருந்த அத்தனை பேரும், சூழ்நிலையை மறந்து சிரித்தார்கள்..

வருத்தமும், பயமும் கப்பிய அந்த பாதிக்கப்பட்ட பெண் கூட, மனம் விட்டுச் சிரித்தாள். அப்போது அந்த மென்டோஸா தாத்தா திடீரென்று ஒரு பொறுப்புணர்ச்சி வந்தவராக, சொன்ன சில விபரங்கள் எல்லோரையும் சிந்திக்க வைத்தது.

"கெக்கெ கெக்கேன்னு சிரிக்கிற அத்தனை இளிச்ச வாயன்களும் வாயை மூடுங்கடா! அந்த குகை மனுஷன் என்ன நினைக்கிறானோ, அதை சாதிச்சு முடிச்சிடறான்.. அவன் வைச்சக் குறியை



Scanned by CamScanner



Scanned by CamScanner

மாத்தறதே இல்லை.. இந்த கிழவன் ஏதோ ஒயின் குடிச்சுட்டு உளர்றான்னு, எவனும் நினைச்சுடாதீங்கடா முட்டா பசங்களா...!

உஷாரா இருங்க.. என் செல்லச் சிட்டு, இந்த சின்ன இடைக்காரி மேலே அவன் எதையோ நினைச்சு குறி வச்சுட்டான்..! அவ எப்படியோ போராடி தப்பி வந்துட்டா.. இதோட கதை முடிஞ்சுதுன்னு எல்லோரும் கனவு கண்டுறாதீங்கடா..

கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க.. அவன் இன்னொரு தரமும் இந்தப் பெண்ணை குறி வைச்சு வரலாம்.. அப்படி வந்து இவளை சிறையெடுத்துப் போயிட்டான்னா.. அப்புறம் என் ஆண்மையை காமிக்க ஒரு சந்தர்ப்பமே கிடைக்காமே போயிடும்.."

மென்டோஸா தாத்தா இப்படி கூறியதும் எல்லோரும் கையைத் தட்டி ஆரவாரமாகச் சிரித்தார்கள். ஆனால் இரண்டு நாளில் அவர் வேடிக்கையாகச் சொன்னது வினையாகவே முடிந்து விட்டது.

**அந்த அப்பாவிப் பெண்ணின் உடல், சீர் குலைந்து பாஸ்டினா குகை வாயிலில் பிணமாகக் கிடந்தது. !**

மென்டோஸா தாத்தா, தலை தலையாக அடித்துக் கொண்டு, அந்தப் பெண்ணின் சடலத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதது, எல்லோரது மனதையும் இளக்கி, விக்கி, விக்கி அழச் செய்தது.

தாத்தாவை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்த ஆண்டனியின் மனதில் மட்டும், அடுத்து வரப் போகும் ஒரு அபாயம், முன்னெச்சரிக்கையாக ஒரு உள்ளுணர்வை ஏற்படுத்தியது... !

இந்த அபலைப் பெண்ணைக் கற்பழித்து, கொலை செய்ய திட்டமிட்ட குகை மனிதன், இறுதியில் தன் நோக்கத்தில் வெற்றி பெற்று விட்டான். இதே போல் சோபியா மேடத்தின் சாரட்டு வண்டியைத் தாக்கி, அவன் குறி வைத்திருக்கிறான். அந்த இலக்கை மாற்றிக் கொள்வான் என்பது என்ன நிச்சயம்? அடுத்த பலி சோபியாமேடமாக இருக்கலாம்.. ஆனால் நான் இருக்கும் வரை அதை நடக்க விடக்கூடாது, என்ற உறுதி ஆண்டனியின் மனதில் ஆழமாக பதிந்தது. ஆனால், அடுத்து நடந்த சம்பவங்கள் யாருமே எதிர்பாராத வகையில் அமைந்திருந்தன.

இரண்டு நாட்கள் கழித்து, அதிகாலை வேளையில் ஆண்டனி தன் குடியிருப்பு வீட்டில் கண் விழித்த போது மென்டோஸா தாத்தா தெருவில் நின்று கொண்டு

Scanned by CamScanner

யாரிடத்திலோ கத்திப் பேசுவது ஆண்டனிக்கு தெளிவாகக் கேட்டது.

அவர் கோபப்பட்டுக் கத்திய வார்த்தைகள், ஆண்டனியை படுக்கையிலிருந்து திடுக்கிட்டு எழுந்து உட்கார வைத்தது.

"பொறப்பு வளர்ப்பு தெரியாத கண்ட பசங்களையெல்லாம், சோபியா மேடம் வேலைக்கு வெச்சிக்கிட்டதுனாலதான், இன்னைக்கு இந்த வினை வந்திருக்கு.. இத்தனை வருஷம் இல்லாத அதிசயமெல்லாம் இன்னைக்கு நடக்குது.

நம்ம சோபியா மேடத்தோட அரண்மனையிலே எவனோ இரண்டு கள்வானிப் பசங்க.. முகமூடியைப் போட்டுக்கிட்டு பூந்து, மேடத்தோட கழுத்துல தொங்கற சாவியை, திருடப் பாத்திருக்காங்க..

கிரிகாரியோவை அடிச்சு காலையும் உடைச்சிட்டானுங்களாம்! இதெல்லாம் உள்ளாளு இல்லாமெ புதுசா வர்ற திருடனுக்கு எப்படித் தெரியும்னேன்.. !"

மென்டோஸா தாத்தா இப்படிப் பேசிக் கொண்டே தெருவில் நடந்து போய் கொண்டிருந்தார். அவர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம், ஆண்டனிக்கு தெளிவாகப் புரிந்தது.

மென்டோஸா தாத்தா, தன் மேல் சந்தேகப்பட்டும் இந்த வார்த்தைகளைப் பிரயோகித்திருக்கலாம்.. ஆனால் அதைப் பற்றி ஆண்டனி அதிகம் கவலைப்படவில்லை..

ஆனால், சோபியாவின் கழுத்தில் தொங்கும் சாவியை களவாட வந்த அந்த இரண்டு பேர் யார்? நிச்சயமாக ஜெயிலிருந்து தப்பி, உயிருக்குப் போராடிக் கொண்டு சுவிட்ஜர்லாந்துக்குச் செல்ல இருக்கும் தனது இரண்டு நண்பர்கள் **லூஜியும், டோர்க்கமாடாவும்,** தான்!

சந்தேகமேயில்லை. அவர்கள் எச்சரிக்கைக் கடிதங்களை தனக்கு எழுதி எழுதி அலுத்திருக்கலாம்.. எனவே நேரடியாகவே தாங்களே சோபியாவிடமிருந்து, சாவியை திருடத் துணிந்து விட்டார்கள்.

இனி தன் மேல் நம்பிக்கையிழந்தவர்கள், சோபியாவுக்கு எந்த ஆபத்தையும் தரத் தயங்க மாட்டார்கள்..

இவர்களால் சோபியாவுக்கு வரும் ஆபத்திற்கு தானும் ஒரு காரணமாக இருந்திருக்கிறோம்... எனவே இந்த நிலையில் சோபியாவின் அரண்மனைக்குள் புகுந்து, அவளுக்கு எந்த ஆபத்தும் நேராமல் காப்பது, தனது முதல் கடமை, என்று ஆண்டனியின் மனதில் பட்டது.

Scanned by CamScanner

அடுத்த நாள், ஆண்டனி அரண்மனையை நோக்கிச் சென்றான்.

எதேச்சையாக ஆண்டனியைக் கண்ட சோபியாவின் குழந்தை லீனா.. அவனை பல வேடிக்கைகள் செய்து காட்டும் படி ஆசையோடு கேட்டாள்.. ஆண்டனியும் பல மிமிக்கிரிகள் செய்து, குழந்தையை சந்தோஷப் படுத்தினான்.. ஆரம்பத்தில் பாசாங்குக்காக ஆண்டனி செய்த நடிப்பு.. இன்று உண்மையான பாசத்தோடு வெளிப்பட்டது.

குழந்தையைத் தேடி வந்த சோபியா, ஆண்டனியைப் பார்த்ததும் மௌனமாக நின்றாள்.. 'குழந்தை மேல் அதிக பாசம் வைத்ததற்காக இப்போதும் தன்னை சோபியா திட்டலாம்' என்று ஆண்டனி எதிர்பார்த்தான்.

ஆனால் நிலைமை வேறு விதமாக இருந்தது.

"ரொம்ப தேங்க்ஸ் ஆண்டனி... ! என் உயிரை குகை மனுஷன்கிட்டேயிருந்து நீ காப்பாத்துனதுக்காக அல்ல.. ! என் குழந்தையை அனாதையாக விடாமே என்னைக் காப்பாத்தினீயே.. அதுக்காகத்தான்! உனக்கு ஏதாவது உதவி தேவைன்னா நான் செய்யக் கடமைப் பட்டிருக்கேன்."

என்று கூறிவிட்டு, குழந்தையை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்..

அந்த நேரத்தில் சோபியாவின் அண்ணன் கிரிகாரியோ காலில் கட்டோடு அங்கே வந்தான்.. மிகவும் பெருந்தன்மையாகவே ஆண்டனியிடம் பேசினான்..

"எனக்குத் தெரியும் ஆண்டனி ! நீ செய்திகளைக் கேள்விப் பட்டு இங்கே வருவாய் என்று நான் எதிர்பார்த்தேன். நான் நினைப்பது சரிதானே ஆண்டனி.. ?"

ஆண்டனி மௌனமாக தலையாட்டிவிட்டு, "நான் இந்த அரண்மனையிலேயே சர்வ சுதந்திரமாக இரவில் தங்கவும், நடமாடவும்.. எனக்கு தங்கள் அனுமதி வேண்டும்.." என்றான்.

"தற்காலிகமாக அல்ல.. நீ நினைத்தால் இந்த அரண்மனையின் பாதுகாப்புக்காக .. இல்லை..இல்லை.. என் தங்கையின் நலனுக்காக அவசியம் நீ இங்கே இருக்க வேண்டும். உனக்குத் தெரியுமா ஆண்டனி.. நான் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று?

சின்ன வயதில் கணவனை இழந்து தவிக்கும் என் தங்கையை வைத்துக் கொண்டு என்னால் எப்படி ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு, தேன் நிலவுக்கு சுற்றித் திரிய

Scanned by CamScanner

முடியும்? சோபியா தன் குழந்தைக்காக வாழ்கிறாள்.. நான் என் தங்கைக்காக வாழ்கிறேன்..

நீ இன்று முதல் தோட்டத் தொழிலாளி அல்ல.. எங்கள் குடும்பத்தில் ஒருவன்.. உனக்கு சர்வ சுதந்திரமும் உண்டு.. கூடிய சீக்கிரம் துப்பாக்கியும் தருகிறேன்.. !''

இப்படிக் கூறி விட்டு, கிரிகாரியோ அடிபட்டக் கால்களால் நிற்க முடியாமல் தள்ளாடி, ஒரு வீல் சேரில் உட்கார்ந்தான்..

ஆண்டனி, கிரிகாரியோவுக்கு நன்றி கூறி விட்டு, அடுத்த வினாடியே தான் வந்த வேலையை கவனிக்க ஆரம்பித்தான்.

ஆண்டனி பகலில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.. 'இரவு முழுவதும் இமை மூடாமல் கண் விழிக்க வேண்டும்' என்று திட்டமிட்டான். கூடிய சீக்கிரம் மீண்டும் தன் நண்பர்கள் திரும்பி வந்து, சோபியாவை தாக்கலாம்..

இந்த முறை, அவர்கள் இன்னும் தீவிரமாக திட்டமிட்டு வரலாம். கிரிகாரியோ கொடுத்த துப்பாக்கியை வைத்துக் கொண்டு அவர்களிடம் பேசப் போவதில்லை..

ஆனால் சோபியாவை கொலை செய்யாமலேயே தன்னால் அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை நிச்சயமாகத் தெளிவு படுத்த வேண்டும்' என்ற நம்பிக்கையோடு, ஆண்டனி இரவு நேரங்களில் ஒரு சின்ன சந்தடியைக் கூட தவறாமல் கவனித்துக் கொண்டிருந்தான்.

இரண்டு மூன்று நாட்கள் எதுவுமே நடக்கவில்லை.. ஆனால் நான்காவது நாள்.....

'டடக்.. டடக்.. '

ஒரு கதவுத் திறக்கப்படும் சத்தம் ஆண்டனியின் பாம்புக் காதுகளில் கூர்மையாகக் கேட்டது. உஷாரானான்..

அவன் நினைத்திருந்தால் கூச்சல் போட்டுக் கத்தி, மற்ற காவலர்களையும் எழுப்பியிருக்கலாம்... ஆனால்.. பிடிபடப் போவது தனது இரண்டு நண்பர்கள் அல்லவா.. ? எனவே சந்தடி செய்யாமல் சத்தம் வந்த அறையை நோக்கி, காலடி ஓசை கூட கேட்காமல் மெதுவாகச் சென்றான்.

இரவு இரண்டு மணிக்கு மேலே... எல்லோரும் கண்ணயர்ந்து தூங்கும் நேரம்.. சத்தம் கேட்ட அறையின் ஜன்னல் பக்கம் பதுங்கிக் கொண்டான் ஆண்டனி..

அறைக்குள் எந்த அசைவையும் கவனிக்க முடியாதபடி ஒரே இருட்டாக இருந்தது. ஆனால் அந்த அறையில் சோபியாவின் மறைந்து போன கணவரின் பெரிய சைஸ் போட்டோவுக்கும் கீழே ஒரு சின்ன விளக்கு மட்டும் கண் சிமிட்டி, மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தது.

Scanned by CamScanner



Scanned by CamScanner

அந்த வெளிச்சத்தில் ஏதாவது நடமாட்டம் தெரிகிறதா என்று மூச்சு விடுவதைக்கூட நிறுத்திக் கொண்டு கவனித்தான் ஆண்டனி. சிறிது நேரத்தில் யாரோ நடந்து வந்த காலடி ஓசை கேட்டது. ஆனால் உருவம் தெரியவில்லை..

அந்த அறையில் இருந்த பெரிய தூண்கள் யார் வருகிறார்கள் என்பதை ஆண்டனியின் பார்வையிலிருந்து மறைத்து விட்டன.

கடைசியில் அவனுக்கு உதவியது, அந்தச் சின்னக் கண் சிமிட்டும் விளக்கு வெளிச்சம் தான்.. நடந்து வந்த உருவம் அந்த வெளிச்சத்தைக் குறுக்கிட்ட போது, ஆண்டனியால் அதை கவனிக்க முடிந்தது. கண்களை அகலப் படுத்திக் கொண்டு பார்வையை கூர்மையாக்கினான்..

அந்தச் சின்ன வெளிச்சத்தில் நடந்து வந்த அந்த உருவம் ஒருபெண் என்பதும் ஆண்டனிக்கு முதலில் புரிந்தது. நடந்து வரும் அசைவுகள், கை வீசும் பாணி இவைகள் எல்லாம் **சோபியாவை ஞாபகப்படுத்தும் வகையிலேயே** ஆண்டனிக்குப் பட்டது. அது சோபியாவாகக் கூட இருக்கலாம்..

ஆனால் ஒரு விளக்கை கூட பொருத்தாமல் அவள் இப்படி ரகசியமாக வரவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்று ஆண்டனி யோசித்துக் கொண்டிருக்கும் போதே.. அந்தச் சின்ன விளக்கின் வெளிச்சம், அந்த உருவத்தின் முகத்தில் பட்டது. **'சோபியாவேதான்...!'**

ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண்டிருக்கும் போதே சோபியாவின் அடுத்த நடவடிக்கைகள் அவனை மேலும் வியப்பின் எல்லைக்கே கொண்டு போயின.

**சோபியா, அமரரான தன் கணவரின் போட்டோவுக்கு முன்னால் மண்டியிட்டாள். பிறகு , தனது நைட் கவுன் முழுவதையும், கழற்றி வீசி எறிந்தாள்.. அந்தப் போட்டோவுக்கு முன்னால் கைகளை நீட்டி, விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.. !**

ஆண்டனி செய்வதறியாது திகைத்து நின்றான்..

# 4

**ம**றைந்து போன தன் கணவரின் ஆளுயர புகைப்படத்துக்கு முன் மண்டியிட்டு, நிர்வாணமாக கதறும், அந்த சோபியாவின் உள் மனதில் என்ன இருக்கிறது?

Scanned by CamScanner



அவளின் சின்ன வயது ஆசைகள் அவளை சித்திரவதைப் படுத்துகிறதா?

இப்படி அதிர்ச்சியுடன் ஆண்டனி, அந்த இரவு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்த போது, 'ஐயோ' என்ற ஒரு பரிதாபகரமான குரல், பண்ணை வீட்டின் வாசல் பக்கம் கேட்டது. அந்தக் குரல் கூட ஆண்டனிக்குப் பழக்கப் பட்டதாகவே காதில் ஒலித்தது. நிச்சயம் தன்னோடு ஜெயிலில் இருந்த டோர்க்கமாடாவின் குரல்தான் அது!

அடுத்த வினாடி பண்ணை வீட்டின் பாதுகாப்புக் காவலர்களின் விசில் சத்தமும், பல பேர் அங்கும், இங்கும் ஓடும் ஆரவாரமும், கேட்டது.

ஆண்டனி ஒரே தாவலில் சோபியாவின் கண்களில் படாமல் அங்கிருந்த கைப்பிடிச் சுவரை எட்டிக் குதித்து



Scanned by CamScanner

ஆரவாரம் கேட்ட வாசல் பக்கம் ஓடினான்.

பாதுகாப்புக் காவலர்கள் சுற்றிச் சூழ்ந்திருக்க, ஆண்டனியின் ஜெயில் நண்பர்கள் டோர்க்கமாடாவும், லூஜியும் நடுவில் பரிதாபமாக நின்றிருந்தார்கள்.

ஆண்டனிக்குப் புரிந்து விட்டது. இரண்டாவது முறையும் அந்த இரண்டு ஜெயில் நண்பர்களும் சோபியாவின் கழுத்தில் தொங்கும் சாவியைக் களவாட வந்திருக்கிறார்கள். அவசரப்பட்டு மாட்டிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் சோபியாவின் அண்ணன் கிரிகாரியோவும் காலில் பேண்டேஜ் கட்டோடு வீல் சேரில் உட்கார்ந்தபடி அந்த இடத்துக்கே வந்து விட்டான்.

வரும் போதே கோபத்தோடு கத்திக் கொண்டே வந்தான்.

"தப்பி ஓடி விடாமல் அவர்களின் கையைக் கட்டுங்கள். உயிர் மட்டும் போகாத அளவில் நையப் புடையுங்கள். யார் அவர்கள்? எதற்காக இங்கே வந்தார்கள்? ஒவ்வொரு விஷயமும் தெளிவாகத் தெரிகிற வரை போலீஸில் கூட ஒப்படைக்க வேண்டாம்.

பாதுகாப்புக் காவலர்கள் இந்த வார்த்தையைக் கேட்டதும் மேலும் அவர்களுக்கு ஆக்ரோஷம் பிறந்தது.



Scanned by CamScanner

ஹூஜியின் வயிற்றில் காலால் எட்டி ஒரு உதை விட்டான் ஒருவன். இன்னொரு காவலாளி, டோர்க்கமாடாவின் நீளமான தலைமுடியைப் பற்றி இழுத்து, அருகில் இருந்த தூணில் தலையை 'ணங்'கென்று மோதினான்.

இரண்டு பேரும் ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனம் சாதித்தார்கள்.

இருட்டான ஒரு தூண் மறைவிலிருந்து இது வரை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த ஆண்டனி, திடீரென்று வெளிப்பட்டவன், கத்த ஆரம்பித்தான்.

"அடேய் டோர்க்கமாடா! என் உயிர் நண்பனே.. என்னடா இது? எதுக்காக இவங்க அடிக்கறாங்க? ஏண்டா ஹூஜி.. என்னைப் பார்க்க ரொம்ப நாளா வர்றேன், வர்றேன்னு சொல்லிட்டு இருந்தியே! இப்படி உதை படறதுக்கா வந்து சேர்ந்திருக்கீங்க?

முட்டாள் ஜென்மங்களே! என்னைத் தேடி என் குவாட்டர்ஸுக்கு வந்தவங்க, அங்கேயே இருக்க வேண்டியதுதானே? இந்த அர்த்த ராத்திரியில ஏண்டா என்னைத் தேடி இங்கே வந்தீங்க?

இந்த பண்ணை வீட்டுல கொள்ளை அடிக்கறதுக்குன்னு ரெண்டு பேரு சுத்திக்கிட்டு திரியற இந்த நேரத்துல நீங்க வந்து செமையா அடி வாங்கிட்டீங்களேடா! அறிவு கெட்டவனுங்களா! பாதுகாப்பு காவலாளிங்க 'யாரு, என்ன'ன்னு கேட்டவுடனே ஆண்டனியை பார்க்கத்தான் வந்திருக்கிறோம்ன்னு சொன்னீங்களா? சொல்லியிருந்தா இப்படி அடிச்சிருப்பாங்களா?

எனக்கு இந்த பண்ணை வீட்டுல கிரிகாரியோ சார் எவ்வளவு செல்வாக்கு கொடுத்திருக்காருங்கறது அந்த காவலாளிங்களுக்கு தெரியாதா என்ன? பேசுங்கடா.. அதான் மூக்குலயும், வாய்லயும் ரத்தம் ஒழுகுதே..இனியாவது தைரியமா பேசுங்கடா.."

இப்படி கடகடவென்று ஆண்டனி, அந்த இரண்டு பேரும் தப்பிக்கும் உபாயத்தை அவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் பேசி முடித்து விட்டு, அவசரமாக ஓடி அந்த இரண்டு நண்பர்களின் கைக் கட்டுக்களை, துணிச்சலாக அவிழ்க்க ஆரம்பித்தான்.

ஆண்டனியின் தடுமாற்றமில்லாத பேச்சும், துணிச்சலான நடவடிக்கையும், காவலர்களுக்கே, 'தாங்கள் சரியாக விசாரிக்காமல் தவறு செய்து விட்டோமோ' என்று அச்சத்தை ஏற்படுத்தியது.

ஆண்டனியின் பேச்சு, கிரிகாரியோவையும் ஒரே நொடியில் குழப்பிவிட்டது.

Scanned by CamScanner

கிரிகாரியோ கண்களை சுருக்கியபடி ஆண்டனியைப் பார்த்து,

"என்ன ஆண்டனி? இந்த இரண்டு பேரும் உன் நண்பர்களா? இதை உடனே அவர்கள் சொல்ல வேண்டியதுதானே? அவர்கள் என்ன ஊமையா? இன்னும் பேசாமல் நிற்கிறார்களே?"

ஆண்டனி உடனடியாக கிரிகாரியோ நம்பும்படி சமாளிக்க ஆரம்பித்தான்.

"சார்! நீங்க சொல்றது கரெக்ட்தான். இவங்க ரெண்டு பேரும் ஏறத்தாழ ஊமையனுங்கதான்! என் சின்ன வயசு கிராமத்து சிநேகிதங்க. டவுன் பக்கம் அதிகம் போய் பழக்கம் இல்லாதவங்க.

உண்மையைச் சொல்லணும்ன்னா, நீங்க எனக்குக் கொடுத்த செல்வாக்குல தான், நான் இந்த அரண்மனையில இப்ப நின்னுக்கிட்டு இருக்கேன். நீங்க மட்டும் இல்லைன்னா, நானும் இவங்களைப் போலத்தான்.. அதட்டிக் கேக்கற கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாம எங்கேயாவது அனாதையா, ஊமையா நின்னுட்டிருப்பேன்!"

ஆண்டனியின் உணர்ச்சி மயமான இந்த வார்த்தைகள் கிரிகாரியோவை மனம் இளக வைத்து விட்டது. அடுத்த அரை மணி நேரத்தில், அந்த இரண்டு நண்பர்களின் அடிபட்ட காயங்களுக்கு மருந்து போடப்பட்டு, அவர்கள் ஆண்டனியின் நண்பருக்கு உண்டான செல்வாக்கோடு தனியறையில் விருந்தினர்களாக கவனிக்கப் பட்டார்கள்.

அந்த அறையிலிருந்து கிரிகாரியோவும், காவலர்களும் வெளியேறிய போது, ஆண்டனியே எதிர்பாராத செயலை அந்த இரண்டு நண்பர்களும் செய்தார்கள்.

விம்மி அழுதபடி அந்த இரண்டு பேரும், ஆண்டனியின் கால்களை கட்டிப் பிடித்தபடி குலுங்கி, குலுக்கி, அழுதார்கள்.

ஆண்டனியால் கூட அதிகம் பேச முடியவில்லை. அந்த அப்பாவி நண்பர்களின் ஒவ்வொரு தவறுக்கும், அர்த்தம் ஆண்டனிக்கும் தெரிந்துதானே இருந்தது! ஆதரவாக அந்த இரண்டு நண்பர்களின் முதுகையும் தட்டிக் கொடுத்தான்.

"என்னை நம்புங்கள். கொஞ்சநாள் பொறுங்கள். உங்கள் எண்ணத்தை என்னால் ஈடேற்றி வைக்க முடியும்!"

ஆண்டனியின் மேல் இப்போது முழு நம்பிக்கை அடைந்த அந்த இரண்டு நண்பர்களும் வெகு நாட்களுக்குப் பிறகு அந்த ஆடம்பரமான அறையில், கொஞ்சம் நிம்மதியாக பயமின்றி கண்களை மூடித் தூங்கினார்கள். ஆண்டனியின்

Scanned by CamScanner

மனம் மட்டும் பரபரத்தது. இந்த நண்பர்களின் விஷயத்தை விரைவாக செயல்படுத்தி விட வேண்டும்.

அடுத்த நாள், ஆண்டனிக்கு அவன் நினைத்தபடியே சோபியாவுடன் பேசக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்தது.

குழந்தை லினாவுடன் ஒரு மான் குட்டியைப் பிடித்து, ஆண்டனி விளையாட்டு காட்டிக் கொண்டிருந்த போது, சோபியா மௌனமாக ஆண்டனிக்கு அருகில் வந்தாள்.

**ஆண்டனியால் சோபியாவின் முகத்தை ஏனோ ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை.**

**அது சோபியாவின் மேல் ஏற்பட்ட பரிதாப உணர்வா? அல்லது சோபியாவின் அந்தரங்க உணர்வுகளை, நேற்று இரவு அவளுக்குத் தெரியாமல் அத்துமீறி பார்த்த ஒரு குற்ற உணர்வா? இரண்டில் எது சரியென்று ஆண்டனியாலும் நிச்சயிக்க முடியவில்லை.**

சோபியாவேதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

"என்ன ஆண்டனி, நேற்றிரவு உன் அப்பாவி நண்பர்களை, காவலாளிகள் அனாவசியமாக அடித்து விட்டார்களாமே..."

ஆண்டனியும் சிரித்துக் கொண்டே,

"அப்பாவிகளாக இருந்தால் பரவாயில்லை. என் நண்பர்கள் வடிகட்டின முட்டாள்களாக அல்லவா இருக்கிறார்கள்!"

"எப்படியோ தவறு நடந்து விட்டது. மன்னித்துக் கொள் ஆண்டனி. மேற்கொண்டு அவர்களை நன்கு உபசரிக்க வேண்டியதும் உன் பொறுப்புத்தான்!"

இப்படி சோபியா சுமுகமாக பேசிய சூழ்நிலை, ஆண்டனிக்கு மிகவும் சாதகமாக இருந்தது. இது நல்ல தருணம். நண்பர்களுக்காக இப்போதே பேசி விடுவது நல்லது. சற்று தயங்கிய ஆண்டனி,

"மேடம், உங்களிடம் மறைக்காமல் சொல்கிறேன். எனக்கு ஒரு அவசரமான உதவி வேண்டும்."

"அவசரமான உதவி என்கிறாய்..., இப்படி நிதானமாக கேட்கிறாயே? சொல் ஆண்டனி! உன் பாதுகாப்புக்கு இன்னும் அதிகமான ஆட்கள் தேவையா? இல்லை, நீ ஏதாவது சொன்னால் அதைப் புரிந்து கொள்ளாமல் என் அண்ணன் கிரிகாரியோ உனக்கு இடைஞ்சல் பண்ணுகிறாரா?"

ஆண்டனி வெகு அவசரமாக குறுக்கிட்டு,

"அதெல்லாம் இல்லை மேடம். நான் கேட்கும் உதவியை

Scanned by CamScanner

நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்! அதுவும் மிகவும் அதிகமானது என்று கூட நீங்கள் நினைக்கலாம். ஆனால் இப்போதே ஒன்றைச் சொல்லி விடுகிறேன். அந்த உதவி எதற்காக என்று நீங்கள் என்னிடம் காரணத்தைக் கேட்கக் கூடாது.''

"வெரி குட் ஆண்டனி! சுவாரஸ்யமாகவே பீடிகை போடுகிறாயே! எதற்காக இப்படி அந்நியனைப் போல் சுற்றி வளைக்கிறாய்? நேரடியாக உனக்கு எந்த உதவி வேண்டுமோ கேள்!''

ஆண்டனி, தன்னருகில் ஓடி வந்த குழந்தை வினாவை இரண்டு கைகளாலும் வாரி அணைத்து, ஆசையாக ஒரு முத்தம் கொடுத்து விட்டு, தோள்களில் அணைத்தப்படி சோபியாவின் முகத்தைப் பார்க்க முடியாமல், வேறு திசையைப் பார்த்துக் கொண்டே, "மேடம்.. எனக்கு ஐந்து லட்சம் விரா வேண்டும்!''

சோபியா சற்று நேரம் பதில் பேசவில்லை.

சோபியாவின் அந்தஸ்துக்கு இந்தப் பணம் ஒன்றும் பெரிய தொகை இல்லைதான். அப்படி இருக்கும் போது, சோபியா ஏன் இப்படி மௌனமாக தயங்குகிறாள் என்று பொருள் புரியாது சோபியாவின் முகமாற்றங்களை கவனிக்க, அவள் பக்கம் திரும்பினான், ஆண்டனி.

சோபியாவின் கண்களில் கண்ணீர் திரண்டு நின்றது. அவள் உதடுகள் சோகத்தால் லேசாக அதிர்வடைந்தன. சோபியா தலையைத் தாழ்த்தியபடியே தொண்டை அடைக்க கேட்டாள்.

"ஆண்டனி... நீ எனக்குச் செய்த உதவிகளுக்கு கேவலம் இந்த ஐந்து லட்சம் விராக்களை ஆதாயமாக பெற்றுக் கொண்டு காரண, காரியத்தைக் கூட சொல்லாமல் என்னையும், என் குழந்தையையும் விட்டு, நிரந்தரமாக ஓடி விட நினைக்கிறாயா? முடியாது ஆண்டனி! உனக்கு நான் பணம் தர மாட்டேன்!''

சோபியாவின் மனதில், தான் கேட்ட பணம், இப்படி ஒரு கோணத்தை சித்தரிப்பதை ஆண்டனி சற்றும் எதிர்பார்க்கவில்லை!

குழந்தை வினாவுடன் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்த, சோபியாவின் வாழ்வில்தான் குறுக்கிட்டு சலனத்தை ஏற்படுத்திவிட்டோமோ? என்றாவது ஒரு நாள் நாமும் சட்டப்படி கிரிமினல் குற்றவாளி தான் என்று தெரிய வரும் போது நம் நிலை என்ன?

இவைகள் எல்லாம் அறிந்து கொள்ளாத இந்த சோபியா

Scanned by CamScanner

நம் மேல் ஏதேனும் ஒரு வகையில் பாசம் வைக்க இடம் தருவது கூட பின்னால் தேவையில்லாத பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுமே!

சரி... இந்த சூழ்நிலையில் நண்பர்களுக்காக பணம் கேட்பதோடு, சோபியாவின் நலனுக்காகவும் சில வார்த்தைகள் கூறி விடுவது நல்லது.'

இப்படி சிந்தித்த ஆண்டனியின் மனதில், நேற்று இரவு சோபியா தன் கணவரின் புகைப்படத்துக்கு முன், உடைகளை களைந்து போட்டு விட்டு கண்ணீர் வடித்தது ஞாபகத்துக்கு வந்தது. ஆண்டனி நிதானமாக பேச ஆரம்பித்தான்.

"இதோ பாருங்கள் மேடம்! என்னைப்பற்றிய பல விஷயங்களை நான் இப்போது உங்களிடம் சொல்ல முடியாத நிர்பந்தத்தில் இருக்கிறேன். இருந்தாலும், உங்களைப் பற்றிய சில விஷயங்களை நான் ஒளிவு மறைவின்றி, மறைக்காமல் உங்களிடம் விவாதிப்பது நல்லது என்று நினைக்கிறேன். இந்த சின்ன வயதில் நீங்கள் ஏன் மறுமணம் செய்து கொள்ளவில்லை?"

இப்படி ஆண்டனி கேட்டவுடன், சோபியா தன்னை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டு, ஆண்டனியின் கண்களை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள். பிறகு ஏராளமான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் முகத்தில் பரவ, தலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"சொல்லுங்கள் மேடம்! போலியான ஒரு வாழ்க்கை வாழ்வது உங்களுக்குப் பிடிக்காது என்று நம்புகிறேன். உங்கள் வயதுக்கும், உங்கள் செல்வாக்குக்கும், நீங்கள் உயிரையே வைத்திருக்கும் குழந்தை லீனாவுக்கும் பாதுகாப்பாக இருக்கும்படி, ஒரு நல்ல இளைஞனை நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது?

அது ஒரு பாவமான செயல் என்று கருதுகிறீர்களா? பேசுங்கள் மேடம். எனக்கு இந்த மாளிகையில் இடப்பட்ட கட்டளை, காவல் காப்பதுதான். நேற்று இரவு ஏதோ ஹாலில் சத்தம் கேட்டு கண்காணிக்கத்தான் சென்றேன்.. ஆனால் என் கண்ணில் பட்ட காட்சி என்னைத் திக்கு முக்காட வைத்துவிட்டது.

**நீங்கள் உடைகளை களைந்து வீசி விட்டு, மறைந்து போன உங்கள் கணவரின் ஃபோட்டோவுக்கு முன் மண்டியிட்டு கண்ணீர் விட்டதை நான் பார்த்தேன். எதற்காக நீங்கள் உங்களின் சின்ன வயது உணர்ச்சிகளுடன், இப்படி சித்திரவதைப் படுகிறீர்கள்?"**

ஆண்டனியின் பேச்சுக்கள் சோபியாவை நிலை குலைய வைத்தது. அவள் அப்படியே இடிந்து போய் கீழே

Scanned by CamScanner

உட்கார்ந்தாள். குலுங்கிக் குலுங்கி கொஞ்ச நேரம் அழுதாள். மனம் விட்டு அவள் அழுவது ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு ஆண்டனி காத்திருந்தான்.

சிறிது நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட சோபியா, முதல் காரியமாக, தாதியை கூப்பிட்டு, தன் குழந்தை லீனாவுக்கு பால் கொடுத்து, தொட்டிலில் போட்டு தூங்க வைக்கும்படி பணித்தாள்.

அப்போது –

**இன்னும் சில வினாடிகளில் தொட்டிலில் தூங்கப் போகும் குழந்தை லீனாவுக்கு வரப் போகும் ஆபத்தை சோபியாவும் உணரவில்லைதான்.**

குழந்தை லீனா, ஆண்டனியை விட்டுப் பிரிய மனமில்லாமல் சிறிது நேரம் அடம் பிடித்தது. கடைசியாக இரண்டு முறை, அவன் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டுவிட்டு, அம்மாவுக்கு, கோபத்தோடு 'வெவ்வெவ்வே' காட்டி விட்டு, தாதியோடு சென்றது.

சோபியா அந்த பூங்காவில், யோசனையோடு சிறிது தூரம் நடந்தாள். ஆண்டனியும் பொறுமையாக பேசாமல் காத்திருந்தான். தனது புனிதமான அந்தரங்க உணர்ச்சிகளை, அந்நியன் ஒருவன் முதல் முறையாக பார்த்து விட்டான். அதோடு, துணிச்சலாக ஒரு நியாயமான கேள்வியையும் அவன் கேட்கிறான்.

'தனது வாழ்க்கையின் எந்தப் பகுதியை, இந்த அந்நியனிடம் சொல்லி விளங்க வைப்பது?' என்ற மனக் குழப்பம் அவள் முகத்தில் இழையோடியதை ஆண்டனியும் புரிந்து கொண்டான்.

சிறிது நேரத்தில், சோபியா திரும்பி வந்தாள். ஆண்டனியின் முகத்தை நேரடியாக பார்க்க முடியாமல் வேறு திசையில் பார்த்துக் கொண்டே,

"மிஸ்டர் ஆண்டனி, நீ நினைப்பது போல் நான் எனது இளமையான வயதினால் சித்திரவதைப் படவில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்.

'இந்த வட்டாரம் முழுவதும் நான் ஒரு வித்தியாசமான பெண் என்று பாராட்டப்பட வேண்டும்' என்பதற்காக நான் மறுமணம் செய்யாமலும் இல்லை.

நான் இன்றைக்கும் என் கணவரோடு வாழ்கிறேன். எல்லோரும், அவரை சவப்பெட்டியில் வைத்து அதன் மேல், மலர் கொத்தை வைத்ததோடு என் கணவரின் கதை முடிந்து விட்டது என்று கருதுகிறார்கள்.

Scanned by CamScanner

நான் அப்படி நினைக்கவில்லை. நான் இன்னும் அவரை நேசிக்கிறேன்... அவரும் என்னை அளவுக்கு அதிகமாக நேசிக்கிறார் என்று நம்புகிறேன்..

அதே சமயம் எனக்கு, ஏதோ மனோ வியாதி பீடித்திருப்பதாக வீணாக கற்பனை செய்து கொள்ள வேண்டாம். நான் தெளிவாக இருக்கிறேன். செய்வது இன்னதென்று, சுயநினைவோடு தெரிந்தே செய்கிறேன்.

எனவே, நான் ஒரு காலமும் மறுமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லை. **இதற்கு மேல் இந்த விஷயத்தில் நீ தலையிடுவதையே உண்மையில் நான் விரும்பவில்லை!''**

சோபியாவின் பேச்சுக்கள், ஆண்டனியையும் சிந்திக்க



Scanned by CamScanner

வைத்தது.. கொஞ்சம் குழப்பம் அடையவும் செய்தது.

அப்போது, குழந்தை லீனாவை அழைத்துக் கொண்டு போன தாதி, கூச்சலும், குழப்பமுமாக ஓடி வந்தாள்.

**"ஹெல்ப்... ஹெல்ப்.. குழந்தை லீனாவை தொட்டிலோடு அந்த குகை மனிதன் தூக்கிக் கொண்டுப் போகிறான். காப்பாற்றுங்கள்.... காப்பாற்றுங்கள்....."**

என்று கத்தினாள்.

**தொ**ட்டிலை, கொசுவலையோடு சுருட்டிப் பிடித்துக் கொண்டு, அந்த குகை மனிதன் பதுங்கிப் பதுங்கிப் போய்க் கொண்டிருந்தான்.



Scanned by CamScanner

கூன் விழுந்த, அவனது தோற்றத்தையும், கை கால்களில் ரோமம் வளர்ந்த உருவத்தையும் பார்த்து, நந்தவனத்தில் இருந்த மான்கள் மிரண்டு குதித்து ஓடின. புறாக்கள் அச்சத்தோடு சிறகடித்து அப்பால் நகர்ந்தன. தாதியின் அபயக் குரல் கேட்டு, நான்கைந்து காவலாளிகள் கையில் ஈட்டியோடு குகை மனிதனை நெருங்கினார்கள்.

அதைக் கண்ட குகை மனிதன், செய்த செயலைப் பார்த்து அந்தக் காவலாளிகள் பயத்தோடு பின் வாங்க ஆரம்பித்தார்கள்.

தன்னைக் காவலாளிகள் தாக்க வருகிறார்கள் என்பதை தெரிந்து கொண்ட குகை மனிதன், கொசுவலையால் சுருட்டிப் பிடித்துக் கொண்டிருந்த தொட்டிலை மூர்க்கத்தனமாக ஒரு கைப்பிடிச் சுவரில் மோதினான் கைப்பிடிச் சுவரில் இருந்த ஒரு செங்கல் இரண்டு மூன்று துண்டுகளாக நொறுங்கிக் கீழே விழுந்தது.

இதைப் பார்த்த சோபியா, பயத்தின் எல்லையில்... உச்சஸ்தாயியில் தன்னை மறந்து கத்தி விட்டாள்!

இன்னும் சிலர், தொட்டிலிலிருந்து குழந்தை சத்தம் போடாததால், 'ஒரு வேளை குகை மனிதன், குழந்தை லீனாவை கொன்றிருக்கலாம்' என்று கூட அச்சப்பட்டனர்.

இந்தப் பரபரப்புக்களைக் கேட்ட கிரிகாரியோ கூட, வீல் சேரில் உட்கார்ந்தபடி அவசர அவசரமாக அந்தத் தோட்டத்துப் பக்கம் வந்து விட்டான்.

லீனாவின் தொட்டிலோடு குகை மனிதன், நந்த வனத்தில் பூக்கள் நிறைந்த செடிகள் மறைவில் நாலு கால் பாய்ச்சலில் ஓடுவதைப் பார்த்து, தன் பணியாட்களுக்கு கிரிகாரியோ அவசரமாக் கட்டளையிட்டான்.

"ஓடிச் சென்று அவனைப் பிடியுங்கள்...."

அத்தோடு கிரிகாரியோவும், தனது கால் அடிபட்ட நிலையையும், தான் வீல் சேரில் உட்கார்ந்திருப்பதையும் மறந்து, குகை மனிதனை நோக்கி இரண்டு மூன்று அடிகள் எடுத்து வைத்து ஓட ஆரம்பித்தான்.

ஆனால் அடிபட்ட காலால் அவனால் ஓட முடியாததால், தள்ளாடி கீழே விழப் போனான். ஆண்டனி ஓடிச் சென்று, அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டான்.

கிரிகாரியோவின் கட்டளையைக் கேட்ட, சில காவலாளிகள் மட்டும், குகை மனிதனை நோக்கிப் பாய ...ரம்பித்தார்கள்.



...அதைப் பார்த்த குகை மனிதன், சட்டென்று நின்று ...வினான்.

"தயவு செய்து எல்லா காவலர்களும் குழந்தை லீனாவின் உயிரை மனதில் வைத்துக் கொண்டு, பின் வாங்குங்கள். நான் எப்படியாவது குழந்தையைக் காப்பாற்ற முயற்சிக்கிறேன்..!" என்று கூறிய ஆண்டனி, காவலாளியின் கையில் இருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு, குகை மனிதனை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

அப்போது யாருமே எதிர்பார்க்காத ஒரு ஆச்சரியம் நடந்தது!

**"ஆண்டனி... இதோ.... நான் இங்கே இருக்கிறேன்.." என்று மழலை கொஞ்ச, லீனா கத்திக் கொண்டே வெளிப்பட்டாள்!**



லீனாவின் குரலைக் கேட்ட, ஆண்டனி, குகை மனிதனைப் பின் தொடர்வதை விட்டுவிட்டு, ஆனந்தப் பரவசத்தோடு, லீனாவை உற்றுப் பார்த்தான்.

'லீனா, குகை மனிதனின் கையில் இல்லை. அவள் பத்திரமாக இருக்கிறாள்.' என்ற சந்தோஷம் எல்லோரையும் தொற்றிக் கொண்டது.

ஆண்டனி துப்பாக்கியை வீசி எறிந்து விட்டு, குழந்தையை நோக்கி ஓடி வந்து, அவளை அப்படியே கட்டிப் பிடித்து, தூக்கி மாறி மாறி முத்தமிட்டான்.

சோபியாவும் குழந்தையை நோக்கி ஓடி வந்தாள். குழந்தையைப் பார்த்து நாக்கு குழறக் கேட்டாள்.

"ஏம்மா.... நீ... பால் குடிச்சுட்டு தொட்டில்ல தானே தூங்கினே...? அப்புறம் எப்படி நீ... ? எப்படி நீ...?"

Scanned by CamScanner

என்று தடுமாற்றத்தோடு கேட்டாள்.

அதற்கு அந்த லீனா சொன்ன மழலை மாறாத பதில் எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

**"நீ தானே மம்மி, ஆண்டனி கூட விளையாடிட்டிருந்த என்னை தொட்டில்ல போடச் சொன்னே.. எனக்கு அதனால கோவம் கோவமா வந்தது. ஆண்டனியைப் பார்க்கணும்னு ஆசை ஆசையா இருந்தது... அதனால நான் ஆயாவை ஏமாத்திட்டு, தொட்டிலை விட்டு இறங்கி வந்துட்டேன்..!"**

நடந்தது என்ன என்பது எல்லோருக்கும் புரிந்து விட்டது. கிரிகாரியோ உருக்கமாக வீல் சேரில் உட்கார்ந்தபடி, ஆண்டனியைப் பார்த்து,

**"ஆண்டனி ..... உன் மேலே குழந்தை லீனா வச்ச பாசம்தான் அவளைக் காப்பாற்றியிருக்கு.. கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.. ... !" என்று நா தழுதழுக்க கூறினான்.**

எதைப் பற்றியும், யார் பேசுவதைப் பற்றியம் லட்சியம் செய்யாமல், ஆண்டனி குழந்தையை மாறி மாறி முத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

சோபியா என்ன நினைத்தாள் என்பது யாருக்கும் புரியவில்லை.. தன் உயிருக்குயிரான குழந்தை – தெய்வாதீனமாக – **ஆண்டனியின் மேல் வைத்த ஒரு அபரிமிதமான பாசத்தால்** காப்பாற்றப்பட்டாள் என்பதில், சோபியா மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுப் போனாள்.

குழந்தை லீனாவை வாரி அணைத்து கொஞ்ச வந்தவள்.. குழந்தை லீனா தன் கைக்குக் கிடைக்காதபடி ஆண்டனி அவளை தன் தோளிலும் மார்பிலும் வைத்து மாறி மாறி முத்தமிடுவதைப் பார்த்தாள்.

**அடுத்த கனம் சோபியா.. யாரும் எதிர்பாராத நிலையில் ஆண்டனியின் கைகளில் , மார்பில், கன்னத்தில், நெற்றியில் மாறி மாறி முத்தமிட்டாள் !**

'டுமீல்... டுமீல்..'

அந்தப் பண்ணை வீடே அதிரும்படி துப்பாக்கி சத்தம் கேட்டது.

குழந்தை லீனா, குகை மனிதனின் கையில் உள்ள தொட்டிவில் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட இரண்டு மூன்று காவலர்கள், துணிச்சலாக துப்பாக்கியோடு குகை மனிதனை பின் தொடர்ந்து போனார்கள்.

அடுத்துள்ள சாக்கோ நதிக் கரையில், அந்த குகை மனிதன், தாவித் தாவி ஓடுவதைப் பார்த்தவுடன், ஒரு

Scanned by CamScanner

காவலாளி குறி தவறாமல் குகை மனிதனைப் பார்த்து சுட்டான்.

நிச்சயம் குண்டு, குகை மனிதனின் தோள் பட்டையை தாக்கியிருக்க வேண்டும். கர்ஜனை செய்தபடி அந்த குகை மனிதன் இரண்டு மூன்று தடவை தள்ளாடி, நதியில் விழுந்தான்.

சாக்கோ நதியில் குகை மனிதன் விழுந்ததைப் பார்த்து, அவனைப் பிடிக்க கூட்டமாக சென்றவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் மென்டோஸா தாத்தாவும் இருந்தார்.

சாக்கோ நதியின் கரையோரத்தில் ரத்தச் சொட்டுக்கள் தென்பட்டதாம். எவ்வளவோ நேரம் ஆற்றில் தேடியும் குகை மனிதன் சடலம் கிடைக்காததால், அவன் தப்பியிருக்க வேண்டும் என்றே எல்லோரும் யூகித்தனர்.

மென்டோஸா தாத்தா மட்டும், மிகுந்த யோசனையோடு ஆண்டனிக்கு அருகில் வந்தார்.

"ஆண்டனி! தோட்டத் தொழிலாளியாக, எங்களில் ஒருவனாக நீ இருந்தாலும், இப்போது சோபியாவின் மெய்க் காப்பாளனாக விசுவாசத்தோடு நடந்து கொள்வதைப் பார்த்து, சந்தோஷப் படுகிறேன். புதிதாக வேலைக்குச் சேர்ந்த உன்னைப் பற்றிக் கூட, நான் சந்தேகப்பட்டது உண்டுதான்!

**ஆனால் இப்போது குகை மனிதனைப் பற்றிய ஒரு முக்கியமான ரகசியத்தை உன்னிடம் தனியாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.**

உனக்காக நாளைக் காலையில் திராட்சைத் தோட்டத்தில், எல்லைச்சுவர் அருகே, பழங்கால கல் குடிசையில் காத்துக் கொண்டிருக்கிறேன்.

உன்னைப் போன்ற ஒரு நம்பகமான ஆளிடம், அதை சொல்லி விட்டால்தான் என் மனப் பாரம் குறையும் என நம்புகிறேன்.." என்று தனது தாடியை உருவி விட்டபடி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டே சொல்லிவிட்டு மென்டோஸா தாத்தா புறப்பட்டார்.

அவரது வயதும், அனுபவமும், அவர் பேசிய வார்த்தைகளில் தெரிந்த ஆதங்கமும், ஆண்டனியின் மனதை வெகுவாக பாதித்தன.

அப்போது கிரிகாரியோ, வீல் சேரில் உட்கார்ந்து நகர்ந்தபடி ஆண்டனிக்கு அருகில் வந்தான். கிரிகாரியோவிடம் மென்டோஸா தாத்தாவுக்கு ஒரு சின்ன உதவி செய்யும்படி, ஆண்டனி அப்போது வேண்டினான்.

"என்ன?" என்று கிரிகாரியோ கேட்டான்.

Scanned by CamScanner

“சுவையான வறுத்த கறியும், ஒரு பாட்டில் திராட்சை மதுவும் அந்தத் தாத்தாவுக்கு கொடுத்து அனுப்புங்கள்!'' என்றான் ஆண்டனி.

“உடனே தரச் சொல்கிறேன்.. மென்டோஸா கிழவன் நீண்ட நாட்களாக நம் பண்ணையில் நம்பிக்கைக்குரியவனாக இருந்திருக்கிறான். அவனுக்குக் கொடுப்பதில் தப்பில்லை!''

என்று கிரிகாரியோவும் மென்டோஸா தாத்தாவை பாராட்டினான்.

“உண்மைதான் சார.. அத்தோடு அந்த மென்டோஸா தாத்தா, குகை மணி ஈனைப் பற்றிய ஒரு முக்கியமான ரகசியத்தை, தெரிந்து வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன்.'' என்று ஆண்டனி சூசகமாகச் சொன்னான்.

கிரிகாரியோவின் முகத்திலும் ஒரு ஆச்சரியம் பரவியது. அடுத்த கணமே, ஆண்டனியின் வேண்டுகோள்படி பணியாட்கள் மூல, மெண்டோஸா தாத்தாவுக்கு ராஜோபசாரம் செய்ய கிரிகாரியோ கட்டளையிட்டான்.

‘அடுத்த நாள் நல்லபடியாக விடிய வேண்டும்’ என்ற பிரார்த்தனையுடன் ஆண்டனி, தன் அறையில் படுக்கப் போனான்.. இரவு நடுச் சாமத்தை தாண்டியிருக்கலாம். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ஆண்டனியின் அறைக் கதவு தட்டப்பட்டது.

கதவு தாழிடப் படவில்லை. காரணம் ‘எந்த நிமிடமும் மற்றவர்களின் காவலுக்கு ஓட வேண்டிய சூழ்நிலையில் ஆண்டனி இருந்ததால், அவன் தன் கதவுக்கு ஒரு காவல் போட்டுக் கொள்ளவில்லை.

படுக்கையில் இருந்தபடி, ஆண்டனி அசதியோடு கண் விழித்தான். கதவு திறந்தது. அழுது சிவந்த விழிகளோடு, சோபியா கதவைத் திறந்து கொண்டு வந்தாள். அவளது கையில் அவளது கஜானாவின் சாவி இருந்தது.

இரண்டே வார்த்தைகள் தான் ரத்தினச் சுருக்கமாக பேசினாள்.

“ஆண்டனி! என் உயிர், உடமை, வாழ்க்கை எல்லாமே என் குழந்தை லீனாதான். லீனா உன் மேல் வைத்த பாசத்தால் இன்று மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டாள். இதற்கு ஈடாக, உனக்கு நான் எதைச் செய்ய விரும்பினாலும் அது இணையாகாது.

நேற்று நீ என்னிடம் ஏதோ ஒரு உதவியைக் கேட்டாய். காரணகாரியம் தெரியாமல் அதைப் பற்றி நான் உன்னிடம் விவாதித்திருக்கலாம். இப்போது எனக்கு எந்த காரண

Scanned by CamScanner



காரியமும் தெரிய வேண்டிய அவசியமில்லை. இதோ என் கஜானாவின் சாவியை, உன் முன்னால் வீசிவிட்டுப் போகிறேன்...

தேவையானதை எடுத்துக் கொள்... அதே சமயம் எக்காரணம் கொண்டும் என் புனிதமான அந்தரங்க விஷயங்களில் நீ தலையிடாதே..! கேள்வியும் கேட்காதே.."

என்று கூறி விட்டு, சாவிக்கொத்தை ஆண்டனியின் படுக்கை மேல் போட்டுவிட்டு, வந்த வேகத்திலேயே திரும்பிப் போய் விட்டாள் சோபியா.

சோபியா பேசிய வார்த்தைகளை ஜீரணிக்க ஆண்டனிக்கு இரண்டொரு நிமிட அவகாசம் தேவைப்பட்டது. ஆண்டனியின் தோள்கள் மேல் இரண்டு மூன்று பொறுப்புகள் அழுத்திக் கொண்டிருப்பது அவனுக்கே தெளிவாகத் தெரிந்தது.

'இப்போதைக்கு, தனது இரண்டு அப்பாவி நண்பர்களைக் காப்பாற்றுவது, ஓரளவு சிக்கல்களை சுலபமாக்கும்' என்று ஆண்டனி முடிவெடுத்து விட்டு, கஜானாவை நோக்கித் துணிச்சலாக நடந்தான்.

பாதுகாப்பான பல ரகசிய அறைகளைக் கடந்துதான், ஆண்டனி போக வேண்டியிருந்தது. அந்த வீட்டின் ஒட்டு மொத்த ரகசியங்களையும் சோபியாவின் பாதுகாப்புக்காக அவன் முன்பே தெரிந்து வைத்திருந்தான்.

கஜானாவைத் திறந்து ரொக்கமாக ஐந்து லட்சம் விராக்களை மட்டும் மிகச் சரியாக கணக்கிட்டு எடுத்துக் கொண்டான்.

Scanned by CamScanner

அந்த கஜானாவில் விலையுயர்ந்த வைரக் கற்களும், புராதனமான நகைகளும் ஏராளமாக இருந்தன.

**கஜானாவைப் பூட்டும் பொழுது, சற்று தூரத்தில் ஏதோ ஒரு சின்ன சத்தம் கேட்டது. உஷாராகித் திரும்பினான்.**

தூரத்திலிருந்த ஒரு ஜன்னல், காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தது.

'கஜானா இருக்கும் அறையில் ஜன்னலை இவ்வளவு அஜாக்கரதையாக மூடாமல் வைத்திருக்கிறார்களே!' என்று முதலில் எதார்த்தமாக நினைத்தான்.

**'இல்லை.. தன்னை யாராவது கவனிக்கிறார்களா?.... இருக்கலாம் !'**

ஆண்டனி ஜன்னலுக்கருகே போனான்.

ஜன்னலை நன்றாகத் திறந்து, பார்வையை வெளிப்புறம் செலுத்தினான். யாரும் தென்படவில்லை. ஜன்னலை, இறுக மூடித் தாளிட்டு விட்டு யோசனையோடு திரும்பி தன் நண்பர்கள் இருந்த இடத்துக்கு வந்தான்.

பணத்தை அவர்களிடம் சேர்ப்பித்தான். ஒரு நல்ல நண்பனை விட்டுப் பிரிய மனமில்லாமல், அந்த இரண்டு பேரும், ஆண்டனியைக் கட்டித் தழுவி , கண்ணீரோடு, விடை பெற்றுச் சென்றனர்.

அடுத்த நாள் -- மென்டோஸா தாத்தாவை சந்திப்பதற்கு, ஆண்டனி அவசரமாகப் புறப்பட்டான்.

'குகை மனிதனைப் பற்றிய ரகசியம், மென்டோஸா தாத்தாவின் மூலம் நிச்சயமாக தனக்குக் கிடைக்கும்' என்ற நம்பிக்கை ஆண்டனிக்கு இருந்தது.

ஆனால், திராட்சைத் தோட்டத்தின் எல்லைச் சுவர் அருகே, ஆண்டனி போன போது,

**அந்தப் புராதனமான கல் குடிசையிலிருந்து மென்டோஸா தாத்தாவின் தீனமான முனகல் பரிதாபமாக கேட்டுக் கொண்டிருந்தது.**

# 5

திராட்சைத் தோட்டத்தின் எல்லைச் சுவர் அருகே உள்ள கல் குடிசையில் இருந்து வந்த மென்டோஸா தாத்தாவின் முனகல் சத்தம், ஆண்டனிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. மென்டோஸா

Scanned by CamScanner

தாத்தாவுக்கு ஏதோ ஆபத்து என்பதை நொடியில் உணர்ந்து கொண்டான்.

உடனே அந்தக் கல் குடிசை அருகில் ஓடினான். முழுவதும் கற்களால் அடைக்கப்பட்ட அந்த கல் குடிசையின் நுழைவாயில், குனிந்து செல்லும் அளவு குறுகலாக இருந்தது.

உள்ளே ஏறத்தாழ இருட்டாகவே இருந்தது. ஓரளவு சமாளித்துக் கொண்டு, ஆண்டனி அந்தக் கல் குடிசைக்குள் மென்டோஸா தாத்தா இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் நிலை ஏற்பட்டது.

அந்த வயதான தாத்தா, தரையில் படுத்த நிலையில் இருந்தார். நன்றாக உற்றுப் பார்த்த பொழுது, அவர் முகத்திலும், உடம்பிலும் தாறுமாறாக ரத்தக் காயங்கள் தெரிந்தது.



மென்டோஸா தாத்தாவை, தன் இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு, கல் குடிசைக்கு வெளியில் ஆண்டனி வந்தான். அப்பொழுதுதான், மென்டோஸா தாத்தா எவ்வளவு கோரமாகத் தாக்கப் பட்டிருக்கிறார் என்பது ஆண்டனிக்குத் தெரிய வந்தது.

மென்டோஸா தாத்தா, இரண்டு முறை ஜன்னி வந்தவர் போல் கை கால்களை உதற ஆரம்பித்தார் !

ஒரு முறை மிரட்சியோடு ஆண்டனியைக் கண் திறந்து பார்த்தார். அடுத்த கணம்... தனது இடது கையை ஆண்டனியை நோக்கி

Scanned by CamScanner

ஏதோ சமிக்ஞை செய்வது போல் நீட்டினார்.

அந்த இடது கை விரல்கள் இறுக்கமாக மூடியிருந்தன. அத்தோடு, மென்டோஸா தாத்தாவின் தலை தளர்ந்து சாய்ந்தது!

ஆண்டனி, 'தாத்தாவை உலுக்கி மூச்சு இருக்கிறதா' என்று சோதித்துப் பார்த்தான். தாத்தா ஏறத்தாழ இறந்து விட்டார் என்றே ஆண்டனிக்கு மனதில் பட்டது.

அவர் ஆண்டனியை நோக்கி, நீட்டிய இடது கையில் மட்டும், ஏதோ ஒரு செய்தி இருப்பது அவனுக்குப் புரிந்தது. அது அவரது மரண வாக்குமூலமாகக் கூட இருக்கலாம். ஆண்டனி மெதுவாக அவரது கையின் விரல்களைப் பிரித்தான். உள்ளே....

உள்ளங்கையில் அவசரமாக எழுதப்பட்ட சில எழுத்துக்கள் மட்டும் கிறுக்கலாகத் தெரிந்தது. அந்த எழுத்துக்கள் நிதானமாக, திட்டமிடப்பட்டு பேனா பென்சில் போன்றவற்றால் எழுதியது அல்ல.. அந்தப் பகுதியின் மண்ணில், கரிக்கோல் போன்று சர்வ சாதாரணமாக ஒரு பொருள் கிடைக்கும்.

அப்படிப்பட்ட கரித் துண்டு ஒன்றால் தான், மென்டோஸா தாத்தாவின் கையில் எழுதப்பட்டிருந்தது வெகு சிரமப்பட்டு அந்த எழுத்துக்களை நிதானமாகப் படித்த போது,

**"டினோவுக்குத் தெரியும்..!"**

இதில் 'டினோ ....... தெரியு....' இந்த எழுத்துக்கள் தான் ஓரளவுக்குத் தெளிவாக இருந்தன.. மற்றவை எல்லாம் யூகிக்கும் படியாகவே இருந்தது.

குகை மனிதனைப் பற்றிய ரகசியத்தை, தாத்தா தன்னிடம் சொல்ல வந்த போது, அவருக்கு இந்த கொடூரமான மரணத் தாக்குதல் நடந்திருக்கிறது.

சாகும் தருவாயில் நிலத்தில் கிடந்த கரித்துண்டை எடுத்து, தன் கையில் இப்படி எழுதியிருக்கலாம். அந்த வார்த்தைகளுக்கு என்ன பொருள்?

தன்னைத் தாக்கியது யார்? என்று 'டினோவுக்குத் தெரியும்' என்பது ஒரு அர்த்தமாக இருக்கலாம். அல்லது, தான் சொல்ல வந்த குகை மனிதனைப் பற்றிய ரகசியம் டினோவுக்குத் தெரியும் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

யார் அந்த டினோ?

மென்டோஸா தாத்தாவின் சவ அடக்கத்தை, கிரிகாரியோ மிகவும் கௌரவமான முறையில், அதே சமயம் வருத்தத்தோடு முன்னின்று நடத்தினான்.

Scanned by CamScanner

மென்டோஸா தாத்தாவை, சவப் பெட்டிக்குள் வைக்கும்போது, ஒரு இளைஞன் தாங்க முடியாத துக்கத்தோடு ஓடி வந்து தாத்தாவின் சடலத்தைக் கட்டிப் பிடித்துக் கதறினான்...

அவன் கதறிய விதம், எல்லோரையும் மனம் இளகச் செய்தது. ஒரு வயதானவர், அந்த இளைஞனுக்கு அருகில் சென்று அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்தப்படியே,

"**டினோ...** மனச் சாந்தி கொள்..! நடக்கக் கூடாத சோகங்கள் எல்லாம் நம் கண்ணெதிரில் நடக்கிறது. தாத்தா நிம்மதியாகப் போய்ச் சேர்ந்து விட்டார். இன்னும் எத்தனை அவலங்களை, சந்திக்க நாம் உயிர் வாழ்கிறோம் என்பது கர்த்தருக்குத்தான் தெரியும். அமைதி கொள் **டினோ...** அழாதே..."

ஆண்டனி, அந்த இளைஞனை உற்றுப் பார்த்தான். ஆண்டனியின் பார்வையில் மென்டோஸா தாத்தாவின் விரித்த உள்ளங்கை மீண்டும் நினைவுக்கு வந்தது.

**'டினோவுக்குத் தெரியும்!'**

அந்த இளைஞன் டினோ, கண்ணீர் சிந்தி அடங்கும் வரை ஆண்டனி காத்திருந்தான்.

சற்று தனியாக, அந்த டினோவை அழைத்துப் பேச, ஆண்டனி சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சவ ஊர்வலத்தின் பரபரப்புகளில் ஆண்டனிக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.. ஆண்டனி தன் அருகில் வந்த ஒரு தோட்டத் தொழிலாளியிடம் மெதுவாகக் கேட்டான்.

"தாத்தாவின் மேல் கொள்ளை பாசம் வைத்திருக்கும் இந்த டினோ.. குவார்ட்டர்ஸில் எந்த நம்பர் வீட்டில் தங்கி இருக்கிறான்?"

"நம்பர் 10 – A"

அடுத்த நாள் ஆண்டனி யோசனையோடு நம்பர் 10 – A க்கு சென்று கொண்டிருந்தான்.

நம்பர் 10 – A குவார்ட்டர்ஸுக்கு அருகில் ஆண்டனி சென்றபோது, முன்பே கூடியிருந்த பலரும், கசகசவென பேசிக் கொண்டிருந்தனர்.

"டாக்டருக்கு தகவல் கொடுத்தாச்சா...?"

"முதல்ல கிரிகாரியோ சாருக்கு சொல்லி அனுப்புங்க..."

"எனக்கென்னமோ.. டினோ... பிழைப்பான்னு தோணலை"

இந்த கடைசி வார்த்தைகள், ஆண்டனியை

Scanned by CamScanner



பதட்டத்துடன் அந்த வீட்டிற்குள் நுழைய செய்தது.

டினோவின் உடலில் அங்கங்கே ஈரத் துணியால் கட்டுப் போடப் பட்டிருந்தது. அதையும் மீறி உடம்பிலிருந்து சிகப்பு திரவம் கட்டுக்களை நனைத்துக் கொண்டிருந்தது.

ஆண்டனியைப் பார்த்ததும், டினோவின் கண்கள் சற்று அகலமாக் விரிந்தன. அவன் எதையோ சொல்ல எத்தனிக்கும் முயற்சி டினோவின் முகபாவத்தில் தெரிந்தது.

இதற்கு முன், ஆண்டனி டினோவிடம் பேசியதில்லை. அவனைப் பார்த்ததாகக் கூட ஆண்டனிக்கு ஞாபகம் இல்லை.. ஆனால் டினோவின் முக பாவத்திலிருந்து,

'ஆண்டனி ... உன்னிடம் நான் ஒரு ரகசியத்தை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.. ' என்று அவன் கண்கள் கூறுவதை ஆண்டனியால் புரிந்து கொள்ள முடிந்தது.

மென்டோஸா தாத்தா 'டினோவுக்குத் தெரியும்' என்று தன் இடது கையில் எழுதியிருந்ததோடு தனது அந்தரங்கங்களையும் இந்த டினோவிடம் பகிர்ந்து கொண்டிருக்கலாம். எது எப்படி இருந்தாலும், அவகாசம் எடுத்து, டினோவிடம் தனிப்பட்ட முறையில் பேசும் சூழ்நிலை இப்போது இல்லை.

டினோ பேசக் கூடிய நிலையில் இருப்பதாகவும் ஆண்டனி மனதில் படவில்லை.

ஆண்டனி, டினோவுக்கு அருகில் ஆதங்கத்துடன் நெருங்கினான்.. ஆதரவுடன் அவனது தலையை வருடி விட்டான்..

Scanned by CamScanner

"மனதை தேற்றிக் கொள் டினோ... என்னை அடையாளம் தெரிகிறதா? நான் தான் ஆண்டனி! பயப்படாதே..! சீக்கிரம் டாக்டர் வந்து விடுவார். உன்னைப் பற்றி மென்டோஸா தாத்தா என்னிடம் கூறி இருக்கிறார்..."

இந்த வார்த்தைகளை ஆண்டனி சொன்னவுடன், டினோ வெகு சிரமப்பட்டு, தன் கைகளால் ஆண்டனியின் கைகளை இறுக்கமாக பற்றிக் கொண்டான். அதில் பயம், நடுக்கமாக அதிர்ந்தது.

டினோவின் உதடுகள் எதையோ சொல்லத் துடித்தன.

"சொல் டினோ... தைரியமாகச் சொல்.. என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா... ?"

இந்த நிலையில் டினோவின் கண்கள் சொருகிச் சொருகி மூட ஆரம்பித்தது.

டினோ தனது சுய நினைவை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தான்.

இறுதி நிமிடத்தில் அவன் தட்டுத் தடுமாறி, ஆண்டனியின் கைகளை மேலும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு,

**"கிரி... கிரி... கிரிகாரியோ.."**

இதுதான் அவன் கடைசியாக பேசிய வார்த்தைகள்..!

டினோ இந்த வார்த்தையைக் கூறிய போது, தோட்டத் தொழிலாளர்கள் சிலரும் அருகில் இருந்தார்கள். ஒரு தொழிலாளி, தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, எதார்த்தமாக

"பாவம் டினோ! படுகாயமடைந்த நிலையில் சுய நினைவிழந்து ஆண்டனியைப் பார்த்து... அடையாளம் தெரியாமல்... 'கிரிகாரியோ சார்' என்று கூறுகிறான்.." என்றான்.

**ஆனால்.. ஆண்டனியின் மனதில் அப்படிப் படவில்லை. இந்த டினோ, கிரிகாரியோ என்று கூறியதில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பது புலப்பட்டது.**

கிரிகாரியோ இந்த டினோவைத் தாக்கியிருக்கக் கூடுமோ..? தனது குணமாகாத காலில், பெரிய பேண்டேஜ் போட்டுக் கொண்டு, வீல் சேரோடு வந்து டினோவைத் தாக்கியிருக்க முடியுமா? ஒரு வேளை வீல் சேரில் உட்கார்ந்தது போல் நடித்து, கிரிகாரியோ நாடகம் ஆடுகிறாரா?

இருக்கலாம்.... இல்லாமலும் இருக்கலாம்.. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில், எல்லாக் கோணத்திலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதகமாக நினைப்பதை

Scanned by CamScanner

விட பாதகமாகவும் நினைத்துப் பார்க்க வேண்டும்..

ஆண்டனியின் அறிவு, துருவ ஆரம்பித்தது. இப்படி பல்வேறு கோணங்களில் அவன் சிந்தித்துக் கொண்டிருந்த போது.. டினோவுக்கு, அவசர சிகிச்சைகள் எத்தனை செய்தும், டினோவும்.. மென்டோஸா தாத்தாவைப் போலவே மரணத்தைத் தழுவும் சூழ்நிலை இறுதியில் துர்பாக்கிய வசமாக ஏற்பட்டது!

சம்பந்தமில்லாமல் கொலைகள் நடப்பதால் திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் ஒரு பாதுகாப்பற்ற அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

அடுத்தடுத்து, மென்டோஸா தாத்தாவும், டினோவும் மரணம் அடைந்தது, அந்தப் பிராந்தியத்தையே ஒரு விரக்தியும், மயான அமைதியும் நிலவ செய்தது. ஆண்டனியின் மனதில் மட்டும், தனது பொறுப்புகள் அதிகமானதை உணர்ந்தான். டினோவின் சவ அடக்கம் முடிந்த பிறகு, ஒரு திட்டம் தீட்டினான்.

ஆண்டனி நேராக கிரிகாரியோவிடம் வந்தான். கிரிகாரியோ எப்போதும் போல், பேண்டேஜ் கட்டோடு வீல் சேரில் உட்கார்ந்து கொண்டிருந்தான்..

“கிரிகாரியோ சார்....! என் மன அமைதி மிகவும் கெட்டு விட்டது. திராட்சைத் தோட்டத்தில், கூலி வேலை ஆளாக இருந்த என்னை மெய்க் காப்பாளனாக அந்தஸ்தோடு நடத்தினீர்கள். ஆனால் என்ன பயன் .. ?

மென்டோஸா தாத்தாவையும், டினோ என்ற இளைஞனையும் பலி கொடுத்தது தான் மிச்சம்..! நான் சரியான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை... என்ற மன உறுத்தல் வந்து விட்டது. தயவு செய்து இன்று இரவு, எனக்குக் குடிப்பதற்கு நிறைய ஒயின் பாட்டில்கள் அனுப்புங்கள்.. எனது அறையை நீங்களே பூட்டிக் கொண்டு போய் விடுங்கள். யார் முகத்திலும், விழிக்க முடியாத அளவு, அவமானத்தை நான் உணர்கிறேன். !”

ஆண்டனி இப்படிக் கூறியவுடன் கிரிகாரியோ ஆறுதலாக அவன் தோள்களை தட்டிக் கொடுத்தான்.

“உனது நியாயமான உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தாலும் நீ அவநம்பிக்கை கொள்ளாதே. இரண்டு மூன்று நாட்கள் நிம்மதியாக குடித்து விட்டு, ரெஸ்ட் எடு! நீ சொன்னபடியே யாரும் உன்னை சந்திக்க முடியாதபடி, உன் அறையை நானே பூட்டி சாவியை வைத்துக் கொள்கிறேன் !”

ஆண்டனியின் முதல் கட்ட திட்டம் மிகச் சரியாகவே நிறைவேறியது.

இரண்டு மூன்று நாட்களுக்குத் தேவையான பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளும், விலையுயர்ந்த மது வகைகளும் ஆண்டனியின் அறையில் நிரப்பப்பட்டது. ஆண்டனியின் அறைக் கதவும்பெரிய பூட்டால் பூட்டப்பட்டது.

ஆண்டனி மது பாட்டில்களை உடைத்து உதட்டை நனைத்துக் கொண்டு, மீதியை வாஷ் பேஸினில் ஊற்றினான்.

அறையின் பின்புறமுள்ள ஜன்னலைத் திறந்து, அதன் வழியாக வெளியில் சென்று கண்காணிப்பது எப்படி என்று திட்டமிட்டான்.

நடுநிசியில் ஆண்டனி, கிரிகாரியோ தங்கியிருக்கும் கீழ் மாடிக்கு இறங்கி வந்தான்.

அந்த அறையின் கதவில் ஒரு பெரிய சாவித் துவாரம் இருப்பதை ஏற்கனவே ஆண்டனி கவனித்து வைத்திருந்தான்.

சந்தடியின்றி ஆண்டனி அந்த சாவித் துவாரத்தில் கண் வைத்துப் பார்த்த போது, அதிர்ச்சி அடைந்தான்!



கிரிகாரியோவின் அறையில் ஆண்டனி பார்த்த காட்சி, அவன் கண்களையே அவனால் நம்ப முடியாமல் இருந்தது.

கிரிகாரியோவின் படுக்கைக்கு அருகில் வீல் சேர் இருந்தது. ஆனால் கிரிகாரியோ படுக்கையிலும் இல்லை, வீல் சேரிலும் இல்லை!

வெட்டுப்பட்டதால் கால் ஊனமாகி விட்டதாகக் கூறி வந்த கிரிகாரியோ நடு இரவில் படுக்கையிலும் இல்லாமல், வீல் சேரிலும் இல்லாமல் இருந்தால் அவர்

Scanned by CamScanner

எங்காவது நடமாடிக் கொண்டிருக்கிறார் என்றுதானே அர்த்தம்.?

ஆண்டனி வெகு நேரம் கிரிகாரியோவின் அறையை தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததில், ஏறத்தாழ விடியும் நேரமே ஆகி விட்டது.

தனது அறைக் கதவு வெளியில் பூட்டப்பட்டிருப்பதும், அதன் சாவி கிரிகாரியோ வசம் இருப்பதும் ஆண்டனிக்கு ஞாபகம் வரவே, அவசர அவசரமாக வராண்டா ஜன்னல்களைத் திறந்து, பைப்புகளில் தொங்கி ஏறி, தன் அறைக்கு வந்து தூங்க ஆரம்பித்தான். அசதியோடு தூங்கியவனை 'கிரீச்... கிரீச்..' என்ற வீல் சேரின் சத்தம் எழுப்பியது. கண்களைத் திறந்து பார்த்தான்.

அவனது அறைக் கதவைத் திறந்து கொண்டு வீல் சேரில் உட்கார்ந்தபடி கிரிகாரியோ வந்து கொண்டிருந்தான்.

ஆண்டனியின் பார்வை – பாதிக்கப்பட்ட கிரிகாரியோவின் காலின் மேல் பதிந்தது.

தடிமனான புதிய பேண்டேஜ் துணி, கிரிகாரியோவின் காலில் சுற்றப்பட்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக கிரிகாரியோ பதற்றத்துடன் சொன்ன செய்தி ஆண்டனியை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"ஆண்டனி.. இந்த கொடூரத்தை கேள்விப் பட்டாயா? நேற்றிரவு டினோவின் வீட்டில் பாவம்... டினோவை இழந்த வருத்தத்தில் அவனது தாயார் மட்டும் இருந்தார்கள். நள்ளிரவு நேரம். எதற்காகவோ, அந்த குகை மனிதன், டினோ வீட்டுக்கு வந்திருக்கிறான்.

வயதான தாயாரை பயமுறுத்தி விரட்டி அடித்து விட்டு, அந்த வீட்டில் அவசர அவசரமாக டினோவின் பெட்டிகளை தாறுமாறாக குடைந்து ஆராய்ந்திருக்கிறான். வீட்டிலிருந்த எல்லா பொருட்களையும் கண்டபடி வீசி விட்டுப்போயிருக்கிறான்.

அவன் எதிர் பார்த்த ஏதோ ஒன்று கிடைக்கவில்லை போலும். எனவே அந்த ஏமாற்றத்தில் அதி பயங்கரமான செயலை அந்த குகை மனிதன் கொடூரமாக செய்திருக்கிறான். டினோவை புதைத்த சவக் குழியைத் தோண்டி, புனிதமாக அடக்கம் செய்யப்பட்ட டினோவின் சடலத்தை அந்த குகைமனிதன் தோண்டி எடுத்துக் கொண்டு போய் பாஸ்டினோ குகை வாசலில் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டிருக்கிறான்.

குகை மனிதனைப் பற்றிய ஏதோ ஒரு ரகசியம் டினோவுக்கும், மென்டோஸா தாத்தாவுக்கும் தெரிந்திருக்கிறது. அதை அவர்கள் ஏதேனும் ஒரு வழியில்

Scanned by CamScanner

சொல்ல முயற்சித்திருக்கலாம். இதைத் தெரிந்து கொண்டுதான், குகை மனிதன் அவர்களைப் பழி வாங்கியதோடு, டினோவின் சடலத்தைக் கூட சின்னா பின்னப் படுத்தியிருக்கிறான்.

குகை மனிதனின் ஆக்ரோஷமான இந்த நடவடிக்கை, தோட்டத்-தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பீதியைக் கிளப்பி விட்டது.

'இனிமேல் யாராவது குகை மனிதனைப் பற்றி தனக்குத் தெரிந்த உண்மைகளைக் கூறினால் நிச்சயமாக குகை மனிதன் அவர்களைப் பழி வாங்கி விடுவான்' என்று பயப்படுகிறார்கள்.

இந்த நிலையில், இனிமேலும் உன்னைப் பூட்டி வைத்திருப்பது நல்லதாக எனக்குப் படவில்லை. கால் ஊனமுற்று வீல் சேரில் தவழ்ந்து கொண்டிருக்கும் எனக்குக் கூட அந்த கொடூரமான குகை மனிதனால் ஆபத்து வந்து விடுமோ என்று அச்சப்படுகிறேன்."

கிரிகாரியோ சொல்லும் ஒவ்வொரு செயலும் எப்படி நடந்திருக்கும் என்பதை ஆண்டனியால் ஓரளவு கணிக்கவே முடிந்தது. ஆனால் அந்த விஷயங்களை ஜீரணிக்கத்தான் ஆண்டனியால் முடியவில்லை.

சிறிது நேரத்தில், தன் வீல் சேரை உருட்டியபடி அந்த அறையை விட்டு புறப்பட்டான் கிரிகாரியோ

ஆண்டனி அந்த வீல் சேரையும், கிரிகாரியோவையும் மாறி மாறிப் பார்த்தப்படி யோசனையோடு நின்று கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரம் கழித்து சோபியாவின் அந்தரங்க வேலையாள் ஒருவன் ஆண்டனியின் அறைக்குள் அவசரமாக பிரவேசித்தான்.

"சோபியா மேடம் உங்களிடம் மிக அவசரமாக தனியாக ஏதோ பேச வேண்டுமாம்.. உடனே வரச் சொன்னார்கள்." ஆண்டனி உடனே புறப்பட்டான்.

சோபியா அறைக் கதவை தாழிட்டுவிட்டு, இரும்பு பீரோவைத் திறந்து ஒரு பெரிய கவரை எடுத்தாள். அந்தக் கவர் ஏற்கெனவே பிரிக்கப்பட்டு இருந்தது.

'ஆண்டனி .. இந்தக் கவர் டினோவின் வீட்டில் இருந்ததாம்.. டினோவின் மரணத்துக்குப் பிறகு, 'இந்தக் கவர் ஏதாவது முக்கியமான தஸ்தாவேஜாக இருக்கலாம். படித்துப் பாருங்கள்.."

என்று டினோவின் தாயார் டினோ அடக்கம் செய்யப்பட்ட அன்றே கொடுத்திருந்தார்கள். நிதானமாகப் படித்து அதன்படி டினோவின் குடும்பத்துக்கு வேண்டிய

Scanned by CamScanner

பாதுகாப்பு செய்யலாம் என்று நான் அவசர வேலைகளால் படிக்காமல், பீரோவில் பூட்டி வைத்துவிட்டேன்.

ஆனால் குகை மனிதன் மீண்டும் டினோ வீட்டுக்கு வந்ததும், அங்கிருந்த பொருள்களில் எதையோத்தேடி ஏமாற்றம் அடைந்ததும், அந்தச் சினத்தோடு, டினோவின் சடலத்தை சின்னாபின்னப் படுத்தியதையும் இப்போதுதான் கேள்விப்பட்டேன்.

**அதற்குப் பிறகு தான், டினோவின் தாயார் கொடுத்த இந்தக் கவரில் ஏதேனும் முக்கிய ரகசியங்கள் இருக்கலாம் என்று பிரித்துப் பார்த்தேன். இதிலுள்ள செய்திகள் என்னை பூகம்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது ! எதை நம்புவது.. யார் மேல் பாசம் வைப்பது? கொலைகாரன் யார்? நண்பன் யார்? என்றே புரியாதபடி இந்தக் கடிதம் எனக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.**

இதை நீ படித்துப் பார்ப்பது நல்லது. அதற்குப் பிறகு நீ என்ன நினைக்கிறாய் என்பதை வைத்து, நான் அவசரமாக சில முடிவுகளை துணிச்சலாக எடுக்கும் நிலையில் இருக்கிறேன். ......."

ஆண்டனி அந்தக் கவரை வாங்கிப் பிரித்தான்.

## 6

மிகுந்த பாதுகாப்போடு தோலால் ஆன உறைக்குள்ளிருந்த பேப்பர் கட்டுக்களை வெளியே எடுத்தான். அதில், அரசாங்க முத்திரையிட்ட சில டாக்குமெண்டுகள் இருந்தன.



அவைகள் எல்லாம் டினோவின் சட்டபூர்வமான சொத்துக்கள் பற்றிய விபரங்கள் என்பதைத் தெரிந்து கொண்ட ஆண்டனி, அவற்றை பத்திரமாக வைத்துவிட்டு, கடைசியில் மெண்டோஸா தாத்தா டினோவுக்கு எழுதிய உயில் போன்ற கடிதத்தை படிக்க ஆரம்பித்தான்.

Scanned by CamScanner

"அன்பார்ந்த டினோவுக்கு,

நான் பயப்பட்டது சரியாகத்தான் இருக்கிறது. உனக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம். சோபியா மேடத்துக்கு நீ தம்பி முறையாக வேண்டும் என்ற ரகசியம், கிரிகாரியோவுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் இதில் நீ செய்த பாவம் என்ன?

கிரிகாரியோ சாரின் தந்தை, பிரான்ஸ் நாட்டில் இருந்த போது ஒரு பெண் குழந்தை வாரிசுக்கு ஆசைப்பட்டு, **சோபியாவை தத்தெடுத்திருக்கிறார்.** அந்த மனிதருக்கு, தனக்குப் பிறந்த கிரிகாரியோவின் மேல் என்ன வெறுப்பு வந்ததோ தெரியவில்லை.. தான் சுயமாக சம்பாதித்த அத்தனை சொத்துக்களையும் சோபியா மேடத்தின் மேல் எழுதி வைத்து விட்டார்.

தந்தையை எதிர்க்க முடியாத கிரிகாரியோ, அவர் மறைவுக்குப் பிறகுதான் ஒவ்வொரு சதித் திட்டத்தையும் தீட்டியிருக்க வேண்டும்.

எனக்கென்னவோ சோபியா மேடத்தின் கணவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தவர், திடீரென்று மரணமடைந்தது கூட இயற்கையானது என்று நான் நம்பவில்லை.

**அவரை கிரிகாரியோ கொலை செய்திருக்கலாம்** என்றே யூகிக்கிறேன். அதற்குப் பிறகு குகை மனிதன் என்ற பெயரில் இந்த கிரிகாரியோதான் சோபியாவையும், தடயமில்லாமல் கொலை செய்து, தண்டனையில் இருந்து தப்பிக்கப் பார்க்கிறான்.

இந்த சொத்து விவகாரங்களில் சோபியாவுக்கு **தூரத்து உறவாக நீ தம்பியாகிறாய்..** பிரெஞ்சு நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின் போது, நீ அனாதையாக இத்தாலி வந்து சேர்ந்திருக்கிறாய். நிச்சயமாக சோபியா மேடம் உனக்கு தமக்கை என்று தெரிந்திருந்தும் நீ ஏன் திராட்சைத் தோட்டத்தில் கூலிக்கு வேலை செய்கிறாய்?

இதற்குப் பிறகு கூட நீ சோபியாவின் சொத்துக்கு ஆசைப்பட மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.. ஆனால் கிரிகாரியோவுக்கு அந்த நம்பிக்கை இல்லை. ஏதேனும் ஒரு வகையில் சட்டப்படி சொத்தில் நீ தம்பியின் முறையில் பங்கு கேட்டு விடலாம் என்று பயப்படுகிறான். நாமெல்லாம் உழைத்துப் பிழைக்கும் ஜீவன்கள்.

நம் உடம்பில் உயிரும் கையும் காலும் நன்றாக இருந்தால் எங்கு வேண்டுமானாலும் சந்தோஷமாக உழைத்துப் பிழைத்துக் கொள்ளலாம். என் பேரனைப் போல் பாசம்

Scanned by CamScanner

கொண்ட உனக்கு நான் அறிவுரை சொல்வது ஒன்றே ஒன்றுதான் டினோ! சூழ்நிலைகளை கண்காணித்துக் கொண்டிரு. என் உயிருக்கு ஆபத்து வரவும் பல சந்தர்ப்பங்கள் இருக்கிறது.

குகை மனிதனாகத் திரிவது இந்த கிரிகாரியோதான் என்பதை பல முறை நான் உணர்ந்து கொண்டேன். இந்த ரகசியம் எனக்குத் தெரிந்ததால், நான் எப்போது வேண்டுமானாலும் தாக்கப்படலாம்.

அப்படியொரு நிலை எனக்கு ஏற்படும் போது நிச்சயமாக அதற்கு மேலும் நீ இங்கே இருக்காதே. உன் வயதான அம்மாவைக் கூட்டிக் கொண்டு வேறு இடத்துக்குப் போய் விடு. என் சொத்துக்களை உனக்கு எழுதி வைத்திருப்பதை விட எனது இந்த அறிவுரையை நீ அதிகம் மதிக்க வேண்டும்.''

இதுவரை கடிதத்தை படித்த ஆண்டனிக்கு எல்லா விபரமும் தெரிந்தது போலாகி விட்டது. கால் ஊனமுற்றவன் போல் கிரிகாரியோ நடித்தது... இரவில் டினோ கொலை செய்யப்பட்டது... கிரிகாரியோ இரவில் காணாமல் போனது... எல்லாமே கடிதத்தில் எழுதியிருப்பது போல் நூற்றுக்கு நூறு உண்மை என்று நிரூபித்தது.

சோபியா தலைகுனிந்தபடி, கண்ணீரோடு கேட்டாள்.

“நிச்சயமாக நான் தத்து எடுக்கப்பட்டவள் என்று எனக்கே தெரியாது. இப்போது கூட நான் என் குழந்தையை எடுத்துக் கொண்டு உன்னோடு சேர்ந்து கூலி வேலை செய்ய, புறப்படத் தயார்.''

அந்த மென்மையான பெண்ணின் இதய உணர்ச்சிகள் ஆளுமை உடையது என்று நிரூபிக்கும் வகையில் அதிரடியாக ஒரு சம்பவம் நடந்தது. அப்போது,

கிரிகாரியோ மிகுந்த யோசனையுடன் தன் அறையில் எங்கோ வெறித்தபடி வீல் சேரில் உட்கார்ந்திருந்தான். ஊனமுற்றவனாக நடித்துக் கொண்டிருக்கும், பேண்டேஜ் சுற்றப்பட்ட கிரிகாரியோவின் கால்கள், அவனது குரூரமான சிந்தனைக்கு ஏற்ப ஆடி அசைந்து கொண்டிருந்தன.

அப்போது –

அவன் உட்கார்ந்திருந்த அறையின் கண்ணாடி ஜன்னல் சிதிலம் சிதிலமாக பனி போல் தெறித்து விழுந்தது.

நாலு கால் பாய்ச்சலில், கூன் விழுந்து ஒரு மிருகத்தைப் போல அந்த குகை மனிதன் கோபாவேசத்தோடு உள்ளே பிரவேசித்தான் !

வந்த வேகத்தில் வீல் சேரில் முட்டி மோதி, கிரிகாரியோவை உருட்டித் தள்ளினான். அடுத்த நிமிடம், ஒரு விலங்கைப் போல் மூர்க்கமாக தாக்க ஆரம்பித்தான்.

Scanned by CamScanner



கிரிகாரியோவின் முகம், கழுத்து, மார்பு, வயிறு எல்லாவற்றிலும் நகங்களால் கீறினான்.. கடித்தான்.

மரண அவஸ்தையிலிருந்த கிரிகாரியோ...

“ஆண்டனீ.. ஈ...ஈ... என்னைக் கப்பாற்று கேவ். மேன்.. கேவ் மேன்..”

– என்று அலறினான்.

இந்தக் குரல் வந்த போது சோபியாவோடு ஆண்டனி பேசிக் கொண்டு தான் இருந்தான். இருவரும் கிரிகாரியோவின் அறையை நோக்கி ஓடி வந்தார்கள்.

ஆண்டனி, குகை மனிதன் மேல் கோபாவேசமாய் பாய்ந்தான்.

குகைமனிதனின் இடுப்பில் தன் பலங்கொண்ட மட்டும் முழங்கையைத் தூக்கி ஒரு ஊன்று ஊன்றினான் ஆண்டனி. வித்தியாசமான அந்த நரம்படியால் குகை மனிதன் ஒரு மிருகத்தைப் போலவே வலியால் ஊளையிட்டான்.

ஏற்கெனவே கூன் விழுந்து, நாலு காலில் விலங்கைப் போல் நடந்து கொண்டிருந்த அந்த குகை மனிதனின் இடுப்பும் இப்பொழுது ஒடிந்து விட்டதைப் போல எலும்புகள் நொறுங்கும் சத்தம் கேட்டது. ஆனால் அடிபட்டு கைப்பிடிச் சுவரின் ஒரு மூலையில் விழுந்த குகை மனிதன், அதே வேகத்தில் கைப்பிடிச் சுவரைத் தாண்டி எட்டிக் குதித்து விட்டான்.

கைப்பிடிச் சுவரின் கீழ்ப் பகுதி ஒரே இருட்டாக

Scanned by CamScanner

இருந்தும் ஆண்டனி பயப்படவில்லை. அந்த கைப்பிடிச் சுவரை ஒரே தாவலாக எட்டிக் குதிக்க முயன்ற போது, சோபியா பயத்தோடு அலறினாள்..

"ஆண்டனி... இருட்டில் மறைந்தஅந்த குகை மனிதன் அப்படியும் இப்படியும் போக்கு காட்டி விட்டு, எனது பெட்ரூமில் இருக்கும் லீனாவுக்கு ஏதாவது ஆபத்தை ஏற்படுத்திவிடலாம்.

இந்த அயோக்கியன் கிரிகாரியோவை, இந்த முறை குகை மனிதன் தாக்கியது என் மனதுக்கு நியாயமாகவே படுகிறது. முதலில் என் குழந்தையை காப்பா.." அதற்கு மேல் சோபியா பேச முடியாமல் 'ஐயோ' என்று அலறிய சத்தம் கேட்டது.

கைப்பிடிச் சுவரில் பாதி, தாண்டிய ஆண்டனி அப்படியே திரும்பிப்பார்த்தான்.

ஏறத்தாழ சாகும் தருவாயில் இருந்த கிரிகாரியோ, சோபியாவின் பேச்சைக் கேட்டு மிகுந்த எரிச்சலுற்று, அப்படியே நிலத்தில் படுத்து ஊர்ந்தபடியே சோபியாவின் வலது காலைப் பற்றி இழுத்துப் போட்டு விட்டான்.

**அத்தோடு நிற்காமல் அவளது கழுத்தையும் பிடித்து, தன் இரண்டு கைகளால் வெறி கொண்டவன் போல் நசுக்க ஆரம்பித்தான்.**

"ஏண்டி.. என் வாழ்க்கையையே நாசம் பண்ண வந்தவளே! அனாதையா இருந்த நீ, என் அப்பாவுக்கு வாரிசா மாறினதோட இல்லாம, ரத்த வெள்ளத்துல துடிச்சிட்டு இருக்கிற என்னைப் பார்த்து, 'அது நியாயம்தான்னு' சொல்றியாடி?" என்று கத்த ஆரம்பித்தான்.

ஆண்டனியின் இலக்கு, குகை மனிதனை விட்டு சோபியாவின் பக்கம் திரும்பியது. ஒரே எட்டில் தாவி, கிரிகாரியோவின் கைகளை சோபியாவின் கழுத்திலிருந்து பிரித்து இழுத்த வேகத்தில் கிரிகாரியோவின் உடம்பை ஒரு மூலையில் விசிறி விட்டான்.

ஆண்டனி வீசிய வேகத்தில் அவன் உடம்பு சறுக்கி கொண்டு போய், தலை ஒரு தூணில் மோதி நின்றது. இதனால் கிரிகாரியோவின் கோபம் மேலும்அதிகமானது.

"தெரியுண்டா! படுபாவி ஆண்டனி! நீயும் சேர்ந்து என்னை கொல்வேன்னு எனக்குத் தெரியும் அந்த சோபியாவோட ராத்திரியில சல்லாபம் நடத்தற நீ, எங்கப்பனோட சொத்துக்களை எல்லாம் கைப்பற்ற திட்டம் போட்டிருக்கேன்னு நான் நல்லாவே தெரிஞ்சுக்கிட்டேன்.

ஆனா நான் லேசுபட்டவன் இல்லேடா ஆண்டனி!

Scanned by CamScanner



லேசுப்பட்டவன் இல்லை.. எனக்கு கல்யாணம் நடத்தாம எங்கப்பன் இந்த சிறுக்கி சோபியாவுக்கு கல்யாணத்தை பண்ணி வெச்சான் இல்லே.. அவளை திட்டம் போட்டு விதவையாக்கிட்டேண்டா !

இப்போ நீ இந்த சோபியாவுக்கு கள்ளப் புருஷனா வரப் போறே! ரெண்டாவது தடவையும் சோபியாவை விதவையாக்க என்னால முடியுண்டா.. எங்கப்பனோட மில்லியன் கணக்கான சொத்துக்கு நான் ஒருத்தன் தாண்டா வாரிசு !

அதுல குறுக்க வர்றவன் எவனா இருந்தாலும் கொலைதாண்டா பண்ணுவேன் ! அது கிழவன் மெண்டோஸா தாத்தாவா இருந்தாலும் சரி.. பொடியன் டினோவாக இருந்தாலும் சரி.. என் வழியில குறுக்கிட்டா கொலை தாண்டா விழும்! ”

இப்படி பேசிக் கொண்டே கிரிகாரியோ ரத்தம் ரத்தமாக கக்க ஆரம்பித்தான். அவன் சாகும் தருவாயில், இதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த அவனது விகாரமான உணர்ச்சிகளை அந்த ரத்தத்தோடு சேர்த்து வாந்தி எடுத்து விட்டதை ஆண்டனி உணர்ந்து கொண்டான்.

"ஐயோ.. தலை சுத்துது! ஏண்டா பாவி .. குகை மனுஷா! யார்ரா நீ? உன் சொத்தை பங்கு போட, நான் வரலியேடா! என்னை ஏண்டா வயிறு கிழிஞ்சு குடல் தொங்கற மாதிரி அடிச்சுப் போட்டே?" என்று 'ஓ'வென்று வாய்விட்டு அழுதபடியே கிரிகாரியோ மூர்ச்சையானான்.

அதற்குப் பிறகு, மூர்க்கத்தனம் நிறைந்த கிரிகாரியோவின் மூச்சு திரும்பவே இல்லை!

மென்டோஸா தாத்தா எழுதிய லெட்டர் எவ்வளவு தூரம் சரியானது என்பதை கிரிகாரியோவின் மரண வாக்குமூலம் எல்லோருக்கும் புரிய வைத்துவிட்டது உண்மைதான்.

இப்போது ஒரு புதிய கேள்விக் குறிதான், ஆண்டனி மனதில் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

இதுவரை 'குகைமனிதன் என்பவன் கிரிகாரியோவாகத் தான் இருக்க முடியும்' என்று நம்பினான். ஆனால் அந்த கிரிகாரியோவே, குகை மனிதனால் தாக்கப்பட்டு இறந்து விட்டான்!

. அப்படியானால் அந்த குகை மனிதன் யார்?

குகை மனிதன், ஒரு கொலைகாரன் என்று நிரூபிப்பதற்காக கிரிகாரியோ திராட்சைத்தோட்டத்துப் பெண்ணை கொன்றிருக்கலாம்.

தனது ரகசியங்களை மென்டோஸா தாத்தாவும், டினோவும் தெரிந்து கொண்டார்கள் என்பதை மறைப்பதற்காக இந்த கிரிகாரியோ, குகை மனிதன் போர்வையில் அவர்களையும் கொன்றிருக்கலாம். ஆனால் இந்த சோபியாவை அந்த குகை மனிதன் சாரட்டோடு தாக்கி உருட்டி கொலை செய்ய முயன்றிருக்கிறான்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் குழந்தை லீனாவை தொட்டிலோடு கடத்த முயற்சி செய்திருக்கிறான்.

.அப்போதெல்லாம் இந்த கிரிகாரியோ, சோபியாவின் அரண்மனையில் இருந்ததாகவே ஆண்டனியின் நினைவுக்கு வந்தது.

அந்த குகை மனிதன், சோபியாவையும் அவள் குழந்தை லீனாவையும் மட்டும் தான் குறி வைத்திருக்கிறான். மற்ற கொலைகளை எல்லாம் அந்த குகை மனிதன் செய்ய வில்லை! அப்படியானால் அந்த குகை மனிதன் யார்? அவன்

Scanned by CamScanner

நோக்கம் என்ன? இந்த கேள்வி ஆண்டனி மனதில் பெரும் அச்சத்தையே ஏற்படுத்திவிட்டது.

காரணம், சோபியாவுக்கும், அவள் குழந்தைக்கும் ஒரு வேளை, உலை வைக்கப் போகிறவன் நிச்சயம் இனி அந்த குகை மனிதனாகத்தான் இருப்பான்! அந்த ஆபத்திலிருந்து அவளை மீட்க குகை மனிதனை கண்டு பிடித்தே ஆக வேண்டும்!

கிரிகாரியோவின் மரணத்தை அடுத்து ஏழாவது நாள்..

"ஐயோ... எல்லோரும் எங்கே போய்த் தொலைஞ்சுட்டீங்க..? எல்லோரையுமே ஏமாத்திட்டு அந்த குகை மனுஷன்.. குழந்தையைத் துணி மூட்டை மாதிரி தோள்ல போட்டுக்கிட்டு தாவித்தாவி ஓடறானே! ஹெல்ப்...... ஹெல்ப்..... ஹெல்ப்..!" என்று வேலைக்காரி கத்திய போது, அரண்மனையில் சோபியா மட்டும்தான் இருந்தாள்.

ஆண்டனி?

**அவன் டினோவின் தாயாருக்கு சோபியாவின் ஆலோசனைப்படி சில உதவிகளை செய்யப் போயிருந்தான்.**

அரண்மனை காவலாளிகள் வேலைக்காரி கை காட்டிய திசையில் தாறுமாறாக சுட்டார்கள். பதறிப் போன சோபியா, உடனே சுடுவதை நிறுத்தச் சொன்னாள்.

"அந்த குரூரமான குகை மனுஷன் என் குழந்தையைத் தூக்கி முதுகுல போட்டுக்கிட்டு ஓடறான். முட்டாள்களே! தப்பித் தவறி உங்க குண்டுகள் என் குழந்தை மேல பட்டுட்டா என்ன செய்வேன்..?" என்று அலறினாள்.

தோட்டத்தின் புதர் மறைவில், குழந்தையின் வாயைப் பொத்தியபடி உட்கார்ந்திருந்த குகை மனிதனுக்கு, சோபியாவின் கட்டளை தெளிவாகவே காதில் கேட்டிருக்க வேண்டும்.

மிக நிதானமாக குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன் இருப்பிடமான பாஸ்டினா குகைக்கு துணிச்சலுடன் போக ஆரம்பித்தான்.

இந்தச் செய்தி வெகு விரைவில் தோட்டத் தொழிலாளர் குடியிருப்பில், டினோவின் வயதான தாயாருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்த ஆண்டனிக்கு எட்டி விட்டது. ஆண்டனி வெகு விரைவாக பாஸ்டினோ குகையை நோக்கிப் போனான்.

Scanned by CamScanner

ஆண்டனி அந்த மர்ம குகைக்கு வெகு சமீபத்தில் வந்த பொழுது, குழந்தை லீனா தூங்கிக் கொண்டிருந்த மர வேலைபாடுகள் அமைந்த தொட்டில் தாறுமாறாக உடைபட்டுக் கிடந்தது.

பொம்மைக்கு ஏற்பட்ட குரூரத்தைப் பார்த்த பிறகு, பின் தொடர்ந்தவர்கள் அழுகையும், அச்சமும் மேலிட தம் குடியிருப்புகளை நோக்கித் திரும்ப ஆரம்பித்து விட்டார்கள்.

ஆண்டனி தனி மனிதனாக குகை வாசலில் போய் நின்றான். குகையின் முகப்பு ஒரே இருட்டாக இருந்தது.

அந்த முகப்பில் பாதி தண்ணீர் நிரம்பி, ஒரு சின்ன ஓடையாக சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது.

அந்த இருட்டு குகைக்குள் குழந்தை லீனாவை அந்த குகை மனிதன் சிரமப்பட்டு, எடுத்துச் சென்றிருப்பானா? இல்லை பொம்மையை நசுக்கியதைப் போலவே அந்த குழந்தையையும்..

ஆண்டனியால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!

ஸ்விட்சர்லாந்துக்கு நண்பர்க ளாடு தப்பி ஓடுவதைத் தவிர்த்து விட்டு, நாம் இங்கே இருந்து இனிமேல் சாதிக்க என்ன இருக்கிறது.?

ஆண்டனியின் கண்களில் ஈரம் கசிய ஆரம்பித்து. அப்போது ... படபடவென்று குகை வாசலில் இருட்டிலிருந்து வௌவால் போன்ற பறவைகள் பேரிரைச்சலோடு சிறகடித்தன. தூரத்தில் ... வெகு தூரத்தில் மிகச் சன்னமாக **ஒருகுழந்தை அழும் சத்தம்** கேட்டது. குகைக்குள் இருந்து தான் அந்தக் குரல் வந்தது!

**நிச்சயம் அது குழந்தை லீனாவின் குரல்தான்!**

குழந்தை லீனாவின் குரல் குகைக்குள்ளிருந்து சன்னமாகக் கேட்ட அடுத்த வினாடியே திடீரென்று அந்தக் குரல் அடங்கி விட்டது. 'யாரோ அதன் வாயைப் பொத்தியிருக்க வேண்டும்' என்று ஆண்டனி யூகித்தான்.

குழந்தை இன்னும் உயிரோடு இருக்கிறது என்ற உண்மை தெரிந்தவுடன் அவனுக்குள் இதுவரை இருந்த சோர்வு நீங்கி, தான் சந்திப்பதற்கு, வேளை வந்து விட்டது என்ற உற்சாகம் பிறந்தது.

அடுத்த நிமிடம் ஆண்டனி, பாஸ்டினா குகையின் வாயிலில் இருந்த தண்ணீரில் அம்பைப் போல எகிறிக் குதித்தான். சிறிது தூரம் நீந்தினான். தண்ணீர், குகையிலிருந்து வந்து கொண்டிருக்கிறதா, இல்லை போய்க் கொண்டிருக்கிறதா என்பதை அனுமானிக்க முடியவில்லை.

குகை வளைந்து வளைந்து சென்றது. ஏழத்தாழ நூறு

Scanned by CamScanner



பிறகு, உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. ஆண்டனி நீந்தும் பொழுது அந்த குகையின் பக்கவாட்டுச் சுவர்களில் மோதிக் கொண்டான்.

இருந்தாலும், ஒதுங்கி நீரோட்டத்தில் முன்னோக்கி நீந்தினான். திடீரென்று கால்களில் தரைப் பகுதி தட்டுபட்டு விட்டது. தண்ணீரின் ஆழம் குறைந்திருந்தது. நீந்துவதை நிறுத்திய ஆண்டனி தரையில் நடக்க ஆரம்பித்தான்.

இப்போது இருட்டு மாறி, சற்று வெளிச்சம் அந்த குகையில் தெரிந்தது. சின்னச் சின்ன பூச்சிகள் வித்தியாசமாக பறந்து கொண்டிருந்தன.

அப்பொழுதுதான் அந்த குகை வெகு நீளத்திற்கு நீண்டு போவதும், அதில் இரண்டு மூன்று பிரிவுகள் பிரிந்து செல்வதையும் கவனித்தான். ஒரு பிரிவின் இருட்டான வாசலில் ஏதோ ஒரு பொருள் மின்னிக்

## மர்மக்குகை உண்மையில் இருக்கிறதா ?

இத்தாலியில் ரோமுக்கு அருகில் பாஸ்டினா என்ற மர்மக் குகை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தக் குகைக்குள் ஒரு சின்ன ஓடையும் ஓடுகிறதாம். இந்த ஆறு குகைக்குள்ளிருந்து எந்த இடத்தில் மேலே வருகிறது? இதன் நீளம் என்ன? என்பதை ஆராய்ச்சியாளர்கள், தற்போது தகுந்த கருவிகளுடன் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். படத்தில் பாஸ்டினா குகையில் நீர் தேங்கியுள்ள இடத்தில் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து கொண்டு இருக்கிறார்கள்.



Scanned by CamScanner

கொண்டிருப்பதைக் கவனித்தான். அது என்ன பொருள் என்று கவனிக்க ஆர்வத்தோடு அதன் அருகில் சென்றான்.

அதைக் கையில் எடுத்துப் பார்த்த போது அது கண்ணாடியால் ஆன ஃபீடிங் பாட்டில் என்பது புரிந்தது. அதற்கு அருகிலேயே வெண்ணெய் தடவிய, பாதி ரொட்டித் துண்டுகளும் கிடந்தன.

மூன்று பிரிவுகள், குகையில் பிரிந்து செல்வதை ஆண்டனி கவனித்தான். இந்த ஃபீடிங் பாட்டிலும், ரொட்டித் துண்டுகளும் கிடக்கும் இந்த வாயிலில், குகை மனிதன் ஓடியிருக்க வாய்ப்பு இருக்கிறது!

அப்போது... சற்று தூரத்தில் அந்த நீரோட்டத்தின் கரை ஓரமாக யாரோ ஓடும் காலடிச் சத்தம் ஆண்டனிக்கு தெளிவாகக் கேட்டது !

இருட்டான குகையின் ஓடைக் கரையில் காலடி சத்தத்தைத்தான் கேட்க முடிந்தது. உருவம் தெரியவில்லை. ஆண்டனி கரையோரம் எழுந்த காலடி சத்தத்தை பின் தொடர்ந்து ஓடினான்.

ஐம்பதடி தூரத்தில் காலடி ஓசை முன்னோக்கி போய்க் கொண்டே இருந்தது. அதை பின் தொடர்ந்து ஓடும் போது, குகை வளைந்து வளைந்து, வேறு வேறு திசைகளில் பிரிந்து போனது. எப்படி இருப்பினும், காலடி ஓசையைத் தொடர்ந்து போவதில் குகை மனிதனைப் பிடித்து விட வாய்ப்புண்டு.

ஏறத்தாழ 30 நிமிட இடைவெளிக்குப்பிறகு காலடி ஓசையை கேட்கும் இடத்தில் எல்லாம் தண்ணீரில் குதித்தும், கரடு முரடான பாறைகளில் ஓடியும், இறுதியில் ஆண்டனி குகையின் ஆரம்ப வாயிலுக்கே வந்து சேர்ந்திருந்தான்.

குகையின் அமைப்பு இப்படி விசித்திரமாக இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.! குகை வாசலில் சோபியாவின் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

ஆண்டனியைப் பார்த்ததும் அவர்கள், "நல்ல வேளை! நீயாவது உயிருடன் திரும்பி விட்டாயே! இதே பார் ஆண்டனி.. குகை மனிதன் கையில் சிக்கிய குழந்தை இன்னும் உயிரோடு இருக்கும் என்று வீணாக் கனவு கண்டு தேடிக் கொண்டிருக்காதே!

குழந்தை லீனாவின் தொட்டிலை அந்த குகை மனிதன் உடைத்து சின்னாபின்னப் படுத்தியதைப் பார்த்த தோட்டத் தொழிலாளர்கள், சோபியா மேடத்திடம் பயத்தோடு சொல்லி விட்டார்கள்.

நீயும் முட்டாள் தனமாக எந்த ஆயுதமும் இன்றி

Scanned by CamScanner

குகைக்குள் போனதையும் தெரிந்து கொண்ட மேடம், ‘கடைசியில் என் குழந்தையோடு ஆண்டனியையும் கொன்று விட்ட மாபாவியாகி விட்டேனே!’ என்று கதறி அழுது மூர்ச்சித்து விழுந்து விட்டார்கள்.

‘நீ.உடனடியாக வந்து ஆறுதல் சொன்னால் ஒரு வேளை சோபியா மேடத்துக்கு நினைவு திரும்பலாம். ” என்றனர்.

குழந்தையை எப்படியாவது மீட்க நினைத்த ஆண்டனிக்கு, சோபியா மேடத்தின் பரிதாபகரமான நிலையும் புரிந்தது. குழந்தையைப் பறி கொடுத்த நிலையில் அந்த அப்பாவிப் பெண், விபரீதமான முடிவைத் தேடிக் கொள்ள வாய்ப்புண்டு.

இந்த நிலையில் தானும் குகைக்குள் சென்று மாட்டிக் கொண்டோம் என்ற நினைப்பு அவளுக்கு வரவே கூடாது. அது மட்டுமல்ல. குகை மனிதன் குழந்தையை, கொல்லவில்லை. குழந்தை உயிரோடு தான் இருக்கிறது என்ற உண்மையை உடனடியாக சோபியாவுக்குச் சொல்வது இப்போதைக்கு ஆறுதலைத் தரும்.

அரண்மனையை நோக்கி விரைந்தான் ஆண்டனி.

அரண்மனை முழுவதும் பரபரப்பில் இருந்தது. டாக்டர்களும், தாதிகளும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். ஆண்டனி நேராக சோபியா இருக்கும் அறைக்குச் சென்றான். அவளுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. கள்ளங்கபடமற்ற அந்த முகத்தில் சொல்லொண்ணாத் துயரம் கப்பிக் கொண்டிருந்தது.

நம்பிக்கையூட்டும் எந்த செய்தியும் அவள் காதுகளில் விழவில்லை என்றால், சோபியா ஒரேயடியாக கண்ணை மூடி விடவும் வாய்ப்பு உண்டு. படுக்கைக்கு அருகில் சென்று, டாக்டரின் அனுமதியைக் கூட எதிர்பார்க்காமல் சோபியாவைத் தொட்டு உலுக்கினான்.

“மேடம்... கண்ணைத் திறந்து பார். நான் ஆண்டனி வந்திருக்கிறேன்.. நீ நினைத்தது போல எதுவும் ஆகி விடவில்லை. கண்ணைத் திற. உன் குழந்தை லீனா உயிரோடு இருக்கிறாள். நம்பு..”

இந்த கடைசி வார்த்தைகளில் டாக்டர்களின் மருத்துவத்திற்கு திறக்காத அவள் கண்கள் மெதுவாகத் திறந்தன.

“உன்னை ஆறுதல் படுத்துவதற்காக சொல்லவில்லை மேடம்.. நிச்சயம் லீனா உயிரோடு இருக்கிறாள். கூடிய விரைவில் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற அருமையான திட்டம் போட்டுள்ளேன்..”

Scanned by CamScanner

சோபியாவின் கண்களில் நீர் திரண்டு கன்னத்தில் வழிந்தது. அவள் உதடுகள் எதையோ சொல்லத் துடித்தது. அந்த அறையைச் சுற்றி பார்வையை செலுத்தினாள்.

டாக்டர், சோபியா மனம் திறந்து ஆண்டனியிடம் இந்த நேரததில் பேசுவது நல்லது என்று முடிவெடுத்து, அறையிலிருந்த எல்லோரையும் வெளியில் வரும்படி சைகை செய்து அழைத்துச் சென்று கதவை மூடி விட்டார்.

அடுத்து நிமிடமே சோபியா ஆண்டனியை கட்டிப் பிடித்துக் கொண்டு, 'ஓ'வென்று கதறினாள்.

''எனக்கு இந்த தண்டனையை குகை மனிதன் கொடுக்கவில்லை ஆண்டனி! ஆண்டவன்தான் கொடுத்திருக்கிறான். எனக்கு வேண்டும். நான் சித்திரவதைப் பட்டுத்தான் சாவேன் ! ஏனென்றால் நான் அவ்வளவு கொடுமைகள் செய்திருக்கிறேன். என் அன்பான கணவரை வெளியில் செல்ல முடியாதபடி விம்ம வைத்திருக்கிறேன்.

நான் மிகப் பெரிய அழகி என்ற கர்வம் எனக்குத் தெரியாமலேயே எனக்குள் இருந்திருக்கிறது. படித்துக் கொண்டிருக்கும் வயதில் எனக்கு கல்யாணமே தேவையில்லைதான். ஆனால் என் மேல் உயிரையே வைத்திருந்த என் அப்பாவின் வார்த்தையை நான் தட்ட முடியவில்லை. எனக்கு திருமணம் செய்து வைத்து விட்டார்.

என் கணவர் என்னை தேவதையாக நினைத்தார். தனது மார்பில் என்னை இருபத்து நாலு மணி நேரமும் புதைத்துக் கொள்ள விரும்பினார். என் காலடியில் விழுந்து கெஞ்சி, என்னை படுக்கை அறைக்கு கூப்பிடும் அளவு நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

ஆனால் நானோ குழந்தை பெற்றால் என் வனப்புப் போய் விடும் என்ற பேதமையில் நான் அரக்கியாக மாறி விட்டேன். படுக்கை அறையில் என் கை கிளவுஸைக் கூட கழட்ட மறுத்திருக்கிறேன். நான் மயங்கித் தூங்கிய பிறகுதான், அவர் என்னை அனுபவிக்க அனுமதித்திருக்கிறேன்.

அப்போது கூட எனது சின்ன இடை பெருத்து எனக்கு கர்ப்பம் உண்டாகி விடக் கூடாது என்ற கோபத்தில் 'நீ செத்துப் போ ! என் பக்கத்தில் வராதே ' என்று அமைதியான இரவு நேரங்களில் கிரிகாரியோவுக்குக் கூட கேட்கும்படி ஆர்ப்பாட்டங்கள் செய்திருக்கிறேன்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட கிரிகாரியோ, அநியாயமாக என் கணவனை தன் திட்டத்திற்கு கொன்று போட்டிருக்கிறான். அதற்கு பிறகுதான் நான் கர்ப்பமுற்றிருப்பதை உணர்ந்து

Scanned by CamScanner

கொண்டேன். குழந்தையை வயிற்றில் சுமக்கும் சுகத்தை உணர ஆரம்பித்தேன். தாயாகும் பெருமையை விட, சிறப்பான அம்சம் உலகில் வேறு எதுவும் இல்லை என்பதை இயற்கை எனக்கு உணர்த்த ஆரம்பித்தது.

குழந்தை பிறந்த பிறகு தான் என் சோகம் இன்னும் அதிகமாகியது. இப்படி ஒரு அற்புதமான சிருஷ்டியைத் தந்த கணவனையா ஒதுக்கினேன்.? என் குழந்தை மேல் எனக்கு அளவு கடந்த பாசம் ஏற்பட்டதோடு, என் கணவனின் மறைவு என்னை வாட்ட ஆரம்பித்தது.

என் கணவர் என்னைக் கெஞ்சிக் கெஞ்சி கேட்டும் காட்டாத என் உடலை கண்ணீரோடு அவர் போட்டோவுக்கு முன் உடைகளை களைந்தெறிந்துவிட்டு நிற்பதற்கு அதுதான் காரணம் !

என் மேல் அபரிமிதமான அன்பு வைத்திருந்த கணவனை உதாசீனப் படுத்தினேன்.. இன்று நான் உயிரையே வைத்திருக்கும் குழந்தையை, ஆண்டவன் என்னிடமிருந்து பிரித்து, என் கணவர் அனுபவித்த அவஸ்தையை என்னை உணர வைக்கிறார்...''

*தலையணையில் முகம் புதைத்து, உடல் குலுங்கி, சோகத்தில் சோபியா அழ ஆரம்பித்தாள்.*

*சோபியாவின் வனப்பு எப்பேர்பட்ட அழகனையும் அடிமைக் கொள்ள செய்வதுதான். அப்படிப்பட்ட பெண், இந்த இளம் வயதில் விதவையான பின்பு, திருமணம் வேண்டாமென மறுத்துவிட்டதற்கு காரணமும், தனது உடைகளைக் களைந்து வீசி விட்டு கணவனின் போட்டோவுக்கு முன் மண்டியிட்டு அழுவதன் காரணமும் ஆண்டனிக்குத் தெளிவாகத் தெரிந்தது.*

ஊருக்கெல்லாம் ஓடி ஓடி உதவி செய்யும் சோபியாவின் அந்தரங்க வாழ்க்கையில் இப்படி ஒரு சோகமா?

*ஆண்டனியால் ஜீரணிக்கவே முடியவில்லை. கோடீஸ்வர வாழ்க்கை, உடல் வனப்பு, எதார்த்தமான வாழ்க்கையின் உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடியாத பேதமை – இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இன்று சோபியாவை குற்ற உணர்வோடு கண்ணீர் விட வைத்திருக்கிறது. அனாதையாக இருந்து,* 'காட் ஃபாதரால்' தத்தெடுக்கப்பட்டவள். சொத்து விஷயத்தில் ஏமாற்றமடைந்த கிரிகாரியோவால் கணவனையும் இழந்தவள் ! குழந்தை லீனாவின் மூலம் வாழ்க்கையின் அர்த்தத்தை உணரும் நிலையில் அந்தக் குழந்தையையும் பிரிவது சகிக்க முடியாத கொடுமைதான் !

*இந்த இடத்தில் ஆண்டனிக்கு ஏதோ ஒரு யூகம்*

Scanned by CamScanner



பளிச்சென்று மனதில் பட்டது.

"சோபியா.... நீ மனதைத் தேற்றிக் கொள்..! விபரம் தெரியாத சின்ன வயதில், நீ செய்த தவறுகளுக்கு வருத்தப்படவும் ஆரம்பித்து விட்டாய். இந்த நிலையில் ஆண்டவன், எந்தத் தவறும் செய்யாத குழந்தை லீனாவை அநியாயமாகச் சாகடிக்க மாட்டான்.

நான் அவசரமாக ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். குழந்தை லீனாவுக்கு தேவையான கம்பளி உடைகள், ரொட்டி, பால் எல்லாவற்றையும் அந்த மர்மக் குகையின் வாசலில் வைத்துவிட்டு வரப்போகிறேன். எனக்கென்னவோ அந்த குகை மனிதன், குழந்தை லீனாவுக்கு எந்த ஆபத்தும் தர மாட்டான் என்றே மனதில் படுகிறது.

**நீ இப்பொழுது மனம் விட்டு அழுது சொன்ன விவரங்களில், ஒரு மிகப் பெரிய உண்மையும் மறைந்து கிடப்பதாக நான் யூகிக்கிறேன்.**

என்று கூறிவிட்டு, அவசர அவசரமாக குழந்தை லீனாவுக்குத் தேவையான கம்பளி உடைகள், ரொட்டி, பால் இவற்றை சேகரித்தான். பின் அவைகளை பாதுகாப்பாக ஒரு பெரிய கூடையில் வைத்து, அதை பாஸ்டினா குகை வாசலில் ஒரு மரத்தில் கட்டி, தொங்க விட்டான். இரண்டு நாட்களுக்கு யாரும் அந்தப் பகுதியில் நடமாடவும் வேண்டாம், என்று கடுமையாக எச்சரிக்கையும் செய்தான், ஆண்டனி.

Scanned by CamScanner

மூன்றாவது நாள்...

ஆண்டனி மட்டும் அந்த மர்மமான குகையை நோக்கி, ஏதோ ஒரு கணிப்போடு சென்றான் !

ஆண்டனி அந்த மர்மமான குகையின் வாசலில் இருக்கும் ஒரு மரத்தை நோக்கிப் போனான். அந்த மரத்தில் கட்டி வைத்திருந்த கூடையும், குழந்தை லீனாவுக்காக வைக்கப்பட்டிருந்த ரொட்டி, பால், உடைகளை எல்லாம் நிச்சயமாக அந்த குகை மனிதன் எடுத்துச் சென்றிருப்பான் என்று ஆண்டனி உறுதியாக நம்பினான்.

ஆனால் மரத்துக்கு அருகில் வந்து பார்த்த போதுதான், அவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அந்தக் கூடையில் வைத்திருந்த அத்தனைப் பொருட்களும் அப்படியே இருந்தன. அத்தோடு குழந்தை லீனா காணாமல் போன போது போட்டிருந்த ஸ்கர்ட்டும், அந்த கூடையின் மேல் பகுதியில் இருப்பது இப்போது தெளிவாகத் தெரிந்தது.

பளபளப்பான அந்த வெள்ளை கவுனில் திட்டுத் திட்டாக ரத்தக் கறைகள்..! ஆண்டனி அவசர அவசரமாக மரத்தின் மேல் ஏறினான்.

## 7

ஆண்டனிக்கு மனதில் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி புயலாக உருவெடுத்தது. குழந்தை லீனாவின் உயிருக்கு இனி உத்திரவாதம் இல்லையா? குழந்தை லீனாவுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்ட பிறகு இனி எதற்காகவும் காத்திருந்து பயனில்லை.. யார் என்ன சமாதானம் சொன்னாலும், சோபியா மேடத்தின் வருத்தத்தை மாற்ற முடியாது.

ஆண்டனியின் நம்பிக்கை இப்போது படு சூன்யமானது. அதே சமயத்தில், அந்த சூன்யத்தில் ஒரு ஆக்ரோஷப் புயல் மையம் கொள்ள ஆரம்பித்தது. வெகு சீக்கிரத்திலேயே அது விஸ்வ ரூபம் எடுத்தது !

அச்சுறுத்தும் அந்த குகை மனிதனைக் கொன்று போட்டு விட்டு, வருவது... இல்லா விட்டால், அந்தக் குகையை விட்டு,

Scanned by CamScanner



ஆண்டனியின் சடலம்தான் வர வேண்டும்.

சோபியா மேடத்தின் குழந்தை லீனா, குகை மனிதனால் கடத்தப்பட்ட செய்தி இதற்குள் போலீஸுக்கும் போய்விட்டது. அவர்களும் பாஸ்டினோ குகை வாசலை நோக்கி, சகல ஆயுதங்களுடன் வர ஆரம்பித்துவிட்டனர்.

அவர்களிடம் சகல ஆயுதங்களும் இருந்தது உண்மைதான்.

இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் தண்ணீர் நிறைந்த அந்த இருட்டான குகைக்குள் சிறிது தூரம் சென்று விட்டு, அதற்கு மேல் போக முடியாமல் குழப்பத்தோடு நின்றார்கள்.

ஆயிரம் பேரைக் கூட எதிர்த்து சமாளிக்க அந்தப் போலீஸ் படையால் முடியும்.. ஆனால் திக்குத் திசை தெரியாத இருட்டு குகை..! உள்ளே விசித்திரமாக உலவி வரும் குகை மனிதன்! அவனைப் பற்றிய அதீதமான வதந்திகள்.. கற்பனைகள் கட்டுக் கதைகள்! அவன் மனிதன் தானா? அல்லது அமானுஷ்யமான வேறு ஏதாவது ஒரு சக்தியா?

அந்த போலீஸ் படையை தலைமை தாங்கிய சார்ஜெண்ட் கூட என்ன செய்யலாம் என்ற குழப்பத்தில், குகை வாசலில் தயங்கி நின்று கொண்டிருந்தார்.

இந்த நிலையில் ஆண்டனி குகை வாசலை நோக்கி கோபாவேஷமாக ஓடினான். நீர் நிறைந்து தளும்பிக் கொண்டிருக்கும் அதன் வாசலில் செயலற்று நின்று கொண்டிருந்த போலீஸ்காரர்களை ஆண்டனி ஒரு கணம் பார்த்தான்.

அடுத்த நிமிடம், அவனது வேகம் எந்த அனுமதியும் பெறாமலேயே போலீஸ்காரர்கள் கையில் இருந்த துப்பாக்கிகளையும், குண்டுகளையும் பறிக்கச் செய்தது.

இதை போலீஸ்காரர்களும் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கையில் தாங்கிய ஆயுதங்களோடு, ஆண்டனி தண்ணீருக்குள் பாய்ந்தான். கையால் வீசும் நவீன ரக குண்டுகள், பிளாஸ்டிக் உறைகளால் சுற்றப் பட்டிருந்தன. அவை தண்ணீருக்குள் மூழ்கினாலும், செயல் திறனை

Scanned by CamScanner

இழக்காதவை!

ஸ்தம்பித்து நின்ற போலீஸ்காரர்கள், சார்ஜெண்டின் உத்தரவுக்காகத் திரும்பிப்பார்த்தார்கள்.

ஆண்டனியின் துடிப்பும் துணிச்சலும், சார்ஜெண்டுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது.

"அவன் உள்ளே போகட்டும். விட்டு விடுங்கள்..! அவனைத் தொடர்ந்து A–4 பிரிவின் பத்து பேர் ஃபாலோ செய்யுங்கள்" என்றார் உற்சாகத்தோடு.

அவர் சொல்லி முடிக்கும் முன்பே, குகைக்குள் ஆண்டனி வீசிய குண்டுகள் முழங்க ஆரம்பித்தன. பாறைகள் வெடித்துச் சிதறும் ஓசை கேட்டது.

பாதியளவு தண்ணீர் நிரம்பிய குகை வாசலில் வெடி குண்டு புகை சூழ்ந்து பரவி வெளிப்பட்டது. இந்த நிலையில் உள்ளே போக போலீஸ்காரர்கள் கொஞ்சம் தயங்கி நின்றார்கள்.

அடுத்தடுத்து துப்பாக்கி வெடிக்கும் ஓசையும், பூமியை அதிர வைக்கும் குண்டு வெடிப்பும் கேட்டுக் கொண்டே இருந்தன.

ஆண்டனி ஏற்கெனவே குகைக்குள் ஒரு முறை சென்று திரும்பியதால் அவன் முன்னேறிச் செல்வதில் எந்த தடுமாற்றமும் வரவில்லை. குகைக்குள் சிறிது தூரம் போனவுடன் எங்கெங்கு அசைவுகள் தெரிகிறதோ, அங்கெல்லாம் சுட்டான்.

**ஒரு முறை தூரத்தில் குண்டு வீசி வெடித்து, பாறைகள் சரிந்த போது, யாரோ, அல்லது ஏதோ ஒன்று உறுமும் சத்தத்தைக் கேட்டான். ஆண்டனியின் மனதில் ஆவேசம் மேலும், கொழுந்து விட்டு எரிந்தது.**

ஆண்டனி ஒரு வெறி பிடித்த நிலைமைக்கு வந்தான். குறும்பும், மழலையும் மலர்ந்த குழந்தை லீனாவின் முகம் அவன் மனக் கண்ணில் ஒரு முறை பிரகாசமாகத் தோன்றி மறைந்தது.

அடுத்து, ரத்தக் கறைப் படிந்த குழந்தை லீனாவின் கவுன், அவன் மனத் திரையில் படபடவென்று அசைந்து பரிதாபமாகக் காட்சி அளித்தது.

அடுத்த விநாடி, தன் கையிலிருந்த வெடி குண்டை உறுமல் வந்த திசையை நோக்கி வீசினான்..

மேலும் சில பாறைகள் வெடித்து அந்த குறுகலான குகையில் சத்தம் பல முறை இடிபோல் எதிரொலித்து அடங்கியது.

வெடிச் சத்தத்தின் இறுதியில் யாரோ, தீனமாக முனகும்

Scanned by CamScanner



சத்தம் கேட்டது. ஆண்டனி அந்தக் குரல் வந்த திசையை நோக்கி ஓடினான். புகை மூட்டத்தில் எதுவுமே தெரியவில்லை. இருந்தாலும், வேகமாக ஓடிய ஆண்டனியின் கால்களில், தரையில் விழுந்து கிடக்கும் ஒரு உடல், தட்டுப்பட்டது. **அது குகை மனிதன் தான்.**

அடுத்த நிமிடம், தன் துப்பாக்கி முனையை மேலே உயர்த்தி அந்த உடலை, குத்திக் கிழிக்க ஓங்கினான்.. விழுந்து கிடந்த உருவம், அடித்தொண்டையில் கரகரப்பாக பேசியது.

**"கொன்று விடு ஆண்டனி.. ! உன் கையால் நான் சாவது நல்லதுதான்.. என்னைக் கொன்று விடு.. !"**

இந்த இரண்டே வாக்கியங்கள், ஆண்டனி ஓங்கிய துப்பாக்கி முனையை அப்படியே நிற்க வைத்தன.

குகை மனிதனின் குரல் ஆண்டனிக்கு ஏற்கெனவே பரிட்சயமானதுதானா? சரியாகத் தெரியவில்லை. சாதாரணமாகப் பேசும் வார்த்தைகள் கூட கரகரத்து எதிரொலிக்கும் அந்த இருட்டுக் குகையில் மரண

Scanned by CamScanner

அவஸ்தையில் ஒருவன் பேசும் குரலை அவ்வளவு சரியாக இனம் கண்டு பிடிப்பது சிரமம்தான்..

**'இந்த குகை மனிதன் யாரென்று எனக்குத் தெரியா விட்டாலும், நான் யார் என்று இந்த குகை மனிதனுக்குத் தெரிந்திருக்கிறது. என்னைத் தெரிந்து வைத்திருக்கும் இவன் யார்..?'**

ஒரு வேளை.... ஆண்டனி தன் மனதில் நினைத்துக் கூட பார்க்க முடியாத சில **கணிப்புகளை யூகித்திருந்தான்..** அப்படி இருக்குமா? அவசர அவசரமாக குகை மனிதன் மேல்



விழுந்து கிடந்த, பாறைகளை ஆண்டனி சிரமப்பட்டு தள்ளி நகர்த்தினான்.

ஆண்டனி அவசர அவசரமாக பாறைகளை நகர்த்தி, குகை மனிதனை இழுத்து, தன் தோள் மேல் போட முயன்றான். ஒன்று மட்டும் தெரிந்தது. அவன் நல்ல உயரமாக இருந்தான். ஏறத்தாழ பாறை விழுந்து மோதியதில், அவன் பாதி மயக்க நிலைக்கு வந்திருக்கிறான்..

அவசரமாக இவனுக்கு சிகிச்சைக் கொடுத்து, உயிர் பிரியாமல் காப்பாற்றியாக வேண்டும். அப்போதுதான் .... எல்லா உண்மைகளும் தெரியும். வெடி குண்டுகளால் குகையின் குறுகலான பாதை ஏராளமாக சிதறுண்டு கற்களால் நிரம்பியிருந்தது.

பருத்த உடலும், நீண்ட உருவமும் கொண்ட குகை மனிதனை சுமந்து கொண்டு அந்தப் பாதை வழியாக வெளியே வருவது ஆண்டனிக்குச் சிரமமாக இருந்தது.

சிறிது நேரத்தில் தள்ளாடியபடி, குகை மனிதனை தன் வலது தோளில் சுமந்தபடியே ஆண்டனி குகையை விட்டு வெளியே வந்தான்.. போலீஸ் சார்ஜெண்ட் அவசரமாக ஆண்டனிக்கு அருகில் வந்தார்.

ஆண்டனி தன் இடுப்பில் வைத்திருந்த, கடைசி வெடி குண்டை அவசரமாக வெளியே எடுத்து, சார்ஜெண்டைப் பார்த்து கோபமாகக் கத்தினான்...

"நெருங்காதே... ! நெருங்கினால் வெடிகுண்டை வீசி எல்லோரையும்... கூண்டோடு நரகத்துக்கு அனுப்பி விடுவேன்.... தயவு செய்து எனக்கு வழி விடுங்கள்.. இந்த குகை மனிதன் உயிரை, நான் காப்பாற்றியே ஆக வேண்டும்.. ஏனென்றால் அவன் கடத்திச் சென்ற குழந்தை லீனா இன்னும் நம் கைக்குக் கிடைக்கவில்லை."

சார்ஜெண்ட் இந்தஇடத்தில் அவசரமாக ஆட்சேபித்தார்.

"இதோ பார் ஆண்டனி, அதெல்லாம் எங்கள் டிபார்ட்மென்டின் பொறுப்பு.... ஒழுங்காக குகைமனிதனை என்னிடம் ஒப்படைத்து விடு.." என்றார்.

"முடியாது சார்ஜெண்ட்... வாழ்க்கையில் பல கட்டங்களில் நான் போலீஸ் அதிகாரிகளால் பாதிக்கப் பட்டுள்ளேன்.. உங்களின் அவசரமும், மிருகத்தனமான சித்திரவதைகளும், ஏற்கனவே அடிபட்டு இருக்கும் குகை மனிதனை வாய்திறக்கும் முன்பே.. சாகடித்து விடும்.

எல்லாமே வீணாகி விடும். குழந்தை லீனா கிடைக்காவிட்டால், சோபியா வாழ்க்கையும் அஸ்தமனமாகி விடும். எனவே தயவு செய்து அந்தப் பாவத்துக்கு ஆளாகி

Scanned by CamScanner

விடாதீர்கள்..!"

போலீஸ்காரர்கள் வட்டமடித்து நெருங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே, ஆண்டனி தன் கையிலுள்ள வெடிகுண்டைக் காட்டி, அச்சுறுத்திக் கொண்டே போலீஸ் ஜீப்பை நோக்கி அடி மேல் அடி வைத்து நகர்ந்தான்.

கண்டிப்பு மிகுந்த சார்ஜெண்ட் கூட, ஆண்டனியின் உருக்கமான வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நின்றார்..

அவரது மலைப்பைப் பயன்படுத்திக் கொண்ட ஆண்டனி நொடிப் பொழுதில் குகை மனிதனை ஜீப்பின் பின் சீட்டில்



Scanned by CamScanner

சௌகரியமாகப் படுக்க வைத்தான்.

குகைக்குள் வெடிகுண்டுகளின் அதிர்வுகளும், துப்பாக்கி குண்டுகளின் சரமாறியான வெடிச் சத்தமும், இதற்குள் தோட்டத் தொழிலாளர்களை அங்கு வரச் செய்திருந்தது.

ஒரு தொழிலாளி கத்தினான். "அதோ பார்! நீளமான கால்கள்.. காக்கிச் சட்டை வார் பெல்ட் கொஞ்சம் கூட சந்தேகமில்லை.. அது மென்டோஸா தாத்தா தான் !

"ஆமாம் ! செத்துப் போன மென்டோஸா தாத்தா எப்படி திரும்பி வந்தாரு? "

"குகை மனிதனா தாத்தா ஏன் நடிக்கணும்.. ?"

"அது சரி..! இப்ப ஜீப்பிலே கிடக்கிறாரே..! அவருக்கு உசிரு இருக்கா இல்லையா?"

யாருடைய பேச்சும் ஆண்டனியின் காதில் விழவேயில்லை.. அவனது ஒரே குறிகோள்..

'குகை மனிதன் செத்து விடக் கூடாது. குழந்தை லீனாவின்இருப்பிடம் அவன் மூலம் தெரிந்தே ஆக வேண்டும்.. !'

ஜீப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சீறிப் பாய்ந்தது. அடுத்த பதினைந்தாவது நிமிடம்.. ஆண்டனி அந்த குகை மனிதனை அருகிலிருந்த ஹாஸ்பிடலின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தான்..

குகை மனிதன் முகம் கரடு முரடாக இருந்தது. முதுகு, மடிக்கப்பட்ட பாய் போல் கூன் விழுந்துதான் இருந்தது. குகையின் வெடி குண்டுகள் வீச்சுகளாலும், பாறைகள் தெறித்துச் சிதறியதாலும், குகை மனிதனின் முகம் ஒரளவு உருக்குலைந்தே இருந்தது.

குகை மனிதனை ஆஸ்பிடலில் சேர்த்த பிறகு தான் டாக்டர்கள் கவனித்தார்கள். ஆண்டனியின் வலது தோளில் பாறைச் சிதறல்கள், புல்லட் போல் துளைத்து அதில் ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது.

ஆண்டனியையும் உடனே அவசரப் பிரிவில் சேர்த்து, அவன் தோள்களுக்குள் பதிந்திருந்த கூரான கற்களை ரத்தம் வடிய எடுத்துப் போட்டார்கள்.

வலி தெரியாமலிருக்க மயக்க ஊசி ஆண்டனிக்குப் போடப்பட்டது உண்மைதான் என்றாலும், ஆண்டனி குறித்த நேரத்திற்கு முன்பே கண் விழித்து விட்டான்.

"குகை மனிதன் பிழைத்து விட்டானா? அவன் இப்போது பேசுகிறானா? அவனை நான் பார்க்க வேண்டும் !"

என்று பொறுமையிழந்து, கத்த ஆரம்பித்தான்

Scanned by CamScanner

ஆண்டனி. பெட்டை விட்டு நகரக் கூடாது என்று டாக்டர்கள் அவனை எச்சரிக்கை செய்தார்கள். இந்த நிலையில் திடீரென்று ஹாஸ்பிடலின் எச்சரிக்கை மணி அபாயச் சங்கு போல் அலறியது.

வார்டு பாய்களும் நர்ஸுகளும் விழுந்தடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடினார்கள்.

ஆண்டனி சிரமப்பட்டு படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். தன் அறைக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்த ஒரு வார்ட்பாயை கத்திக் கூப்பிட்டான்.

"ஏன் எல்லோரும் ஓடுகிறீர்கள்?"

வார்டு பாய் சொன்ன பதிலில் மயக்க ஊசிப் போட்டும் நினைவு தப்பாத ஆண்டனி, இப்போது மூர்ச்சித்துவிடும் நிலைக்கு வந்து விட்டான்.

**"எமர்ஜென்ஸி வார்டிலிருந்த குகை மனுஷன் எப்படியோ தப்பிச்சு ஓடிட்டானாம்! ஆஸ்பத்திரி பூரா தேடியும், கிடைக்கவில்லையாம் !"**

'எமர்ஜென்ஸி வார்டில், பெட்டில் இருந்த குகை மனிதனைக் காணவில்லை' என்ற செய்தி ஆஸ்பத்திரி முழுவதும் பெருத்த பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

குகை மனிதன் மேல் கொலைக் குற்றங்களும், ஏராளமான திருட்டுக் குற்றங்களும் சுமத்தப்பட்டிருந்தது, மருத்துவ மனை டாக்டர்களுக்கும் தெரிந்த விஷயம் தான். 'இப்பொழுது எமர்ஜென்ஸி வார்டில் இருந்த குகை மனிதன் காணாமல் போய் விட்டான்' என்ற செய்தியை, அவசர அவசரமாக போலீஸுக்கும் தெரிவித்து விட்டனர்.

போலீஸ் அதிகாரி, முதல் நடவடிக்கையாக ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு ஒரு கட்டளை இட்டார்.

"அடிபட்டு மயங்கி, எமர்ஜென்ஸி வார்டில் இருந்த குகை மனிதன், அவ்வளவு சீக்கிரம் வெளியே தப்பி ஓடியிருக்க முடியாது. ஆஸ்பத்திரி கட்டிடத்தின் மூலை முடுக்குகளில் எங்காவது தான் ஒளிந்து கொண்டிருப்பான். எனவே ஆஸ்பத்திரியின் எல்லா கேட்டுகளையும் உடனே மூடிப் பூட்டுங்கள். நோயாளிகளின் அறைகளையும் பாதுகாப்பாக உள் தாளிட்டு வைக்கச் சொல்லுங்கள். போலீஸ் படை விரைந்து கொண்டிருக்கிறது!"

போலீஸ் அதிகாரியின் ஆணையை ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் உடனே நிறைவேற்றினர்.

இந்த நிலையில் மேலும் சில அதிர்ச்சியூட்டும் தகவல்கள் ஆஸ்பத்திரிக்குள் பரவ ஆரம்பித்தன.

Scanned by CamScanner

"ஆபரேஷன் தியேட்டரில் இருந்த நீளமான கத்தியை காணவில்லையாம். குகை மனிதன் தான், அதை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்."

"அப்படியானால் அந்த குகை மனிதன் யாரையாவது கொல்ல விரும்புகிறானா?"

"இருக்கலாம்."

நர்ஸுகளும், டாக்டர்களும் கூட்டம் கூட்டமாக ஒரு அறையில் பயத்தோடு முடங்கிக் கிடக்க நேர்ந்தது.

போர்க் காலங்களில் கூட, ஒரு ஆஸ்பத்திரியின் இயக்கத்தை ஒட்டு மொத்தமாக கட்டுப்படுத்துவது இயலாத காரியம். நோயாளிகளின் மதிப்பிட முடியாத உயிர், வினாடிகளை ஒத்திப் போடுவதால் கூட பறி போய் விடும்.

இருபத்தி ஏழாம் நம்பர் ரூமில், அப்போதுதான் ஆபரேஷன் செய்து, பெட்டில் ஸ்ட்ரச்சரோடு வைக்கப்பட்ட நோயாளிக்கு வலிப்பு வந்து விட்டது. ஆக்ஸிஜன் கொடுக்க வேண்டும். இதயத் துடிப்பை கண்காணிக்க வேண்டும். தேவையான திரவங்களை உடலுக்குள் நொடி பிசகாமல் ஏற்ற வேண்டும்.

தங்களை நம்பி உயிரை ஒப்படைத்துள்ள நோயாளிகளை டாக்டர்கள் எப்படி கை விட முடியும்? போலீஸ் அதிகாரியின் கட்டளைகளை, மீற வேண்டிய கட்டாயங்களும் நேர்ந்தன.

27ம் நம்பர் ரூமுக்கு அனுபவம் மிக்க டாக்டர்களும், நர்ஸுகளும் ஓடினார்கள்.

பயந்த சுபாவமுள்ள ஒரு நர்ஸ், வலிப்பு வந்த நோயாளிக்குத் தேவையான 'சலைன் வாட்டர்' பாட்டில்களை எடுக்க, லேபுக்கு தனியாகப் போனாள்.

**பாட்டில்களை எடுத்துக் கொண்டு திரும்பிய போது.. கூன் விழுந்த ஒரு உருவம், லேபின் இருட்டான ஒரு மூலையில் அசைவது போல் தெரிந்தது.**

'வீல்' என்று கத்தியபடி பாட்டில்களை கீழே போட்டு விட்டு, அழுதபடியே ஓடி வந்தாள் அந்த நர்ஸ்.

அவள், அறைக்கு வெளியே வந்த பொழுது, லேபுக்குள் யாரோ நிலம் அதிர ஓடும் சத்தம் கேட்டதாகக் கூறினாள்.

சில துணிச்சலான டாக்டர்கள் அந்த லேப் கதவை சாத்திப் பூட்டினார்கள்.

ஆண்டனிக்கு எல்லாத் தகவல்களும் வார்டு பையன்கள் மூலம் கிடைத்துக் கொண்டு தான் இருந்தது.

ஆபரேஷன் தியேட்டரிலே இருந்த நீளமான கத்திகளில்

Scanned by CamScanner

ஒன்று, காணாமல் போனதுதான் ஆண்டனிக்கு அதிக கவலையை ஏற்படுத்தியது.

இப்பொழுது அவன் கத்தியோடு தப்பித்து ஓடியிருப்பது கூட, சோபியாவை கொலை செய்யும் நோக்கத்தில் இருக்குமோ ?

உடனே அவன் இந்த ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி ஆக வேண்டும். சோபியாவுக்குத் தகுந்த பாதுகாப்பை, கொடுத்தேத் தீர வேண்டும்.

ஆண்டனி விரைவாக தன் பெட்டிலிருந்து எழுந்தான். அடிபட்ட இடது தோள் 'விண் ... விண்' என்று வலித்தது. அவனது அறையில் எந்த நர்ஸும் இல்லை. வராந்தாவுக்கு வந்தான். சுற்றுப் புறத்தை ஆராய்ந்தான்..

எல்லோரும் பயத்தோடும், பதட்டத்தோடும் அவரவர் உயிரை காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஆண்டனியை யாரும் கவனிக்கவே இல்லை.

ஆண்டனி அவசரமாக ரிஷப்ஷன் கதவருகே வந்தான். கதவு, பூட்டித்தான் இருந்தது. சாவியைத் தேடிக் கொண்டிருக்க முடியாது.

அந்த விசாலமான கதவின் வலது புறத்தில், ஒரு அகலமான கண்ணாடி ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னல் வெளிப்புறம் திறந்து மூடும் வசதி இருந்ததால், அதன் தாழ் வெளிப்புறமாகப் போடப்பட்டிருந்தது.

கண்ணாடி கூட, சுவர் போல் கடினமாகத்தான் இருந்தது. பழங்காலத்துக் கண்ணாடி !

சோபியாவை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற உத்வேகம், ஆண்டனியின் மனதில் நிறைந்த உடன் இரண்டடி பின் வாங்கி, தனது வலது காலால் ஜன்னல் கண்ணாடியை மோதினான்.

கண்ணாடி ஜன்னல், சில்லுச் சில்லாக தெறித்து விழுந்தது. ஆண்டனி ரிஷப்ஷன் அறையின் வெளியே உருண்டு விழுந்து சுதாரித்து எழுந்த போது, ஆஸ்பத்திரி மெயின் கேட்டின் பிரம்மாண்டமான இரும்புக் கதவு கிரீச்சென்று திறந்தது.

போலீஸ் படை, ஜீப்புகளிலும், வேன்களிலும் ஆஸ்பத்திரிக்குள் விரைந்து வந்தன. ஜீப்பிலிருந்த உயர் மட்ட அதிகாரி, ஆண்டனி ஜன்னலை உடைத்துக் கொண்டு வெளியே விழுந்ததைக் கவனித்து விட்டார்.

"லுக் ! யாரோ ஒரு பாஸ்ட்ர்ட் ஜன்னல் கதவை உடைத்துக் கொண்டு தப்பி ஓடப்பார்க்கிறான் அரெஸ்ட் ஹிம்.."

Scanned by CamScanner



அருகில் இருந்த ஒரு அதிகாரி "சார், அவன் தான் ஆண்டனி.... குகை மனிதனை நம் டிபார்ட்மெண்டில் ஒப்படைக்காமல் தூக்கிக் கொண்டு ஓடி வந்தவன். வெரி டேஞ்சரஸ் ஃபெல்லோ..! கையில் கிரானைட் குண்டை வைத்துக் கொண்டு, போலீஸையே மிரட்டியிருக்கிறான்.."

உயர் மட்ட அதிகாரியின் முகம், கோபத்தால் சிவந்தது.

**"அந்த ஆண்டனியிடம், நிறைய விசாரிக்க வேண்டும். தப்பி ஓடாமல், இழுத்து வாருங்கள்.."**

என்று ஆணை பிறப்பித்தார். போலீஸ்காரர்கள் புலி போல் ஆண்டனியை நோக்கிப் பாய்ந்தார்கள்..

Scanned by CamScanner

# 8

ஆண்டனியை ஒரே நொடியில் போலீஸ் சூழ்ந்து கொண்டது. இந்த நிலையில் முட்டாள்த்தனமாக தப்பி ஓட முயன்று போலீஸ்காரர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாவதில் ஆண்டனிக்கு சம்மதம் இல்லை.



'பேசிப் பார்ப்போம்'

ஆண்டனி போலீஸ் அதிகாரிகளிடம் மிகத் தெளிவாக, "ப்ளீஸ்.. நான் சொல்வதை கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். அந்த குகை மனிதன் கொலை வெறியோடு ஆபரேஷன் தியேட்டரிலிருந்து கத்தியை எடுத்துக் கொண்டு தப்பி ஓடியிருக்கிறான்.

அவன் நேராக சோபியா மேடத்தின் வீட்டுக்குச் செல்லவும் வாய்ப்பு இருக்கிறது. நான் சோபியா மேடத்தின் மெய்க்காப்பாளன் என்ற முறையில் அவர்களுக்கு, பாதுகாப்புத் தர இப்போது போய்க் கொண்டிருக்கிறேன்.. "

"நீ சொல்ல வேண்டியதை எல்லாம் ஸ்டேஷனில் வந்து சொல்.. இப்போது நீ அரெஸ்ட் செய்யப்படுகிறாய்.. " என்று தீர்ப்பளித்துவிட்டார், போலீஸ் அதிகாரி.

'இருந்தாலும் ஆண்டனி மனம் தளரவில்லை. தீர விசாரிக்காமல், கண்டதே காட்சி...... கொண்டதே கோலம் என்று இப்படித்தான் இவர்கள் முடிவெடுப்பார்கள். இவர்களிடமிருந்து, தப்பிப்பது எப்படி?' என்று சிந்தித்துக் கொண்டே ஆண்டனி போலீஸ் வேனில் ஏறினான்.

**இந்த நேரத்தில் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த சவக் கிடங்கில் ஒரு கலாட்டா ஆரம்பமானது..**

ரோம் நகரத்தின் ஒரு பெரிய செல்வந்தர், போஸ்ட் மார்ட்டம் செய்யும் டாக்டரிடம் கோபா வேசமாக கத்திக் கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

"ஒரு கணம் கூட நான் தாமதிக்க முடியாது. என் தம்பியின் பிணத்தை குறித்த நேரத்தில் சம்பிரதாயப்படி அடக்கம் செய்தாக வேண்டும். சர்ச் பாதிரியார் எனக்காக அப்பாயின்ட்மெண்ட் நேரத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டார்.

இந்த நிமிடமே என் தம்பியின் பாடியை என்னிடம் ஒப்படைக்கிறீர்களா..? அல்லது கொடுக்க மாட்டேன் என்று ஆஸ்பத்திரி சீல் வைத்து எழுதிக் கொடுங்கள் . அப்புறம் நான் பேச மாட்டேன். என் வக்கீல் பேசுவார்.."

போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் வெலவெலத்துப் போய் விட்டார்.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரிடம், கலந்து பேசினார். அவர்கள் போலீஸ் அதிகாரிகளிடம் பிரச்சனைகளை விளக்கினார்கள்.

போலீஸ் அதிகாரி, "பாடியை யார் க்ளைம் செய்வது?" என்று கேட்டார்.

அந்த செல்வந்தரின் பெயரைக் கேட்டதும், "சிக்கல் வேண்டாம். டெட் பாடிதானே.... அனுப்பி விடுங்கள்.. !" என்று அனுமதி கொடுத்து விட்டார்.



Scanned by CamScanner

அப்பொழுது ஒரு கூன் விழுந்த உருவம், சவக் கிடங்கின் இருட்டானப் பகுதியில் ஒளிந்து ஒளிந்து வந்து கொண்டிருந்தது. வெளியில் அனுப்பப்பட வேண்டிய அந்த டெட் பாடியின் போர்வையை, மெதுவாக நீக்கியது. டெட் பாடியை அவசரமாக இழுத்துக் கொண்டு போய், அந்த அறையின் கோடவுன் மாதிரி இருந்த ஒரு பழைய ரூமில் தள்ளிக் கதவைச் சாத்தியது.

பிறகு, அவசரமாக வந்து டெட் பாடி இருந்த ஸ்ட்ரெச்சரில் படுத்து, வெள்ளைப் போர்வையை இழுத்து, தன் மேல் மூடிக் கொண்டது. பிறகு தன் இடுப்பில் ஆபரேஷன் தியேட்டரில் திருடிய கத்தி, பத்திரமாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொண்டது.

சிறிது நேரத்தில் சவக் கிடங்கின் சிப்பந்திகள் அந்த ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு சவக் கிடங்கை விட்டு வெளியே வந்தார்கள்.

அடுத்த அரை மணி நேரத்தில் அந்த கறுப்பு வேன், ஸ்ட்ரெச்சரை சுமந்து கொண்டு, நகரத்தை விட்டு ஒதுங்கி ஒரு ஹை வேயில் போய்க் கொண்டிருந்தது. பாதையின் இரண்டு பக்கங்களிலும், ஓக் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன.



Scanned by CamScanner

பாடிக்குப் பாதுகாப்பாக, வேனுக்குள் ஒரு பாடி கார்டும் இருந்தான்.

வேன் ஒரு வளைவில் அவசரமாக திரும்பியது. அப்போது, 'கணங்' கென்ற சத்தத்துடன் ஸ்ட்ரெச்சரில் இருந்த பாடியின் இடுப்பிலிருந்து அந்த கத்தி கீழே விழுந்தது. பாடி கார்டு ஆச்சரியத்துடன் பார்த்தான். அவன் ஆச்சரியம் அத்தோடு நிற்கவில்லை. **கத்தி கீழே விழுந்த அடுத்த கணம், செத்துப் போன அந்தப் பிணத்தின் ஒரு கை நிதானமாக வெளியில் வந்து அந்த கத்தியை தன் விரல்களால் தடவி எடுத்து, மீண்டும் போர்வைக்குள் சென்று மறைந்தது.**

பெருத்த உடல் கொண்ட அந்த பாடிகார்டு அதிர்ச்சியில் உடல் குலுங்க, 'ஓ' வென்று கத்தினான். வேனை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர், கேபின் ரூமிலிருந்த ஜன்னல் வழியாக வேனுக்குள் பார்த்தான். அடுத்தநிமிடம் அவன் ஸ்டெடியாய் பிடித்திருந்த கையும், 'வெட வெட' என நடுங்க ஆரம்பித்தது.

காரணம், செத்துப் போன **போஸ்ட் மார்ட்டம் செய்து கூறு போடப் பட்ட** தன் முதலாளியின் தம்பி, முழுசாக ஸ்ட்ரெச்சரில் இருந்து எழுந்ததை, மூடப் பட்ட வேனின் இருட்டில் பார்த்து விட்டான். வேன் திசை மாறி தள்ளாடி ஒரு மரத்தில் மோதாமல் தப்பித்து, 'சடன் பிரேக்' போட்டு நின்றது.

வேன் நின்ற அதே நொடியில் உள்ளேயிருந்த பாடிகார்டு, அலறிப் புடைத்துக் கொண்டு, வேனின் பின்புறக் கதவை எட்டி உதைத்து, திறந்து கொண்டு சாலையில் தலை தெறிக்க ஓடினான்.

அந்த கூன் விழுந்த உருவம், பாடிகார்டு வேன் கதவை திறந்ததற்கு, மனதுக்குள் நன்றி சொல்லிவிட்டு நிதானமாக ஸ்ட்ரெச்சரிலிருந்து கீழே இறங்கி, நடந்து போனது.

சடன் பிரேக் போட்டு விட்டு ஸ்தம்பித்துப்போய் இதைப்பார்த்துக் கொண்டிருந்த வேன் டிரைவரின் நாக்கு வறண்டு விட்டது. அவனால் கத்தவும் முடியவில்லை. வேனை விட்டு இறங்கி ஓடவும் முடியவில்லை.

அந்த கூன் விழுந்த உருவம் சர்வ சாதாரணமாக வேனை விட்டு இறங்கி ஹை வே ரோடில் நடந்து அடர்ந்திருந்த ஓக் மரங்களின் இருட்டில் மறைந்தது.

**சி**ல மணி நேரம் கழித்து, சோபியாவின் தோட்டத்துப் பங்களாவில் பிரதான வாசல் லைட்டுக்கள் தவிர அனைத்தும் அணைக்கப்பட்டு, பிரம்மாண்டமான அந்த

Scanned by CamScanner








## வாடிக்கையாளர்களே!

உங்கள் 'வசந்த் & கோ'விலிருந்து பொருட்களை வாங்கி, எங்களை ஊக்குவிக்கிறீர்கள்! இனியும் நீங்கள் 'வசந்த் & கோ'விலிருந்து வாங்க விரும்புகிறீர்கள்!

இதற்குக் காரணம் –

1. குறைந்த விலை
2. உங்கள் தேவையறிந்து சேவை
3. பலதரப்பட்ட தயாரிப்புகள்
4. உயர்தரப் பொருட்கள்
5. விற்பனைக்குப் பின் சிறந்த சேவை






Vasanth

# வசந்த் & கோ

சென்னை, மற்றும் கிளைகள்.


Scanned by CamScanner

பங்களா, இருளில் மூழ்கி இருந்தது.

ஏதோ ஒரு பெரிய அசம்பாவிதம், நடக்கப் போவதற்குண்டான அறிகுறியாக வெகு தூரத்தில் ஒரு காட்டு நரி விடாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

தோட்டத்து பங்களாவை ஒட்டியிருந்த உயரமான மரக் கிளையிலிருந்து, படபடவென இரண்டு மூன்று ஆந்தைகள் சிறகடித்துப் பறந்தன.

**அந்த மரக்கிளையிலிருந்து, கூன் விழுந்த அந்த உருவம், இருட்டோடு இருட்டாக பங்களாவின் மொட்டை மாடியில் எட்டிக் குதித்தது. அந்த இருட்டிலும், அதன் இடுப்பிலிருந்த பளபளப்பான ஆபரேஷன் தியேட்டர் கத்தி, மின்னியது !**

அந்த கூன் விழுந்த குகை மனிதன், சோபியா மேடத்தின் மொட்டை மாடியில் எட்டி குதித்ததும்

உடனே அவசரப் படவில்லை. வெகு நிதானமாக அந்த இருட்டான பகுதியில் மறைந்து ஒளிந்து கொண்டான்.

வெகு நேரம் வரை ஏதேனும் நடமாட்டம் தெரிகிறதா? என்று கவனித்துக் கொண்டே இருந்தான். ஏறத்தாழ ஒரு அரை மணி நேரம் அவன் அப்படியே பதுங்கிய நிலையிலேயே நகராமல் இருந்தான்.

அவன் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், 'இறுதிக் கட்டத்தில் ஒரு சின்னத் தவறு கூட நேரக் கூடாது.' என்ற முன் எச்சரிக்கையுடன் இருந்தன.

ஒட்டு மொத்த பங்களாவிலும், எந்த விதமான நடமாட்டமும் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட அந்த குகை மனிதன், நிதானமாக இருட்டிலிருந்து வெளியே வந்தான். மிகச் சரியாக மொட்டை மாடியின் வலது கோடிக்கு வந்தவன், அங்கிருந்து கீழ் நோக்கி இறங்கும் பைப்பில் சறுக்க ஆரம்பித்தான்.

நாலாவது மாடி...

மூன்றாவது மாடி....

இரண்டாவது மாடி... அந்த இடத்தில் சறுக்குவதை நிறுத்தினான். சுவரோடு ஒட்டியிருந்த விளிம்பில் வெகு சிரமப்பட்டு நடந்தான்.

அந்த இரண்டாவது மாடியில், சோபியாவின் படுக்கை அறை இருப்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது?

இரண்டாவது மாடியின் முகப்பில், ஒரு விஸ்தாரமான அலங்கார வளைவு இருந்தது. அந்த அலங்கார வளைவின்

Scanned by CamScanner

மூலமாக மிகச் சுலபமாக வராண்டாவில் இறங்கி விட்டான் குகை மனிதன். அங்கேயும் உடனடியாக நடந்து போகாமல், வராண்டாவின் ஒரு மூலையில் இருந்த பிரம்மாண்டமான தூணின் இருட்டில், வெகு நேரம் பதுங்கி நின்றான்.

யாருடைய நடமாட்டமும் அந்த மாடியில் இல்லை. சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்யும் காவலாளிகள், பங்காளாவின் வாயில் பகுயில்தான் தூங்கிக் கொண்டிருந்தர்கள்.

எந்த நேரமும், பங்களாவை கண்காணித்துக் கொண்டிருக்கும் சோபியாவின் மெய்க்காப்பாளன் ஆண்டனி, இப்போது போலீஸ்



Scanned by CamScanner

பிடியில் !

எனவே, குகை மனிதன் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஒரு கூன் விழுந்த மிருகத்தைப் போல ஆடி அசைந்து சோபியாவின் பெட்ரூம் அருகில் வந்தான். தன் கையில் இருந்த கத்தியால் ஜன்னல் தாழ்ப்பாளை ஓசைபடாமல் நெம்பித் திறந்தான்.

பெட்ரூம் விளக்கு மிக மங்கலாகத் நீல நிறத்தை பரப்பிக் கொண்டிருந்தது.

பெட்ரூமின் மத்தியிலிருந்த கட்டிலில் கொசுவலை, காற்றில் லேசாக ஆடி அசைந்தது. சோபியா அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கலாம். அதற்குப் பிறகு, குகை மனிதன் கால தாமதம் செய்ய வில்லை.

இடுப்பில் கத்தியை சொருகிக் கொண்டு, இரண்டு கைகளாலும் ஜன்னல் விளிம்பில் ஓசை படாமல் ஏறினான். காலடி ஓசை கேட்டு விடக் கூடாதே என்று சர்வ ஜாக்கிரதையாக பெட்ரூமுக்குள் இறங்கினான். மீண்டும் ஜன்னலை பழையபடியே மூடி, மிக கவனமாக தாழ்ப்பாளைப் போட்டான்.

அந்த விகாரமான குகை மனிதனின் முகத்தில், ஒரு வெற்றிப் புன்னகைப் பரவத்தான் செய்தது. தனது இலக்கை வெகு சமீபத்தில் நெருங்கி விட்ட ஆர்வம் அவன் உடல் எங்கும் பரவியது. இடுப்பில் இருந்த கத்தியை வெளியே எடுத்தான்.

இனி தாமதிக்க வேண்டிய அவசியமே இல்லை. விரைவாக நடந்தான். நீளமாகத் தொங்கும் கொசு வலையைக் கூட அகற்றி விட அவன் விரும்பவில்லை.

**வெறிப் பிடித்த நிலையில் தன் வலது கையில் முழு பலத்தையும் சேர்த்துக் கொண்டு, கத்தியை சோபியாவின் மேல் பாய்ச்சினான்.**

மிகச் சரியாக தலைப் பகுதியிலுள்ள தலையணைக்கு ஒரு அடி கீழிறங்கித்தான் சோபியாவின் மார்புப் பகுதியை இலக்காக வைத்து, குகை மனிதன் கத்தியைப்பாய்ச்சினான். கத்தி, தடிமனான போர்வையைக் கிழித்துக் கொண்டு, குகை மனிதன் எதிர்பார்த்தது போலவே, மிருதுவான மெத்தையையும் தாண்டி, அதைத் தாங்கியுள்ள பர்மாத் தேக்கு பலகை வரை, சென்று குத்திட்டு நின்றது.

ஆனால், சோபியா போட்டிருந்த போர்வை கூட ஆட்டம் கொடுக்கவில்லை. அவள் கத்த முடியாதபடி மரணம் அவளைத் திக்குமுக்காடச் செய்து விட்டதா?

'ஆழ்ந்த தூக்கம் என்ற தற்காலிக மரணத்திலிருந்து, கொஞ்சம் கூட நினைவு திரும்பாமல், நிரந்தரமான

Scanned by CamScanner

சாவுக்கு சோபியா குடிபெயர்ந்து விட்டாளா? இருக்கலாம்.

என்ன நடந்தது என்று கொஞ்சம் கூட தெரியாமல், அந்த சோபியா சாவை சந்திப்பது குகை மனிதனுக்கு சம்மதம் இல்லை போலும். தன்னைக் குத்துவது யார்? கொல்வது யார்? என்பதை மரணத்தின் விளிம்பிலேனும் அவள் விழிகள் பார்த்து விட வேண்டும். அந்த விழிகளில் ஏற்படும் மிரட்சியை, அவஸ்தையை, இவன் ஒரு கணமேனும் பார்த்து ரசிக்க விரும்பினான்.

போர்வையை விலக்கி சோபியாவின் சங்குக் கழுத்தை முரட்டுத்தனமாக மேலே நிமிர்த்திய வேகத்தில், அவளின் அடி வயிற்றில் தன் கூரான கத்தியை ஆழமாக பாய்ச்ச விரும்பினான்.

இரண்டாவது முறையும் கத்தியைப் பாய்ச்ச தயாரான நிலையில் குகை மனிதன் விசுக்கென்று போர்வையை விலக்கினான்.

**'போர்வைக்குள் சோபியா இல்லை.'**

அந்த சோபியா இப்போது நடுக் கூடத்தில், ஒற்றை மெழுகு வர்த்தி வெளிச்சத்தில் அமரரான தன் கணவரின் 'போர்ட்ரைட்' (Portrait) முன்னால் கதறிக் கொண்டிருந்தாள்.. தனக்கு முன்னால் ஆளுயரத்தில் வரையப்பட்டிருக்கும் அந்தப் படத்திலிருக்கும் உருவம் தான் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறது என்ற பாவனையிலேயே கண்ணீர் விட்டு, அவள் அழுதாள்.

இதற்கு முன்னாலும், பல தடவை சோபியா, அந்தப் புகைப்படத்திற்கு முன்னால், தன் உடைகளை களைந்து போட்டு விட்டு, அழுதிருக்கிறாள். இப்போது அவள் குரல் முன்னைக் காட்டிலும், உருக்கமாகவும், உரக்கவும் தொனித்தது.

"என்னை எதற்காக இப்படிச் சித்திரவதை செய்கிறீர்கள். நான் மனதறிந்து எந்தப் பாவமும் உங்களுக்குச் செய்யவில்லை. விபரம் தெரியாத வயதில் எனக்குத் திருமணம் செய்து வைத்ததால் என் இளமை கெட்டு விடும், என்ற தவறான கணிப்பில் தான் நான் உங்கள் இச்சைக்கு பல தடவை கட்டுப் பட மறுத்திருக்கலாம்.

அப்போதெல்லாம் 'என்னை எதற்காக இந்த காமுகனுக்கு கல்யாணம் செய்து வைத்தார்கள்?' என்று உங்களை ஏசியது உண்மைதான். விபரம் தெரியாமல் நான் வெறுப்பாக பேசிய வார்த்தைகளை என் அண்ணன், பேராசைக்காரன் கிரிகாரியோ, தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான்.

Scanned by CamScanner

சொத்துக்கு ஆசைப்பட்ட அவன் உங்களை திட்டம் போட்டு, கொலை செய்துவிட்டான். சத்தியமாக நீங்கள் படகுப் போட்டியில் கலந்து கொண்டு, ஒரு பயங்கமான சுழலில் மாட்டி இறந்து விட்டதாகத்தான் கிரிகாரியோ என்னிடம் சொன்னான்.

ஆனால் இந்தப் பேராசைக்காரன் சொத்துக்காக உங்களை கொலை செய்த விஷயத்தை, அவன் சாகும் போது தான், தன் வாயாலேயே கூறினான்..

ஆரம்பத்திலேயே அவன் உங்களை கொலை செய்தது தெரிந்திருந்தால் நானே அவன் கழுத்தை நெறித்துக் கொன்றிருப்பேன். உங்களின் நினைவாக, என் வயிற்றில் வளர்ந்த குழந்தை பிறந்த போதுதான், கிரிகாரியோ உங்களைக் கொலை செய்திருக்கிறான்.

உங்கள் குழந்தை என் கைகளில் தவழ்ந்த பொழுது தான் எனக்கு தாம்பத்தியத்தின் பெரிய உண்மைகள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. செக்ஸ் என்பது புனிதமானது. உயரிய நோக்கமுடையது.

ஜீவனுள்ள ஒரு குழந்தையை, கணவன் ஒருவனால்தான் ஒரு பெண்ணுக்கு கெளரவமான முறையில் கொடுக்க முடியும் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டேன்.

அதற்குப் பிறகுதான், நீங்கள் இல்லாத வெறுமை என்னை வாட்ட ஆரம்பித்தது. நான் அப்போதே வைரத்தைப் பொடி செய்து, ஏதாவது ஒரு பானத்தில் கலந்து சாப்பிட்டு மடிந்திருக்க வேண்டும்.

ஆனால், நம் குழந்தை லீனா அனாதையாகி விடுவாளே என்ற ஆதங்கத்தில் தான் நான் இன்னும் உயிரை கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், இப்போது நான் உயிரையே வைத்திருக்கும், நம் குழந்தை லீனாவும், என் கையை விட்டுப் போய் விட்டாள்.

இனி நான் வாழ்வதில் அர்த்தமே இல்லை. என்னையும் நீங்கள் இருக்கும் இடத்திற்கே அழைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொர்க்கத்தில் இருந்தாலும் சரி.. நரகத்தில் இருந்தாலும் சரி.. இனிமேல் நான் உங்களுடன் தான் இருக்கப் போகிறேன்.

இனியாவது என்னை மன்னித்து, நீங்கள் இருக்கும் இடத்தில் அழைத்துக் கொள்ளுங்கள். இனி ஒரு கணமும், இந்தச் சித்திரவதைகளை என்னால் தாங்க முடியாது!'' என்று கூறியபடி இதுவரை மண்டியிட்டு இருந்த சோபியா மேலே எழுந்தாள்..

அமரரான தன் கணவரின் படத்திற்கு முன்னால் ஒரு அலங்கார

Scanned by CamScanner

மேஜை இருந்தது. அதன் மேல் ஒரு பெரிய கண்ணாடி டம்ளர்— கால் வாசி திராட்சை சாறால் நிரப்பப்பட்டு இருந்தது. அந்தக் கண்ணாடி டம்ளருக்கு பக்கத்தில் வைரப் பொடி ஒரு பேப்பரில் பளபளப்பாக மின்னிக் கொண்டிருந்தது. மேலே எழுந்த சோபியா அந்த வைரப் பொடியை கண்ணாடி தம்ளரில் கொட்டினாள் நன்றாகக் கலக்கினாள்.

அடுத்த நிமிடம் எதிரிலிருந்த படத்தைப் பார்த்து கண்ணீர் விட்டபடி, மடமடவென்று வைரப் பொடி கலந்த அந்த விஷத்தை, ஒரே மடக்கில் குடித்து விட்டாள்.

# 9

வைரப் பொடி கலந்தஅந்த திராட்சைச் சாறு சோபியாவின் தொண்டையில் இறங்க ஆரம்பித்த போது —

“செர்ரி.... அடிப்பாவி.... செர்ரி...!”



என்ற ஒரு குரல் சோபியாவின் செவிப்பறையில் மோதி, எதிரொலித்தது.

அந்தச் ‘செர்ரி’ என்ற வார்த்தையைக் கேட்டவுடன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்ளும் நேரத்தில் கூட நடுங்காத, சோபியாவின் கைகள் பதற்றத்தோடு நடுங்க ஆரம்பித்தன. காரணம், ஊரெல்லாம் தன்னை சோபியா மேடம் என்று கூப்பிட்டாலும், தன் கணவர் லாரன்ஸ் ட்யூக் மட்டும் எப்பொழுதும் “செர்ரி... செர்ரி....” என்று தான் ஆசை பொங்க அழைப்பார்.

படகுப் போட்டியில் விபத்து என்ற பெயரில் பேராசைக்காரனான கிரிகாரியோவால் பரிதாபமாகக் கொலை செய்யப்பட்ட, சோபியாவின் கணவரான அந்த லாரன்ஸ் ட்யூக் இப்போது அமரராகி, மெழுகுவர்த்திப் பிரார்த்தனையில், ஆளுயரப் புகைப்படமாக மௌனத்தில்

Scanned by CamScanner

நின்று கொண்டிருந்தார். அந்தப் புகைப்படம் இப்போது பேச ஆரம்பித்து விட்டதா என்ன?

'செர்ரி என்று தன்னை இவ்வளவு உரிமையோடு யாருமே அழைக்க முடியாதே...! ஒரு வேளை ... வைரப் பொடி தொண்டையில் இறங்க ஆரம்பிக்கும் பொழுதே, மரணம் தன்னை வாயில் திறந்து வரவேற்றுக் கொண்டதா?

அந்த நுழைவாயிலில் தனக்காக தன் கணவர் **லாரன்ஸ் ட்யூக்**, தயாராகக் காத்துக் கொண்டு நிற்கிறாரா? அப்படிக் காத்திருக்கும் தன் கணவர் தான் **'செர்ரி'** என்று உணர்ச்சி பூர்வமாக அழைக்கிறாரா? இப்படி மரணக் குழப்பத்தில் தடுமாறிக் கொண்டிருந்த சோபியாவின் கையை அப்போது முரட்டுத்தனமாக யாரோ தட்டி விட்டார்கள்... சோபியாவின் கையிலிருந்த வைரப்பொடி கலந்த திராட்சை ரசம், டம்ளரோடு தரையில் கொட்டியது.

தரையில் நட்சத்திரங்கள் அதிசயமாகத் தோன்றியது போல் அந்த திராட்சை ரசத்தில் வைரப்பொடி திரவத்தோடு தரையில் வழிந்து மின்னியது.

தன் கையிலிருந்த விஷத்தை, தட்டி விட்டது யார் என்று அச்சத்தோடுத் திரும்பிப் பார்த்தாள்..

**மிக அருகாமையில்.... ஒரு கூன் விழுந்த, பூதம் போல் அந்த குகை மனிதன் நின்று கொண்டிருந்தான்.**

வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் இவ்வளவு நெருக்கத்தில் அந்த குகை மனிதனைப் பார்த்ததும் சோபியா பயந்து மிரண்டு, கத்தியிருப்பாள்.. ஆனால் சாவையே சந்திக்கத் துணிந்துவிட்ட சோபியாவுக்கு அச்சம் ஏது..? துக்கம் ஏது?

குகை மனிதனைப் பார்த்த உடன் சோபியாவின் ஆக்ரோஷம், அழுகையாக பீறிட்டு வெடித்தது. 'தன் உயிருக்குயிரான குழந்தை லீனாவை கடத்திக் கொண்டு போய், சித்திரவதை செய்து கொன்றவன், இந்த குகை மனிதன் தானே..!' இப்போதும் இவன் கையில் கத்தியோடு தான் வந்திருக்கிறான்.

இந்த குகை மனிதன், தன்னைக் கொன்று விடுவானோ என்ற அச்சம் இப்போது அவளுக்கு இல்லை.. எப்படியும் வைரம் கலந்த திரவத்தைக் குடித்து விட்டோம். சாவது உறுதி.. அதற்குமுன், இந்த கொடூரமான குகை மனிதன் கையில் இருக்கும் கத்தியை பிடுங்கி, அதாலேயே அவனைக் கொன்று விட்டு, பிறகு சாவது கூட நல்லதுதான்.

சோபியா ஒரு பெண் புலியைப் போல கோபாவேசத்தோடு குகை மனிதன் மேல் பாய்ந்து, அவன்

Scanned by CamScanner

கையில் இருந்த கத்தியை பிடுங்க முயன்றாள்.. அப்போது.. மீண்டும், அந்த மாயக் குரல் கேட்டது.

"செர்ரி..... செர்ரி.....!"

இப்பொழுது சோபியாவின் பார்வையில் சந்தேகமில்லாமல் அந்த வார்த்தைகள் எதிரிலிருந்த குகை மனிதன் வாயிலிருந்து தான், வந்து கொண்டிருந்தது புரிந்தது.

உடம்பில் உள்ள ஒட்டு மொத்த ரத்தமும் உறைந்து விடும் அதிர்ச்சியோடு அந்த குகை மனிதனை, இப்போதுதான் மிக நெருக்கத்தில் பார்த்தாள். அவன் முகம்... அடித்து நொறுக்கப் பட்ட ஒரு இரும்புப் பாத்திரம் போல, கரடு முரடாகத்தான் சிதைந்திருந்தது.

முகத்தில் ரோமங்கள், கட்டாந்தரையில் வளர்ந்த புல்லைப் போல தாறு மாறாக முகத்தை மறைத்துக் கொண்டிருந்தன. இருந்தாலும்.. அந்த உதடுகள்..... அதோ மேலுதட்டின் இடது கோடியில் ஒரு மச்சப் புள்ளி..... அது, லாரன்ஸ் ட்யூக்கிற்கு இருப்பதைப் போலவே இருக்கிறதே!

இப்பொழுதும் உருக்கமாக அந்த குகை மனிதனின் உதடுகள் சோபியாவைப் பார்த்து,

"செர்ரி.....செர்ரி.....!" என்று உச்சரித்தது.

அதிர்ந்து போனாள், சோபியா. குரல் கொஞ்சம் கரகரப்பாக இருந்தாலும் இது.... அவளுடைய கணவரின் கம்பீரமான குரல்தான்..! குகை மனிதன், கண்ணீரோடு பேச ஆரம்பித்தான்.

"அடிப் பாவி செர்ரி.. நீ செத்தாலும் என்னோடுதான் சேரப் போவதாக போட்டோவுக்கு முன்னால் கண்ணீர் விட்டு கதறுகிறாயே.. என் மேல் இப்போதும் இவ்வளவு பிரியம் உள்ள நீ.. அந்த கிரிகாரியோவை விட்டு என்னைக் கொல்ல சதி செய்ததாக நினைத்துவிட்டேனே! நான் கொள்ளை ஆசையாக உன்னை நமது திருமண நாளன்று கட்டி அணைக்க வந்த போது... 'செத்துத் தொலை..! என் கிட்டே வராதே!' என்று என் முகத்தில் அடித்தாற் போல் பேசிய நீயா, இன்று செத்தாவது என்னோடு சேர விரும்புகிறாய்? "

குகை மனிதன் இப்படி தெள்ளத் தெளிவாக, தன் அந்தரங்கங்களை ஒவ்வொன்றாகச் சொல்லச்சொல்ல, சோபியாவின் கண்கள் மட்டும் மெல்ல மெல்ல சொருக ஆரம்பித்து விட்டன.. அதற்கு மேலும் அந்த குகை மனிதன்.... இல்லை ..... சோபியாவின் கணவர் லாரன்ஸ் ட்யூக் கதறிக் கதறி சோபியாவைப் பார்த்து கேட்ட கேள்விகள்

Scanned by CamScanner

எதுவும் அவள் காதுகளில் விழவே இல்லை? டம்ளரிலிருந்து வைரப் பொடி கலந்த திராட்சை ரசத்தில் கொஞ்சமேனும் சோபியாவின் தொண்டையில் இறங்கிய அவஸ்தையில் சோபியா, தன் சுயநினைவை இழந்து, மயங்கி விழுந்து விட்டாள்.

அதற்குப் பிறகு என்ன நடந்தது என்ற விபரங்கள் ரோம் நாட்டுப் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக பரபரப்போடு வந்தன.

அதன் மூலம் தான், எல்லா மர்மங்களும் சஸ்பென்ஸ்களும் ஓரளவு தெளிவு படுத்தப்பட்டது. ஐந்தாறு வாரங்களாக வந்த அந்தச் செய்திகளை, தொகுத்து தேதி வாரியாக கீழே தந்துள்ளோம்.

### மே 2

**சோபியா மேடத்தின் கணவர் லாரன்ஸ் ட்யூக் உயிரோடிருக்கிறார் ! லாரன்ஸ் ட்யூக் தான் குகை மனிதன் !**

### மே 7

**சோபியா மேடத்தின் மெய்க்காப்பாளனாக நடித்த ஆண்டனி, ஜெயிலில் இருந்து தப்பி ஓடிய ஒரு பயங்கரவாதி. !**

### மே 7 (மாலை பதிப்பு )

**'தி கிராண்ட் பஸாரியோ மருத்துவமனை 'யில் அட்மிட் செய்யப்பட்ட சோபியா மேடத்தின் உடல் நிலை இன்று கவலைக்கிடம் !**

### மே 18

**சோபியா மேடத்தின் கணவர் மேல் போலீஸ் 'அரெஸ்ட் வாரண்ட்' பிறப்பித்துள்ளது !**

### மே 22

**ஆண்டனி – ஜெயில் கைதி – போலீசில் இருந்து தப்பிவிட்டான். கண்டதும் சுட போலீஸ் ஜெனரல் உத்தரவு !**

### ஜூன் 4

**சோபியா மேடத்தின் குழந்தை லீனா உயிரோடு கிடைத்து விட்டாள். குகை மனிதனாக உலவிய லாரன்ஸ் ட்யூக், குழந்தை லீனாவை செயின்ட் பீட்டர் சர்ச்சின் பாதிரியாரிடம் கொடுத்து வைத்திருந்தார் !**

இப்படி அதிரடி நியூஸ்களாக பத்திரிகையில் வந்து கொண்டே இருந்தது. அதில் "சைக்கோ" என்ற பெயரில் ரோம் நாட்டில் வெளி வந்த ஒரு உளவியல் பத்திரிகை ஒன்று, சோபியாவின் வாழ்க்கை அந்தரங்கங்களை மிகத்

Scanned by CamScanner

துணிச்சலாகத் துருவி ஆராய்ந்து, ஒரு மனோ தத்துவக் கட்டுரை எழுதியிருந்தது.

'சோபியா மேடத்துக்கு தன் பிரமிப்பூட்டும் அழகின் மேல், அதிக கர்வம் இருந்தது. இந்த கர்வம் அவளது அடி மனதில் ஆழமாகப் பதிந்து, அவளின் திருமண வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

தாம்பத்தியத்தின் உள்ளார்ந்த உண்மைகள், புரிபடாத சின்ன வயதிலேயே சோபியாவை, பிரபுக்கள் வம்சத்தில் பிறந்த லாரன்ஸ் ட்யூக்கிற்கு வற்புறுத்தி திருமணம் செய்து வைத்து விட்டார்கள். லாரன்ஸ் ட்யூக், தன்னுடைய தேவதை போன்ற மனைவியை அதீதமாக நேசிக்க ஆரம்பித்தார். அனுபவிக்கவும் ஆசைப் பட்டார். லாரன்ஸ் ட்யூக்கின் நேரம் காலம் இல்லாத அணைப்புகள் சோபியாவுக்கு இல்லற வாழ்க்கையில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி விட்டது.

'திருமணமே வேண்டாம்' என்ற மன நிலையில் இருந்த சோபியா விரைவில் தான், குழந்தைகளை பெற்றெடுக்கும் மிஷினாக மாறி விடுவோமோ என்று பயப்பட ஆரம்பித்தாள்.

அந்தத் தவறான நினைப்பு , கணவர் லாரன்ஸ் ட்யூக்கின் மீது ஒரு தீராத வெறுப்பை ஏற்படுத்தி விட்டது.

இந்த நிலையில், சோபியா ஒரு நல்ல 'சைக்கோ' டாக்டரை சந்தித்திருந்தால் கூட, அவளது தவறான அபிப்பிராயங்கள் மிகச் சுலபமாக தீர்க்கப்பட்டிருக்கும். அவள் அடிக்கடி மனம் வெறுத்து தன் கணவரைத் திட்டியதை, சொத்துக்கு ஆசைப்பட்ட கிரிகாரியோ தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான்.

மலைப்பள்ளத்தாக்கில், உருண்டோடும் 'சாக்கோ' நதியில் நடந்த ஒரு படகுப் போட்டியின் போது, கிரிகாரியோ தன் கையிலிருந்த முரட்டுத் துடுப்பால், லாரன்ஸ் ட்யூக்கை அடித்து, ஆற்றில் தூக்கிப் போட்டு விட்டான் !

படகு விபத்தில் லாரன்ஸ் ட்யூக் பலியானதால் அவர் உடல் கூட கிடைக்கவில்லை என்று கிரிகாரியோ கதை கட்டி விட்டான்.

இந்த நிலையில், ஏற்கனவே தன் கணவரால் கர்ப்பமுற்ற சோபியாவின் வயிற்றில் குழந்தை வளர ஆரம்பித்தது. தாய்மையின் சுகத்தை, சோபியா மெல்ல மெல்ல அப்போதுதான் உணர ஆரம்பித்தாள்.

'லீனா ' என்ற குழந்தை பிறந்த போது, சோபியாவுக்கு இல்லறத்தின் பரிபூரண அர்த்தம் புரிந்து விட்டது. மறைந்து போன கணவரின் அருமை பெருமைகளை உணர ஆரம்பித்தாள்.

Scanned by CamScanner

கிரிகாரியோவால் கொடூரமாக மரத்துடுப்பால் தாக்கப்பட்டு ஆற்றில் தூக்கி எறியப்பட்ட லாரன்ஸ் ட்யூக், அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பி ஒரு மலைப் பள்ளத்தாக்கின் வனாந்திரப் பகுதியில் கரையேறி விட்டார்.

கிரிகாரியோ, அவரை அடித்து நொறுக்கும் போது கூட, "உன் ஆசை மனைவிதான் உன்னை அடித்துக் கொல்லும்படி சொல்லி விட்டாள். இனி எதற்காக நீ உயிர் வாழ்கிறாய் ?" என்று சொல்லிச் சொல்லி இடுப்பு எலும்புகளை மரத்துடுப்பால் அடித்து முறித்திருக்கிறான்.

அப்படி இருந்தும் இடுப்பொடிந்து கூன் விழுந்த நிலையில் உயிர் தப்பிய லாரன்ஸ் ட்யூக், தன் அடிபட்டு நொறுங்கிய விகாரமான முகத்தை ஆற்று நீரில் பிம்பமாகப் பார்த்து கதறியிருக்கிறார். உயிர் பிழைத்தாலும், இந்த விகாரமான தோற்றத்துடன் யார் முகத்திலும் விழிக்க அவர் விரும்பவில்லை.

ஒரு அழகான மனைவியை ஆசையோடு நேசித்த காரணத்துக்காகவா, தனக்கு இப்படி ஒரு தண்டனை என்ற சிந்தனைகள் லாரன்ஸ் ட்யூக்குக்கு ஒரு கொலை வெறியை ஏற்படுத்தி விட்டது.

சோபியாவையும், கிரிகாரியோவையும் பல முறை கொல்லத் திட்டமிட்டார். பாஸ்டினா குகையில் குகை மனிதனாக ஒளிந்து மறைந்து, வாழ்ந்தார். குகை மனிதனைப் பற்றிய வதந்திகள் பலவிதமாக பரவியது.

இதைக் கூட கிரிகாரியோ தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

குகை மனிதன் கொலை வெறி கொண்டவன் ! இளம் பெண்களை கற்பழித்துக் கொலை செய்பவன், என்று புரளியைக் கிளப்பிவிடுவதற்காகவே திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு அப்பாவிப் பெண்ணை முதலில் கொன்றான். கிரிகாரியோவின் சதித் திட்டங்களை தெரிந்து வைத்திருந்த மென்டோஸா தாத்தாவையும், டினோவையும் அவன், குகை மனிதன் ரூபத்தில் கொன்று விட்டான்.

இறுதியில் அதே குகை மனிதன் வேடத்தில் சோபியாவையும் கொன்று விட்டு, ஏராளமான சொத்துக்களை தனி ஒருவனாக அனுபவிக்கப் பார்த்தான் கிரிகாரியோ ! கொலைப் பழிகளை மட்டும் குகை மனிதன் மேல் போடத் திட்டமிட்டிருந்தான்.

ஆனால், அந்தப் பேராசைக்காரன் கிரிகாரியோ, அந்த குகை மனிதனாலேயே சாகடிக்கப்பட்டு விட்டான்.

இருந்தாலும் லாரன்ஸ் ட்யூக்குக்கு ஆத்திரம் தீரவில்லை. குழந்தை லீனாவை சோபியாவிடம் இருந்து பிரித்து, அவள் மனம் துடிதுடித்து

Scanned by CamScanner

ஓலமிடும்படி செய்தார். தன்கையை கீறி, அந்த ரத்தத்தை குழந்தை கவுனில் தடவி, அதைப் பார்த்து சோபியா அலறும்படி திட்டமிட்டுச் செய்தார்.

ஆனால் ஒரு பாவமும் செய்யாத, தான் பெற்றெடுத்த குழந்தை லீனாவைக் கொல்ல லாரன்ஸ் ட்யூக் விரும்பவில்லை. 'செயின்ட் பீட்டர் சர்ச்'சில் பாவ மன்னிப்பு க் கூண்டில் இருந்தபடி – தன்னைப் பற்றிய எந்த உண்மைகளையும் சொல்லாமல், தன் பாவங்களுக்கு மட்டும் மன்னிப்பு கேட்டு விட்டு, குழந்தை லீனாவை பாதிரியாரிடமே ஒப்படைத்திருந்தார்.

இறுதி முயற்சியாக லாரன்ஸ் ட்யூக், சோபியாவை கொல்ல அவள் வீட்டிற்கு போன போது மனமாற்றம் அடைந்த சோபியாவின் நல்ல உள்ளத்தைப் புரிந்து கொண்டார். விஷம் குடித்து, தற்கொலை செய்தேனும் தன்னுடன் சேர விரும்பிய சோபியாவின் வாக்கு மூலம், குகை மனிதனாக இருந்த லாரன்ஸ் ட்யூக்கை மீண்டும் மனிதனாக மாற்றி விட்டது.

இந்த சோபியா மேடத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட நுணுக்கமான உளவியல் பிரச்சனைகள், இன்று நாகரீகம் என்ற பெயரில் பெண்கள் மனதில் ஏற்பட்டுள்ள, பல தவறான அபிப்பிராயங்களுக்கு ஒரு நல்ல பாடமாகும். தாய்ப்பால் கொடுத்தாலே தன் வனப்பு மாறி விடும் என்று கருதும் மன முதிர்ச்சி பெறாத பெண்களுக்கெல்லாம் சோபியாவின் வாழ்க்கை ஒரு எச்சரிக்கையும் ஆகும்.

'**சை**க்கோ பத்திரிக்கையில் வந்த இந்தக் கட்டுரை, குகை மனிதன், பற்றிய பல வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைத்ததோடு, ஒரு பயனுள்ள உளவியல் கட்டுரையாகவும் அமைந்திருந்தது.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் – அதாவது ஜூன் மாதம் 15ம் தேதி, மீண்டும் ஒரு அதிர்ச்சியூட்டும் தகவல் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வந்திருந்தது.

தலை மறைவான ஆண்டனி, போலீஸ் ஜெனரலுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான். அதில் 'கிரிகாரியோவைக் கொன்றது நான்தான் என்று ஆண்டனி ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்து விட்டான்.

இந்த செய்தி பத்திரிகைகளில் வந்த அடுத்த நாள் இரவு நேரம்.. சோபியாவின் அறைக் கதவை யாரோ தட்டினார்கள்..

அறைக்குள் சோபியாவும், அவளது கணவர் லாரன்ஸ் ட்யூக்கும், குழந்தை லீனாவும் இருந்தார்கள்.

'யார் கதவைத் தட்டுவது?' என்று சோபியா உரக்கக் கேட்டாள்.

Scanned by CamScanner



Scanned by CamScanner

'நான்தான் ஆண்டனி' என்று பதில் வந்தது!

சோபியா அவசரமாக ஓடிச் சென்று, கதவைத் திறந்தாள். ஆண்டனி சிரித்த முகத்தோடு உள்ளே வந்தவன், குழந்தை லீனாவைப் பார்த்ததும் பாசத்தோடு ஓடிச் சென்று அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டு, பிறகு லாரன்ஸ் ட்யூக்கின் கைகளைப் பற்றி குலுக்கிக் கொண்டே,

"விரைவில் நீங்கள் பரிபூரண நலம் பெற பிரார்த்திக்கிறேன்.. வைரப் பொடியை சாப்பிட்ட சோபியாவையே டாக்டர்கள் ரூபத்தில் காப்பாற்றிய ஆண்டவன், உங்கள் குடும்பத்தின் மீது மிகுந்த கருணை வைத்திருக்கிறான்.

நான் அதிக நேரம் இங்கே தங்கப் போவதில்லை.. சொல்வதை மறுப்பின்றி கேட்டுக் கொள்ளுங்கள்.

என் மேல் ஏற்கனவே ஜெயில் வார்டனைக் கொலை செய்த குற்றம் சுமத்தப்பட்டு விட்டது. எப்படி இருந்தாலும், என்னை ஒரு முறைதான் தூக்கில் போடுவார்கள். எனவேதான் கிரிகாரியோவை கொலை செய்த குற்றத்தை, நானே ஒப்புக்கொள்ளப் போகிறேன்..

இவ்வளவு சோதனைகளுக்குப் பிறகு கணவன், மனைவியாக குழந்தை லீனாவோடு சேர்ந்து இருக்கும் நீங்கள், எக்காரணம் கொண்டும் பிரிந்து விடக் கூடாது.

கிரிகாரியோவைக் கொன்றது லாரன்ஸ் ட்யூக்தான் என்று இனி ஒரு போதும் ஒப்புக் கொள்ளாதீர்கள். அதனால் இப்போது அமைதியாக சேர்ந்துள்ள குடும்பத்தில் மீண்டும் புயலடிக்க ஆரம்பித்து விடும்.

நான் ஏற்கெனவே சூறாவளிகளாலும், பெரும் புயல்களாலும் தூக்கி எறியப்பட்டு, உங்களிடம் வந்து சேர்ந்தவன் தான். இனிமேல் வரும் புயல்களை தனியொருவனாகச் சந்திக்க எனக்கு மனத் துணிச்சல் இருக்கிறது.

குழந்தை லீனாவுக்கு ஒரு தம்பிப் பாப்பா பிறந்தால், தவறாமல் என் பெயரை வையுங்கள்.

போலீஸ் கமிஷனர் எனக்காகக் காத்திருப்பார். போய் வருகிறேன்" என்று கூறி விட்டு ஆண்டனி வந்த வேகத்திலேயே கதவைத் திறந்து கொண்டு போக ஆரம்பித்தான்.

ஜீரணிக்க முடியாத பல விஷயங்களால் அழுத்தப் பட்டிருந்த சோபியாவால், வாய் திறந்து ஒன்றுமே பேச முடியவில்லை.

லாரன்ஸ் ட்யூக் கூட தன் கூன் விழுந்த முதுகைக்

Scanned by CamScanner

கொஞ்சம் நிமிர்த்தி, போய்க் கொண்டிருந்த ஆண்டனிக்கு 'ஹேட்ஸ் ஆஃப்'தான் செய்ய முடிந்தது.

குழந்தை லீனா மட்டும், இந்த ஆண்டனி மாமா அடிக்கடி காணாமல் போனாலும், நிச்சயம் திரும்பி வந்து, தனக்கு ஆசையாக முத்தம் கொடுப்பார் என்ற நம்பிக்கையில் சிரித்துக் கொண்டே ஆண்டனிக்கு டாட்டா காண்பித்தது.

**முற்றும்.**

Scanned by CamScanner




Scanned by CamScanner